# தமிழரசு

16-2-1997 ரூ. 3





விடுதலைப் போராட்ட வீரர்
நூற்றாண்டு விழா


267
கோடி
நலத்திட்டம்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை







# இந்த இதழில் ...


2 மேதகு தமிழக ஆளுநர்

3 தமிழர் வரலாறு

6 செய்திச் சரம்

9 அண்ணாவின் சிறுகதை

11 இலக்கியச் சிந்தனை
- மா. செங்குட்டுவன்

17 தெரிந்து கொள்ளுங்கள்

19 தமிழுக்கு முதல் மரியாதை

22 வேளாண் பொருட்கள்

23 சட்டப்பேரவையில் முதல்வர் பதிலுரை

33 இன்பக் கடல் (நாடகம்)
- புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

40 மாணவர் பக்கம்

41 சொல்லுங்கள் பார்க்கலாம்

42 அறிவியல் துளிகள்

43 எங்கள் ஊர் பிரச்சினை

46 நூல்நயம்

47 'ஈ-மெயில்'





தமிழரசு


திருவள்ளுவராண்டு: 2028

மாசித் திங்கள் : 5

மலர்: 27 இதழ்: 16

16.2.1997

விலை: ரூ. 3



# மேதகு தமிழக ஆளுநர்

கடந்த குடியரசு நாள்முதல், தமிழகத்தின் புதிய ஆளுநராக மேதகு பாத்திமாபீவி அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

உச்ச நீதிமன்றத்தின் முதலாவது பெண் நீதிபதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பெருமை இவருடையது. தமிழ்நாட்டின் முதல் பெண்ஆளுநராகவும், முதல் முஸ்லிம் ஆளுநராகவும் பதவியேற்றுள்ள இவர் **30.4.1927**ல் பிறந்தது கேரள மாநிலத்திலுள்ள பதினம்திட்டா என்ற ஊராகும். எனவே தமிழ் நன்கு பேச வருகிறது.

"இந்தியாவிலேயே கேரளம்தான் கல்வி சிறந்த முதல் மாநிலமாகத் திகழ்கிறது. அதேபோல் தமிழகத்தையும் ஆக்கப்பாடுபடுவேன். எல்லோருக்கும் இனியவளாக இருப்பேன்" என்றெல்லாம் அவர் தெரிவித்திருப்பது, நம்மையெல்லாம் பெருமிதம் அடையச்செய்கிறது.


அறிவியலில் பட்டப்படிப்பும், சட்டக்கல்வியும் படித்துமுடித்து **1950** நவம்பர் முதல் கேரள மாநிலத்திலும் சிலவேறு மாநிலங்களிலும் வழக்கறிஞராகப் பணிபுந்திருக்கிறார் பாத்திமாபீவி அவர்கள்.

அதைத்தொடர்ந்து சார்புநிலை நீதித்துறை நடுவர் (முன்சீப்), வருமானவரி மேல் முறையீட்டு உறுப்பினர், கேரள உயர்நீதிமன்ற நீதிபதி என்கிற பதவிகளிலெல்லாம் இருந்துவிட்டு, உச்சநீதிமன்ற நீதிபதி பதவி வகித்து ஓய்வுபெற்றார். **1993**ல், தேசிய மனித உரிமைகள் கமிஷன் உறுப்பினர் ஆனார்.

**25.1.1997**ல், **16**வது–மேதகு தமிழக ஆளுநராகப் பதவியேற்றுள்ள இவருக்கு இரண்டு சகோதரர்களும், **5** சகோதரிகளும் உண்டு.

திருமணமாகாத இவர், விருதுகள் பல பெற்றவர். சமூக நலப் பணிகளில் சளைக்காமல் ஈடுபட்டுவருபவர்.

சென்னையில் இந்த ஆண்டு **(26.1.1997)** நடைபெற்ற இந்தியக் குடியரசு நாள் விழாவில், மேதகு தமிழக ஆளுநர் பாத்திமா பீவி அவர்களே தேசியக் கொடி ஏற்றி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.




டாக்டர் எஸ்கிருஷ்ணசுவாமி 'ஐயங்காரின்' தமிழ் இலக்கியத்தின்பொற்காலம்' 'தென்னிந்திய வரலாற்றின் தொடக்கம்' என்ற நூல்களும் பி.டி.ஸ்ரீனிவாச ஐயங்காரின் 'தமிழர்வரலாறு' மற்றும் 'ஆரியர்களுக்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு' என்ற நூல்களும் பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியின் 'பாண்டிய அரசு,' 'சோழர்கள்' என்ற நூல்களும் டாக்டர் கே.கே.பிள்ளயின் 'தென்னிந்தியாவும் இலங்கையும்' மற்றும் தமிழர்களின் 'சமூக வரலாறு'/என்ற நூல்களும் முதன் முதலாக இத்துறையின் அறிஞர் பெருமக்கள் வழங்கிய நுண்மாண் நுழைபுலமுடைய படைப்புகளில் சிலவாகும். இவை, இந்திய வரலாறு குறித்து, அதாவது, பெரிதும் வட இந்திய நோக்கில் எழுதப்பட்ட வரலாறு குறித்து, அப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த கோட்பாட்டிற்குச் சவாலாக அமைந்தன. அறிஞர் பெருமக்களின் இத்தகைய படைப்புகளும் இவற்றைத் தொடாந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளும், ஆரியர்களுக்கு முற்பட்ட இந்திய வரலாற்றைத் தெளிவாக நிலை நிறுத்தியுள்ளன.

தமிழர் பண்பாடு ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என பி.டி.ஸ்ரீனிவாச ஐயங்கார் கருதுகிறார். எனவே, இதனை ஆரியர்களுக்கு முற்பட்ட தமிழர் பண்பாடு என்றெடுத்துரைத்துள்ளார்.

தமிழர்கள் தத்துவத்தையும் வாழ்க்கை முறையையும்பற்றிய அறிதலில் தனித்தன்மை வாய்ந்தவர்கள். பழங்காலத் தமிழர்கள் மக்கள் வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற பூமிப்பகுதியைப் பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று இயல்பாக ஐவகை நிலங்களாகப் பிரித்திட இயலும் என்று கண்டனர். இந்த வகைப் பாட்டின் மிக முக்கிய அம்சம் அவை வெறும் புவியியல் வகைப் பாடாக மட்டுமின்றி மனித



சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சியைக் காட்டுவதாகவும் இருக்கின்றன என்பதேயாகும்.

பாலை, மணல் பரந்து வறண்டு கிடக்கும் நிலப்பகுதி இது மனிதர் நாடோடியாகத் திரிந்த நிலை. குறிஞ்சி, மலையும் மலை சார்ந்த நிலப்பகுதி. இது வேட்டையாடி உயிர் வாழ்ந்த நிலை. முல்லை, காடும் காடு சார்ந்த பகுதிகளும். இது கால்நடைகளைப் பேணிவாழ்ந்த நிலை. மருதம், ஆற்றுப் பள்ளத் தாக்குப்பகுதி இது வேளாண்மையை மேற்கொண்ட நிலை. நெய்தல், ஆறு கடலோடு கலக்கும் பகுதி. இது மனிதகுல வளர்ச்சியில் மீன்பிடித்தல், கலம் செலுத்தல் ஆகிய நிலை.

பிந்தைய நூற்றாண்டுகளில் தமிழர் சமுதாயம், சமூகப் பண்பாட்டு ஒழுக்கத்திற்கு வட நாட்டிலிருந்துவந்த மிகப் பெரிய முதல் அறை கூவலை எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

அறிவியல் தாகம், திடமான கருத்துகள் (Concrete Ideas), தங்களுக்கே உரிய கற்பனைகள் ஆகியவற்றில் தமிழர்கள் பெரு விருப்பம் கொண்டிருந்தனர். இவற்றின் வெளிப்பாடே அக்காலத் தமிழர்களின் தனித்திறமாக இருந்தது என்று பி.டி.ஸ்ரீனிவாச ஐயங்கார் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, அறிவியல் சிந்தனையை வெளிப்படுத்த தமிழ் தனிச்சிறப்படன் பொருத்தமாக உள்ளது எனலாம். வடமொழியின் தனித்திறமாகத் தத்துவத் தாகமே பெரிதும் காணப்படுகிறது. வடமொழி நூல்கள், பண்பியலான (Abstractions) கருத்துக்களைப் பொதும் சித்திரிக்கின்றன. அவ்வாறான கருத்துகள் தத்துவத்தின் உயிர் மூச்சாக விளங்குபவை.

அண்மையில், மேல்நாட்டுச்

சிந்தனைகள் இந்திய சமூகத்தின் மீது தங்கள் செல்வாக்கைச் செலுத்தவும் மாற்றியமைக்கும் வகையில் அறைகூவல் விடுக்கவும் தொடங்கியுள்ளன. மேலை நாடுகள் நம் நாட்டை நோக்கி விடுத்துள்ள அறை கூவல்களாவன.

அரசியல் அடிப்படையில் சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாடு புதுமையான ஜனநாயக அறிவு கட்டுக்கோப்பான அமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அதிகாரவர்க்கம், பொருளாதார அடிப்படையில், முறைப்படுத்தப்பட்ட வேளாண் சீர்த்திருத்தங்கள் தொழில் பொருளாதாரம் அமைப்பு ரீதியான தொழிலாளர்கள் போக்குவரத்துத் தகவல் தொடர்பு வளர்ச்சி; சமூக அடிப்படையில், சமத்துவச் சிந்தனைகள், குடிமையுரிமைகள்; அனைவருக்கும் கல்வி கற்க சம வாய்ப்புகள் மத அடிப்படையில் இறைவனைத் தந்தையாகவும் மனிதர்கள் அனைவரையும் சகோதராகளாகவும் பாவிக்கின்ற கிறித்துவத்தின் சிந்தனைகள் மனித நேயத்துடன் ஆற்றப்படும் சமயப் பணிகள்.

அரசியல் அடிப்படையில் ஏதேச்சாதிகாரமும்,பொருளாதார அடிப்படையில் நிலப்பிரபுத்துவ முறையும், சமூக அடிப்படையில் சாதிப் பாகுபாடும், மத அடிப்படையில் வைதீகத்தாக்கமும் கொண்டிருந்த இந்திய சமூகம், 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து படிப்படியாக மேலை நாடுகளின் இத்தகைய தனித்தன்மை வாய்ந்த அறைகூவல்களை எதிர்கொள்ளத் தொடங்கியது.

அனைத்து இந்தியாவிலும் முதன் முதலில் வங்காளம்தான் இம்மாறுதலை ஏற்றுக்கொண்டது



★ **அறிவினாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால், வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.**

என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். வங்காளத்தில் சமூக சீர்த்திருத்தக் கருத்துக்களை இராஜா ராம் மோகன்ராய், பிரம்ம சமாஜம் மூலம் தீவிரமாகச் செயற்படுத்த முனைந்தார்.

ஆனால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி இருபதாண்டுகளிலும், 20-ஆம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளிலும் பெரும்பான்மையான இந்தியர்களின் உணர்வுகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இதற்குப் பின்வரும் மூன்று புதிய கூறுகள் முக்கியமான காரணங்கள் ஆகும்.

மதமாற்றம் குறித்து அரசின் நடவடிக்கைகளில் ஐயப்பாடு.

சமூக சீர்த்திருத்தங்களை மேம்படுத்த பிரிட்டிஷ் அரசு காட்டிய பெருந்தயக்கமும் மிகுந்த எச்சரிக்கையும்.

ஆன்மீக உணர்வையும் தேசிய உணர்வையும் மறுதலிக்கும் நிலையிலிருந்து இந்தியாவை மீட்பதற்குச் சமய இயக்கங்கள் தோன்றின.

பெரும்பாலான இந்து இளைஞர்கள், இந்து மதம் சம்பந்தப்பட்ட அனைத்தையும் பாதுகாத்து, போற்றிப் பெருமைப் படுத்த இச்சூழ்நிலைகள் வழிகோலின. அதன் விளைவாக, தொடக்க கால சமூக சீர்த்திருத்த வாதிகள் மேற்கொண்ட முயற்சிகள் பெருமளவில் பயனற்றுப் போயின.

ஆனால், இந்தியாவின் பொதுவான இப்போக்கிற்கு மாறாக, சென்னை மாகாணத்தில், குறிப்பாகத் தமிழ் பேசும் பகுதிகளில் 1910-ஆம் ஆண்டு முதல் புதியதொரு சூழ்நிலை உருவாகத் தொடங்கியது.

1925ம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரசிலிருந்து பெரியார் பிரிந்து வந்தபோது, இந்தியாவில் சமூக சீர்த்திருத்த இயக்க வரலாற்றில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது.

இந்திய சமூகத்தின் இரு பெரும் தீமைகளை, அதாவது சாதிப் பாகுபாடு, பெண்ணடிமை ஆகிய இவ்விரண்டையும் ஒழிப்பதற்குக் புதிய அணுகுமுறையைக் கொண்டுவரும் நோக்குடன், அவர் சுயமரியாதைப் இயக்கத்தைத் தொடங்கினார். இது தனிமனிதனின் சுயமரியாதையைப் பாதிக்கிற, அனைத்துப் பாரம்பரிய அமைப்புகளுக்கும், சமூகப் பழக்க வழக்கங்களுக்கும் எதிரானதாகும். பொதுவாகக் கூறினால். இதில் கற்றறிந்தோர் கூட்டம் மட்டுமின்றி, சென்னை மாகாணத்தின் சமூகப் பிரச்சினைகளில் ஆர்வம் கொண்ட பத்திரிகைகளும், அரசியலைத் தலையாய நோக்கமாகக் கொண்டிருந்த பத்திரிகைளும் மாறுபட்ட கருத்தைக் கொணடிருந்தன.

சங்கரன் நாயர் தெரிவித்துள்ள கருத்துகள், ஆங்கிலேயர் குறித்து நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் கொண்டிருந்த அணுகுமுறைக்குப் பெரிதும் ஆதரவாக உள்ளன. என்பதைக் காணலாம்.

தமிழ்நாட்டின் வரலாற்று ஆய்வு என்பது ஒரு மாகாணம் பற்றிய அல்லது இந்தியாவின் ஒரு மாநிலம் பற்றிய ஆய்வு என்பதோடு மட்டுமல்லாமல் தென்னிந்திய வரலாற்றின் அடிப்படை ஆதாரமாகவும் அது திகழ்கிறது.

அவ்வாறு பார்க்கும்போது இது முழுமையான இந்தியத் துணைக் கண்ட சமுதாயம் மற்றும் பண்பாட்டை உருவாக்க அடித்தளமாக அமைந்த இரு பெரும் கூறுகளில் ஒன்றைப் பற்றிய ஆய்வாக அமைகிறது.

இரண்டாவதாக, தமிழர்களின் வரலாறு என்பது இந்திய வரலாற்றையும் கடந்த ஒன்றாகும், இதனை, பரந்துபட்ட பண்டைய தமிழ்ப் பண்பாட்டின் வரலாறு எனக் கொள்ளலாம். தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியப் பெருநிலப் பகுதியில் பரவியுள்ள நம் தமிழ்ப் பண்பாடு புகழார்ந்த பழம் பெருமையையும் பன்னாட்டிலும் பரவி வாழும் இனம் தமிழினம் எனும் நிலையான வரலாற்றுப் பெருமையையும் கொண்டுள்ளது.

மேலைநாட்டு அறிஞர்கள் பெருமைக்குரிய இந்தியா என்று குறிப்பிட்டுள்ள போதிலும், இந்திய நாட்டு மக்கள் இந்நாட்டை விட்டுக் குடிபெயர்ந்து பிறநாடுகளில் குடியேறியுள்ள முறையை ஆராய்வோமாயின், உலகம் முழுவதும் சென்று புதிய பகுதிகளைத் தங்கள் சொந்த நாடாக ஆக்கிக் கொண்டவர்கள் பெரும்பாலும் தமிழர்களே என்பது நன்கு விளங்கும்.

முக்கியமாகத் தமிழ் இனம் பரவிய காரணத்தினால்தான் பெருமைமிக்க இந்தியா என்ற கருத்தே தோன்றியது.

ஆகவே, இந்தப் புதிய பரிமாணங்களில் தமிழர் வரலாறு குறித்த ஆய்வுப் பணிகளைப் பரந்த அளவில் மேற்கொள்ள வேண்டுமேயல்லாது, அதனை இந்தியாவின் ஒரு மாநிலத்தின் வரலாறு என்ற குறுகிய கண்ணோட்டத்துடன் மேற்கொள்ளலாகாது. அண்மைக் காலத்தில் பல அயல்நாட்டு வரலாற்றறிஞர்கள் தமிழர் அல்லாத இந்திய வரலாற்றறிஞர்களைக் காட்டிலும் உயரிய அளவில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, தமிழர்கள் பற்றியும் தமிழ்ப் பண்பாடு பற்றியும் அறிந்து கொள்வதற்குப் பல்வகை நூல்களைப் படைத்துள்ளனர்.

**தனித்தன்மை**

நாட்டின் பிறபகுதிகளைச் சேர்ந்த இந்திய வரலாற்றறிஞர்களும் எவ்விதப் பேதமுமின்றித் தமிழர்கள் பற்றிய ஆய்விற்குத் தங்கள் பங்களிப்பினை ஆற்ற முன்வர வேண்டும். இந்தக் கருத்துக்களைத் தெரிவிப்பதன் மூலம் மொழி சார்ந்த குறுகிய நோக்கத்தையோ, இனவெறியையோ வளர்ப்பதல்ல என் நோக்கம். மாறாக, சில கருத்துக்களை ஆழமாக உள்ளத்தில் பதிய வைப்பதே என்னுடைய நோக்கமாகும்.



முதலாவதாக – தமிழர் சமுதாயம் என்பது ஒரு மாநிலம் சார்ந்ததல்ல. அது உலகளாவியது.

இரண்டாவதாக – தமிழர்கள் புகழ்பெற்ற கடந்த காலத்தையும் அடிப்படையில் வேறுபட்ட தனித்தன்மை வாய்ந்த செவ்விய சமூக பண்பாட்டுப் பண்பு நலன்களையும் கொண்டுள்ளனர்.

மூன்றாவதாக, தமிழர்கள் இந்திய சமுதாயத்தின் அடிப்படை என்ற வகையில் இந்தியப் பண்பாட்டின் பரிணாம வளர்ச்சிக்குப் பல்வேறு வகையிலும் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றியுள்ளனர்.

தமிழர்களின் வரலாறு தொடர்பான இந்த உண்மைகளை இந்தியாவிலுள்ள எந்தவொரு வரலாற்றறிஞரும் பாரபட்சமின்றி அறிந்தேற்க வேண்டும். அவ்வாறு செய்வது இந்திய மக்களின் உண்மையான முழுமையான சிறந்த முறையிலான வரலாற்றை உருவாக்கும் பணியில் பேருதவியாயிருக்க வழிவகுக்கும்.

**(சென்னைப் பல்கலைக் கழகத்தில் டிசம்பர் 27-ம் தேதி நடந்த இந்திய வரலாற்றுப் பேரவையின் 57-வது மாநாட்டில் நிகழ்த்திய ஆங்கில உரையின் தமிழ்ச் சுருக்கம்.)**

# செய்திச்சரம்

## அண்ணா நினைவு இல்லம் புதுப்பொலிவு பெறும்!

**த**மிழக அரசின் சார்பில், காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் இல்லம் மிகப் பொலிவுடன் அமைவதற்கு, பேரறிஞர் பெருந்தகை அண்ணா நினைவு இல்லத்தில் உள்ள புகைப்படக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ள அனைத்துப் புகைப்படங்களும் 'லேமினேசன்' செய்து நவீனப்படுத்தப்படும்; இதற்கும் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தின் கட்டடப் பகுதிகள் சீரமைத்திடவும், புதிய மின் பணிகள் முதலான பணிகளை ரூ.4.20 இலட்சம் செலவில் மேற்கொள்வதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

## பத்திரிகையாளர் ஓய்வூதியம்!

**ந**லிந்த நிலையில் உள்ள ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் தமிழக அரசின் திட்டப்படி, மாதந்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையை முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 1.8.1996 முதல் ரூ.500/-லிருந்து ரூ.1,000-ஆக உயர்த்தி வழங்கினார். அதன்படி தற்பொழுது 40 பத்திரிகையாளர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

இந்நிலையில் நலிந்த நிலையில் வாழும் பத்திரிகையாளர்கள், மற்றும் பல ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்கள் பயன் பெறும் வகையில் அவர்களுக்குரிய ஓய்வூதிய விதிகளைத் தளர்த்தி, முதலமைச்சர் அவர்கள் தற்போது ஆணையிட்டுள்ளார். இந்தப் புதிய ஆணையின்படி-

ஓய்வூதியத்திற்காக விண்ணப்பம் செய்பவரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.5,000த்திற்கு மேல் இருத்தல் கூடாது என்னும் விதி தளர்த்தப்பட்டு ஆண்டு வருமானம் ரூ.12,000 என்று உயர்த்தப்படுகிறது.

விண்ணப்பம் செய்பவர், பணிபுரிந்த நிறுவனங்களிடமிருந்து பணிக்கொடை (கிராஜுவிட்டி) மற்றும் ஓய்வூதிய மாகப் பெற்ற தொகை ரூ.10,000க்கு மேல் இருத்தல் கூடாது என்னும் விதி தளர்த்தப்பட்டு, ரூ.25,000 வரை என்று உயர்த்தப்படுகிறது.

விண்ணப்பம் செய்பவர் பணியிலிருந்தபோது எந்த ஒரு குறிப்பிட்ட ஆண்டிலும் வருமானம் ரூ.24,000-க்கு மேல் இருந்திருக்கக் கூடாது என்னும் விதியைத் தளர்த்தி ரூ.40,000-க்கு மேல் இருக்கக் கூடாது என்று உயர்த்தப்படுகிறது.

இந்தப் புதிய ஆணையினால் ஏறத்தாழ மேலும் 100 நலிவுற்ற பத்திரிக்கையாளர்கள் பயன் பெறுவார்கள்.

## சென்னையில் புதிய மெட்டல் ஹைலைடு லாம்ப் தொழிற்சாலை

**த**மிழ்நாடு அரசின் 'டிட்கோ' நிறுவனம் அமெரிக்காவைச் சேர்ந்த திருவாளர்கள் 'அட்வான்ஸ்டு லைட்டிங் டெக்னாலஜி' மற்றும் 'ஆக்ஸஸ் டெக்னாலஜி' ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து கூட்டுத் துறையில் இந்தியாவிலேயே முதலாவதாக ரூ.26 கோடி மதிப்பீட்டில் 100 சதவிகித ஏற்றுமதியுடன் கூடிய 'மெட்டல் ஹைலைடு லாம்ப்' தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைச் சென்னை ஏற்றுமதி வளாகத்தில் 1997 இறுதிக்குள் அமைத்திட, மாண்புமிகு முதல்வா கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்.

ஆண்டுக்கு 5,76,000 விளக்குகளைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ள இந்நிறுவனத்தின் மூலம் 150 நபர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவர்.

## விருது பெற்ற அரும்புகள்

**தீ**ரச் செயல் புரிந்த பொது மக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு ரூ.2,000 மதிப்புள்ள தங்க முலாம் பூசிய அண்ணா வீரப்பதக்கமும், ரூ.2,000க்கான காசோலையும், தமிழ்நாடு அரசு குடியரசு நாள் விழாவின்போது வழங்கி வருகிறது. இவ்வாண்டு தீரச் செயல் புரிந்த பின்கண்ட நான்கு நபர்கட்கு, அண்ணா விருதினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குடியரசு தின விழாவில் வழங்கிச் சிறப்பித்தார்.

1. செல்வன் பெ. சந்தீப், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம்.

2. செல்வன் பெ. கார்த்திக், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம்

3. செல்வி கா. நஸ்ரின் சுல்தானா, சிதம்பரனார் மாவட்டம்

4. செல்வன் ஜெ. தமிழன்பன், செங்கல்பட்டு அண்ணா மாவட்டம் (தற்போது எம்.ஜி.ஆர். மாவட்டம்).

## சட்ட ஆணையம்

மாநில சட்ட ஆணையத்தைக் கீழ்கண்டவாறு திருத்தி அமைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

1. தலைவர் நீதி அரசர் எம்.எம். இஸ்மாயில்.

2. முழுநேர உறுப்பினர்கள்: நீதி அரசர் பத்மினி ஜேசுதுரை திரு. எம். முனிராமன்(முன்னாள் சட்டத் துறைச் செயலாளர்).

3. பகுதி நேர உறுப்பினர்கள்: திரு. கே. மோகன் தாஸ் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி.

திரு. சி. ராமகிருஷ்ணன், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி.

4. முழு நேர உறுப்பினர் செயலர் அரசு கூடுதல் செயலர், சட்டத்துறை, சென்னை-9.

## சரிகை நிறுவன ஈவுத்தொகை

செங்கை அண்ணா மாவட்டம் காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு சரிகை நிறுவனத்தில் தமிழக அரசு ரூ.13.20 இலட்சம் பங்கு முதலீடு செய்துள்ளது. தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான இந் நிறுவனம் 1973-ல் துவங்கப் பட்டது. இந்நிறுவனம் 1995-96-ஆம் ஆண்டு ஈட்டிய லாபத்தில் அரசின் மூலதனத்திற்கு வரவேண்டிய பங்கு ஈவுத்தொகை ரூ.2.64 இலட்சத்திற்கான காசோலையை மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. என்.கே.கே. பெரியசாமி அவர்கள் மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார்.

## மதிப்பிற்குரிய மாணவர்கள்


டெல்லியில் 26.1.97 நடைபெற்ற குடியரசு நாள் அணிவகுப்பில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலத்தைச் சார்ந்த 104 மாணவர்கள் பங்கேற்றனர். இவர்கள் பெருமைக்குரிய "பிரதமர் பதாகைப் போட்டியில்" கலந்து கொண்டனர். இப்போட்டியில் கலந்து கொண்ட செல்வன் எஸ். விஜய குமார், செல்வன் பங்கஜ் சர்மா, செல்வி மோகனா அப்பாராவ் ஆகிய மூன்று தேசியப்படை மாணவர்கள் இந்தியாவிலேயே சிறந்த மாணவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தங்கப் பதக்கத்தை வென்றனர்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலத் துணை டைரக்டர் ஜெனரல் கமோடர் ஆர். சுப்பையா இம்மாணவர்களின் சிறப்பான செயலுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

அணிவகுப்பில் கலந்து கொண்ட தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலம் மற்றும் அந்தமான் மண்டலத்தைச் சேர்ந்த தேசிய மாணவர் படையினர் இந்தியாவிலேயே இரண்டாம் இடம் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அரக்கோணத்தில் மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் பத்தாவது பிரிவின் நிறைவுநாள் விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ.முல்லைவேந்தன் அவர்கள் கலந்துகொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார் (2.2.97).**





## 'நேரு யுவகேந்திரா' நிதியுதவி!

தமிழகத்தில் அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தால் அதிக அளவில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களான நாகை காயிதேமில்லத், சர்.ஏ.டி. பன்னீர் செல்வம், தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், வள்ளலார், இராமசாமி படையாட்சி, செங்கை அண்ணா மாவட்டம், செங்கை எம்.ஜி.ஆர்., சென்னை மற்றும் காரைக்கால், பாண்டிச்சேரி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை மேலும் அளிக்கும் பொருட்டு மத்திய அரசின் நிறுவனமான நேரு யுவகேந்திரா அமைப்பின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.50 ஆயிரம் வீதம் 12 மாவட்டங்களுக்கு ரூ.6 இலட்சத்திற்கான காசோலைகளை மத்திய இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை இணை அமைச்சர் திரு. ஆர். தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்து வழங்கினார்.

## நினைவகங்கள் சீரமைப்புப் பணி

தமிழகத்தில் உள்ள அரசின் பல்வேறு நினைவகங்கள் புதுப் பொலிவுடன் அமைந்திட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க நினைவகங்களின் மேம்பாட்டுப் பணிகளுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

சென்னையில் உள்ள அண்ணா சதுக்கம், வள்ளுவர் கோட்டம், மகாகவி பாரதியார் இல்லம், சீரணி அரங்கம், காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா இல்லம், கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை, நாகர் கோவில் ஜீவா மணி மண்டபம் அமைத்தல் ஆகிய பணிகளின் மேம்பாட்டினையொட்டி செயலாக்கத்தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு வ. முல்லை வேந்தன் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை திரு நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., திரு. பா. செயப்பிரகாசம், இணை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, திரு. இரா.பா. கார்மேகம், துணை இயக்குநர் (நினைவகங்கள்), பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), திரு என். தங்கவேலு, மேற்பார்வை பொறியாளர், செயற்பொறியாளர்கள், மின் செயற்பொறியாளர் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையைச் சேர்ந்த வள்ளுவர் கோட்டம், மாநிலச் செய்தி நிலையம், கலைவாணர் அரங்கம், இராஜாஜி மண்டபம், அண்ணா சதுக்கம் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் பங்கேற்றார்கள்.

30.1.1997 அன்று நடைபெற்ற இந்தச் செயலாக்க ஆய்வுக் கூட்டத்தில் நினைவகங்களின் மேம்பாட்டுப் பணிகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

## சுய வேலைவாய்ப்புத் திட்டம்

மாண்புமிகு மத்திய தொழில் அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் தமிழகத்தில் "பிரதமரின் சுயவேலை வாய்ப்பு திட்டத்தின்" செயல்பாடு (PRIME MINISTER'S ROZGAR YOJANA) குறித்து, தலைமைச் செயலகத்தில் 1.2.97 அன்று ஆய்வு செய்தார்.

தமிழ் நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 1996-97-ஆம் ஆண்டிற்கான 21,800 பயனாளிகளுக்குக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 8,708 நபர்களுக்குக் கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் 4,861 நபர்களுக்குத் தொழில் முனைவோர்க்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள், இந்த ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டும் வகையில் அனைவருக்கும் விரைவாகக் கடன் வழங்க வங்கிகள் தக்கநடவடிக்கைஎடுக்கவேண்டும்

வரும் 9-ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் படித்து வேலை வாய்ப்பற்ற 20 இலட்சம் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தேவையான அளவிற்கு நிதி ஒதுக்கீடுசெய்யப்படஉள்ளது.

தமிழகத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 28,855 நபர்களுக்கு ரூ.15,814.51 இலட்சம் வரை கடன் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை கடன் தொகையில் சுமார் 70 விழுக்காடு அளவிற்குத் திரும்பச் செலுத்தப்பட்டு வருகிறது.


தற்போது இலக்கு ஆண்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இந்த இலக்கு ஆண்டின் இறுதியில் தான் எய்தப்படுகிறது.

பயனாளிகள் விரைந்து பயன் பெறும் வகையில் இனி 'காலாண்டு இலக்கு' நிர்ணயித்து அந்தக் காலகட்டத்திற்குள்ளாகவே இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.



# மனைவியும் மரப்பொம்மையும்

அறிஞர் அண்ணா



ஒரு வீட்டில், மனைவி ஒரு மரப் பொம்மை வைத்து தினந்தோறும் பூஜை செய்து வந்தாள். அவள் அப்படி மரப்பொம்மையை வைத்து எப்பொழுதும் பூஜை செய்து கொண்டிருப்பதைக் காண மாமியாருக்குச் சகிக்கவில்லையாம். அதைத் தன் மகனிடம் சொல்லி கண்டிக்கச் செய்தாள். அந்த மகன் தன் மனைவியை அழைத்து, 'நீ இனி இந்த பொம்மைகளைத் தொடக்கூடாது' என்று சொல்லி பொம்மையை எடுத்து, தெருவில் வீசி எறிந்தான். அதைக் கண்ட அந்த மனைவி, 'நான் அந்த பொம்மையை விட மாட்டேன். கணவனைப் பிரிந்தாலும் பொம்மையை விட்டுப் பிரியமாட்டேன்' என்று கூறி, அந்தப் பொம்மையை எடுத்துக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள். போகிற நேரத்தில், பொழுது சாய்ந்துவிட்டது. வழியிலே காடாக இருந்ததால் கொஞ்சம் தாழ்ந்த ஒரு மரத்திலேறி உட்கார்ந்து, பொம்மையையும் கையில் வைத்துக் கொண்டு மரக்கிளையில் சாய்ந்து கொண்டிருந்தாள். நள்ளிரவு வந்தது. சில திருடர்கள் எங்கோ திருடிய பொருள்களைக் கொண்டுவந்து அந்த மரத்துக்குக் கீழே வைத்துக்கொண்டு,

பங்கு பிரித்துக் கொண்டிருந்தார்கள். மேலே மரக்கிளையில் அமர்ந்திருந்த அந்தப் பெண்மணிக்குத் தூக்கம் வந்துவிட்டதால் அவர் கையிலிருந்த பொம்மை கைநழுவித் திருடர்கள் தலையில் விழுந்தது. உடனே, அவர்கள் திடுக்கிட்டு மேலே ஏதோ குட்டிச்சாத்தான் இருந்து கொண்டுதான் இந்த பொம்மையைப் போடுகிறது, என்ற மூடநம்பிகையால் பயந்து அங்கிருந்து ஓட்டம் எடுத்தார்கள். பொழுது விடிந்ததும், அவள் மரத்திலிருந்து கீழே இறங்கிவந்து பார்த்தாள். அங்கு ஏராளமான தங்க நகைகள் இருப்பதைக்கண்டாள். வீட்டிலே இருந்த கணவனுக்கு மனைவி கையிலே இருக்கின்ற பணம் பிடிக்கும் என்ற காரணத்தால், அன்புடன் வரவேற்றான். கோபம் தெளிந்தது. இந்தச் செய்தி மெல்ல அடுத்து வீட்டு மருமகளுக்கும் எப்படியோ எட்டிவிட்டது. அவள் தனக்கும் இப்படி ஏராளமான பொருள் கிடைக்கும் என்ற பேராசையால், தானும் ஒரு பொம்மையை வைத்துப் பூஜை செய்து, தனது மாமியாரிடம் கோபிக்கச் செய்து, தன் கணவனிடம் தன்னை அடித்து, வீட்டை விட்டுத் துரத்தச் சொல்லி, அதன் பிறகு அந்தக் காடு இருந்த

பக்கமாகச் சென்று, இருட்டும் வேளையிலே காட்டிலுள்ள மரம் ஒன்றில் ஏறி சாய்ந்து கொண்டு தூங்குவதற்கு முயற்சி செய்தாள். ஆனால், தூக்கம் மட்டும் வரவில்லை. பணம் கிடைக்கப் போகிறதென்ற சிந்தனையில் இருப்பவளுக்கு எப்படி இயற்கையாகத் தூக்கம் வரும்? நள்ளிரவும் வந்தது. முன்போலவே அந்தத் திருடர்களும் அந்த மரத்தடிக்கு வந்தார்கள். அந்த நேரத்தில் அவள் அந்த பொம்மையைக் கீழே போட்டாள். உடனே அந்தத் திருடர்கள் அந்த பொம்மையை எடுத்துப் பார்த்து, சற்று யோசித்தார்கள். மேலே இருப்பது பேயும் இல்லை. பிசாசும் இல்லை. மனித உருவமாகத்தான் இருக்கமுடியும் என்று முடிவு செய்து, மரத்தின் மீது ஏறி, அந்தப் பெண்ணைப்

பிடித்துக் கீழே இழுத்து வந்து நன்றாக உதை கொடுத்து அனுப்பி வைத்தார்கள். பணம் கிடைக்கும் என்று சென்ற மருமகள் உதை பெற்றுத் திரும்பி வருவதை அறிந்து மாமியாரும் அவள் கணவனும் ஏமாந்தார்கள்!

-அபிராமி பதிப்பகம்,
307, லிங்கி செட்டித் தெரு,
சென்னை - 600 001.
வெளியிட்ட 'அண்ணா சொன்ன குட்டிக்கதைகள் 100' என்ற நூலிலிருந்து.



## முதலமைச்சர் வண்ணப் படம்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் வண்ணப்படம் அந்தந்த மாவட்டங்களில் செய்தி-மக்கள் தொடர்பு அதிகாரி அலுவலகங்களிலெல்லாம் கிடைக்கும். 15'' x 12'' அளவுள்ள இந்த வண்ணப்படம் ஒன்றின் விலை ரூ.10 ஆகும்.

அரசு அலுவலகங்களில் மட்டுமல்ல; தமது இல்லங்களிலும் அதனை வைத்துக்கொள்ள விரும்புவோர், மேற்கொண்ட அலுவலகத்திலேயே அதனைப் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது.

-ஆசிரியர்

# இலக்கியச் சிந்தனை

-'கவிக்கொண்டல்' மா. செங்குட்டுவன்

**சி**ந்தனை ஓட்டத்தையெல்லாம் சிறந்த இலக்கியச் செல்வங்களாக்கி மகிழ்ந்தவன் தமிழன்!

எதையும் இலக்கிய நயத்தோடு சொல்லுகின்ற இயல்பு தமிழனுக்கே உரிய சிறப்பாகும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு கூறும் இலக்கியமாக்கப்பட்ட வரலாறு தமிழனுக்கு உண்டு.

தெய்வத்தையும், பெரியோர்களையும் குழந்தையாகப் பாவித்து, குழந்தைப் பருவத்தின் கூறுகளையெல்லாம் வருணித்துப்பாடி, அதற்குப் 'பிள்ளைத் தமிழ்' என்று பெயரிட்டான் தமிழன்.

குழந்தையைத் தொட்டிலில் இட்டுப் பாடுவதற்குத் 'தாலாட்டு' என்று பெயரிட்டான்; தாய்மார்கள் பாடுகின்ற பாட்டு நல்ல தாளக்கட்டோடு அமைந்து, செவிக்கு இனிமையாக இருந்து, குழந்தை யையும் கண்ணுறங்க வைப்பதை இன்றும் நாட்டிலே கண்டு வருகிறோம்.

உயர்திணையினரை மட்டுமின்றி அஃறிணை உயிரினங்களையும் அன்பர்பால் தூது அனுப்பும் முறையில் கற்பனையாகப் பாடப்பட்டவை 'தூது இலக்கியங்கள்' ஆயின.

கொடைவள்ளல்களை எளிதில் காண வாய்ப்புப் பெறாத புலவர்கள் ஓர் ஓலை நறுக்கிலேயே தங்களுடைய வறுமை நிலையையும், தங்கள் தேவையையும் கவிதையாக எழுதி அனுப்பிவைத்தனர். அதற்குச் 'சீட்டுக் கவி' என்று பெயர் கொடுத்தார்கள்.

உழவர்கள் வயலில் நடவு நடுவது போன்ற பணியாற்றுகிறபோது, தங்களுக்கு உழைப்பின் கடுமை தெரியாமல் இருக்கும் வகையில் பாடிக்கொண்டே உழைப்பார்கள். அப்படிப் பாடும் பாட்டு உழவுப் பாட்டு ஆகியது; பறை முழக்கோடு பாடும் பாட்டுக்கு 'பள்ளு' என்று பெயர்.

ஏற்றம் இறைப்பவர்கள் பாடிக் கொண்டே இறைப்பார்கள். 'ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு உண்டா?' என்பது பழமொழி. அந்த ஏற்றப்பாட்டு இன்றையவரையில் கிராமப்புறங்களிலே கேட்டு மகிழத்தக்க வகையிலே பாட்டாளிகளால் பாடப்பட்டு வருகின்றது.

திருமண மற்றும் மங்கல நிகழ்ச்சிகளில் வாழ்த்திப் பாடுவது வாழ்த்துப்பா.

**காவடிச் சிந்து**

கோயில்களில் காவடி தூக்கிக்கொண்டு 'அரோகரா' 'வேல் வேல்' என்று கூவிக் கொண்டே செல்வார்கள். அவர்கள் பாடுவதற்கும் ஒருவகைப் பாட்டு உண்டு. அதுதான் காவடிச் சிந்து. அண்ணாமலை ரெட்டியார் என்பவர் பாடிய காவடிச் சிந்து புகழ் பெற்றது. அது இன்று வரையில் நடைமுறையில் இருந்து வருகிறது.

தென்புலத்தில் வாழும் மக்களெல்லாம் தாங்கள் மெய்வருந்த உழைக்கும்பொது பாடிக்கொண்டே பணியாற்றுவார்கள். அவர்கள் பாடுகின்ற பாடலுக்குத்தான் 'தென் பாங்கு' என்று பெயர் ஏற்பட்டது. அதுதான் 'தெம்மாங்கு' என்று இன்று மருவி வழங்குகிறது.

பெண்கள் ஆடிப்பாடி மகிழ்வதற்காக 'அம்மாணை' 'கும்மி', 'ஊசல்' 'கோலாட்டம்' என்றெல்லாம் பாடல்கள் அமைத்திருக்கின்றனர்.

ஒருவர் இறந்துவிட்டால் துன்பத்தை ஆற்றிக் கொள்வதற்காகப் பெண்கள் பாடுவது ஒப்பாரியாயிற்று. ஒப்பாரி, கேட்போர் உள்ளத்தை உருக்கக்கூடியதாகும்.

அதே நேரத்தில் இறந்தவர்களைக் குறித்துப் புலவர்கள் பாடுவதற்குக் 'கையறு நிலை' என்றும், 'இரங்கற்பா' என்றும் பெயர்.

ஒரு மன்னன் பிற நாட்டின் மீது படையெடுத்துச் சென்று ஆயிரம் யானைகளைக் கொன்று போரில் வென்று திரும்புவானேயானால், அவனைப் போற்றிப் புகழ்ந்து புலவர்கள் 'பரணி' பாடுவார்கள். அப்படிப் பாடப்பெற்றதுதான் பழம்பெரும் இலக்கியமான கலிங்கத்துப்பரணி. அந்தப் பரணி பாடிய புலவரான செயங்கொண்டாருக்கு ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு 'தங்கத் தேங்காய்' பரிசாக அளித்து மகிழ்ந்தானாம் சோழ மன்னன் குலோத்துங்கன்!

நீண்ட நெடும் வாழ்க்கை நிகழ்ச்சியைக் கற்பனைத் திறத்துடன் பாடுவது காவியமாயிற்று. அப்படிப் பாடப்பெற்றவைதாம் கம்பனின் இராமாயணமும், சேக்கிழாரின் பெரிய புராணமும், ஐம்பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவையும் ஆகும்.

### தமிழனின் இலக்கியச் சுவை!

இப்படி எடுத்ததற்கு எல்லாம் கவிதை பாடி இலக்கியத்தை வளர்த்தான் தமிழன். இலக்கியங்களைப் படைத்தும், படித்தும் சுவைத்து மகிழ்ந்தான். எனவேதான் தமிழரிடையே இலக்கியச் சிந்தனை வளர்ந்தது. வேறு எம்மொழிக்கும் இல்லாத அளவுக்குத் தமிழில் இலக்கியங்கள் உண்டு. தொன்மை இலக்



கியமான தொல்காப்பியமும், நன்னூலும், யாப்பிலக்கணமாம் காரிகையும் முன்னோர்களால் செய்யுள்களாலேயே பாடப்பட்டு நமக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

வளரும் தலைமுறையினருக்கு, எதிர் காலத் தலைமுறையினர்க்கு, வாழ்க்கை இலக்கணம் புகட்டக் கூடிய ஒரு நூல் உண்டு என்றால், அது உலகத்திலேயே தமிழ்நாட்டில் தான் இருக்கிறது. அத்தகைய தனிச் சிறப்புடையதால்தான் திருக்குறள் உலகப் பொதுமறை என்றே உயர்த்திப் பேசப் படுகிறது.

தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்திருக் கின்றார்கள் புலவர்கள். ஆனால் வாழ்க்கை இலக்கணம் மட்டுமன்றி அதற்கேற்ப இலக்கியங்கள் படைத்தவனும் தமிழன்தான்.

ஒரு புலவர், தாம் படும் துயரத்தைக் கூட இலக்கிய நயத்தோடு கூறுகிறார். அப்படிக் கூறுவது தமிழ்நாட்டில் உள்ள புலவர் பெருமக்களுடைய மரபு ஆகும். ஒரு புலவன் ஓர் அரசனை நாடிச்சென்று- அவனிடம், 'எனக்குப் பரிசல் வழங்கி எனது வறுமையைத் தீர்த்துவை' என்று சொல்லுவதைவிட, அந்த நாட்டின் வளமையை, அந்த நாட்டு மக்களின் சிறப்பை, அந்த நாட்டு மன்னனின் கொடைத் திறத்தைப் பாடினாலே, அவனுக்கு உரிய பரிசாகப் பொன்னும் பொருளும் குவியும்; புகழும் சேரும்.

அப்படிப் பாடிப் பரிசில்கள் பெற்று வரும் புலவன், எதிர்கொள்ளும் மற்றொரு புலவனுக்குத் தான் பெற்று வந்த பரிசுப் பொருள்கள் குறித்தும், தனக்கு அவற்றை வழங்கிய மன்னனின் கொடை வளத்தைக் குறித்தும் பாடுகின்ற பாட்டுக்கு 'ஆற்றுப் படை' என்று பெயர்.

**தடைக்கல்**

நம்பிக்கையற்ற வர்களின் முன்னேற்றப் பாதையிலே தடைக் கற்களாக இருப்பவை நம்பிக்கை உடையவர்களின் பாதையிலே படிக்கற்களாக அமைகின்றன.

**-ஜி.எச். லூயி**

அந்தக் காலத்தில் புலவர்கள் பாடிய பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, எல்லாம் படித்து மகிழத்தக்க ஆற்றுப்படை இலக்கியங்கள் ஆகும்.

இதோ ஒரு புலவன் இவன் அரசனை நாடிச்சென்று பாடிடவும் இல்லாமல் தனது துன்பத்தை எப்படிக் கவிதையாக வெளிப் படுத்துகிறான் பாருங்கள்.

### சத்திமுத்தப் புலவரின் துன்பநிலை

'சத்திமுத்தம்' என்பது தஞ்சை மாவட்டம் குடந்தைக்குப் பக்கத்திலே உள்ள ஒரு சிற்றூர். அந்த ஊரைச் சேர்ந்த அந்தப் புலவன், மதுரையம்பதிக்குச் செல்கிறான். மன்னனைக் கண்டு தனது வறுமை நிலையைக் கூறிப் பரிசில் பெறலாம் என்ற எண்ணத்தோடு சென்றிருக்கிறான். ஆனால் அவனை மன்னன் வாழும் அரண்மனையின் உள்ளே விட மறுக்கிறார்கள் காவலாளிகள். அவன் மன்னனைக் காணமுடியாமல் ஏங்கித் தவிக்கிறான். ஒருநாள் இரவு தேரடியில் குளிர்காற்றிலே நடுங்கி ஒடுங்கி ஓர் ஓரத்தில் படுத்துக்கிடக்கிறான்.

அந்தத் துன்ப நிலையிலும் அவன் நெஞ்சத்திலிருந்து பாட்டு வெளிப்படுகிறது.

அப்போது அந்த நள்ளிரவில் பறந்து செல்லும் நாரைகளைப் பார்க்கிறான். அவற்றைப் பார்த்து அவன் பாடுகின்ற துன்பநிலையைப் பாடுகிறான்.

**"நாராய் நாராய் செங்கால் நாராய்!**
**பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**
**பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!**
**நீயும் நின் பெட்டையும் தென்திசைக் குமரியாடி**
**வடதிசைக்கு ஏகுவீ ராயின், எம்மூர்**
**சத்தி முத்த வாவியுள் தங்கி**
**நனைசுவர்க் கூரைக் கனைகுரல் பல்லி**
**பாடுபார்த் திருக்கும்என் மனைவியைக் கண்டு**
**'எங்கோன் மாறன் வழுதி கூடலில்**
**ஆடை யின்றி வாடையில் மெலிந்து**
**காலது கொண்டு மேல தழுவி**
**பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்**
**ஏழை யாளனைக் கண்டனம் எனுமே".**

-இவ்வாறு பாடுகிறான் அந்தப் புலவன். ஆடையின்றி வாட்டும் குளிரிலே இருக்கும் நிலையை யாரிடம் சொல்லுகிறான்? நள்ளிரவில் பறக்கும் வெள்ளைநிற நாரையைப் பார்த்துப் பாடுகிறான்.

'நீங்கள் குமரி முனைக்குச் சென்று அங்கு நீராடி வடதிசைக்குச் செல்லும் போது, அங்கே காவிரியின் கரையிலே தான் என்னுடைய ஊரான 'சத்திமுத்தம்' இருக்கிறது. அங்கு என்னுடைய மனைவி எனது வருகையை எதிர்பார்த்து, மழையால் நனைந்த சுவரிலே இருக்கும் பல்லி என்ன சொல்கிறது என்று எதிர்பார்த்து ஏங்கியிருப்பாள். பல்லி சொல்லுவது பலிக்கும் என்பது பழங்காலத்து நம்பிக்கை. நான் இங்கு வாடிக்கொண்டிருக்கிறேன். இந்தச் செய்தியையாவது என்னுடைய மனைவியிடத்தில் சொல்லுங்கள்' என்று நாரைகளைப் பார்த்து சத்தான தமிழிலே பாடுகின்றான் சத்திமுத்தப் புலவர்.

### நாரை விடு தூது!

நாரை போய்த் தன் மனைவியிடம் அப்படிச் சொல்லும் என்பதற்காக அவன் அப்படிப் பாடவில்லை. தன்னுடைய நிலையை, பாண்டிய மன்னனைக் காண இயலாமல், பரிசுக்காக ஏங்கியிருக்கிறான் என்ற நிலையை இவ்வாறு எடுத்து இயம்புகிறான். அவ்வளவுதான். இந்த ஒரு கவிதை தான் நாரை விடு தூது என்ற பெயரில் அவன் பாடியதாக நமக்குக் கிடைத்துள்ளது.

இந்த ஒரே ஒரு வரி- 'நாராய் நாராய்'! என்று விளித்துப்பாடும் இந்தப் பாடல் வரி, இன்று எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

ஒரு சிறிய நிகழ்ச்சியை அவன் எத்துணை அழகாகப் பாடலிலே வைத்திருக்கிறான் பாருங்கள். இதுதான் இலக்கியச் சிந்தனை! இதுதான் இலக்கியச் சுவை! பனங்கிழங்கு பிளந்ததுபோல் நாரையின் கூர்வாய் இருக்கிறது என்று சொல்கிற நயத்தைப் பாருங்கள்!

ஒரு குழந்தை தன் தாயாரின் தாலாட்டுப் பாடலைக் கேட்டு, மயங்கிய நிலையில் தூங்குகிறது. மழலைப் பருவத்திலேயே தமிழ் இலக்கிய உணர்வு தமிழ்க் குழந்தைக்குத் தாய்பாலோடு ஊட்டப்பட்டுவருகிறது. சங்க காலத்தில் தமிழ்புலவர்கள் காதலையும் வீரத்தையும் அக வாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் பாடினர். அரசனைப் பாடினர், அறத்தைப் பாடினர், கொடைத் திறத்தைப் பாடினர்.

**காலம் முறைகளை மாற்றுமே தவிர மனப்போக்கையும் உணர்ச்சியையும் மாற்றி விடாது!**

**-அறிஞர் அண்ணா**

அதன் பின் வந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும், ஆண்டவனைப் பாடிப் பாமாலை சூட்டி மகிழ்ந்தனர்.

சித்தர்களெல்லாம் வாழ்க்கைத் தத்துவங்களைப் பாடிச் சென்றனர். கம்பர் இளங்கோவடிகள், சேக்கிழார் போன்றவர்கள் ஒப்பற்ற காப்பியங்களைப் படைத்தனர். வடலூர் இராமலிங்க வள்ளலார் ஆன்மநேய ஒருமைப்பாட்டை வலியுறுத்திப் பாடினார்.

இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியும், பாரதிதாசனும், நாமக்கல் கவிஞரும், தேசிய விநாயகம் பிள்ளையும் நாட்டு விடுதலைக்கும், சமுதாய மறுமலர்ச்சிக்கும் ஏற்ற இலக்கியங்களை வடித்துத் தந்தனர். இப்படி வழி வழியாக இலக்கியச் சிந்தனை வளர்ந்தோங்கி வருகிறது. ஆனால் அதன் வடிவங்கள் காலத்துக்குக் காலம் மாறுபட்டு வருகின்றன.

### வருங்காலம் பற்றிய சிந்தனை

வருங்காலம் பற்றிய இலக்கியச்சிந்தனை இன்றைய தலைமுறையினரிடையே வளர வேண்டும். அந்தக் காலத்திலே, சங்க காலத்திலே பாடிய பாடல்களை நம்மாலே புரிந்துகொள்ள முடியவில்லையே என்று இந்தக் காலத்திலே பலர் ஏங்கினாலும், இந்தக் காலத்திற்கு ஏற்றபடி பாரதியாரும் பாரதிதாசனும் பாடியதைப் போல் பல நூல்களை, பல இலக்கியங்களை இன்றைக்கும் எளிய தமிழிலே படைக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம். அவர்களெல்லாம் உருவாக்கிவிட்ட அந்த இலக்கியச் சிந்தனை வளர வழிவகை செய்யவேண்டும்.

அப்படி வளர, நாட்டிலுள்ள நல்லறிவாளர் களையெல்லாம் நாம் ஊக்குவிக்க வேண்டும். நல்ல தமிழ்ப் பற்றாளர்கள், தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ந்தவர்களெல்லாம் நிரம்ப இன்றைக்கு இருக்கிறார்கள். வழி வழி அவர்களைப் பின்பற்றி, அவர்கள் வளர்த்த சிந்தனையை நாம் தொடர்ந்து வளர்த்து வருவோமானால் நமது எதிர்காலத்திற்கு அந்தச் சிந்தனை வழிகாட்டுவதாக அமையும்

இன்றைக்கு நாமெல்லாம் நாகரிக உல கத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இங்கே, இப்பொழுது இலக்கியத்தைப் படைத்தால், இலக்கியத்தைப் படித்தால், இலக்கியத்தைச் சுவைத்தால், என்ன பயன் என்று பார்ப்பதைவிட, அன்றைக்கு நம் முன்னோர்கள் படைத்த இலக்கியம், நமக்குப் பயன்படுவதைப் போல நாம் படைக்கின்ற, நாம் உருவாக்குகின்ற இலக்கியச் சிந்தனை எதிர்காலத்தில் நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் புதுப்புதுச் சிந்தனையை, இலக்கியத்தின் வாயிலாக உருவாக்க வேண்டும்.

அதே நேரத்தில் நான் இங்கே மற்றொன்றையும் எடுத்துணர்த்தக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழர்களாகிய நாம் தமிழிலேயே சிந்திக்க வேண்டும். ஆங்கிலத் திலேயோ, பிற மொழியிலோ கல்வி கற்ற வர்கள்- சிந்தனையைக் கூடத் தமிழில் செய்யாமல் பிற மொழியில் செய்கிறார்கள். ஆங்கிலத்தில் சிந்தித்துத் தமிழிலே அதைச் சொல்கின்ற ஒரு வழக்கம் இன்றைக்கு எப்படியோ பரவலாக நம்மிடையே ஏற்பட்டு விட்டது. நமது நினைப்பே தமிழில்தான் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் இன்றும் இனியும் தமிழ்மொழி எல்லா வகையிலும் சிறந்து விளங்கும் என்பது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

**தியாகிகள் தினத்தையொட்டி 30.1.1997 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அமைச்சர்களும், அரசு அலுவலர்களும் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.**



# வாசகர் இதயம்

'கவின்மிகு தமிழகக் கலைகள்' கட்டுரை பல அரிய செய்திகளைத் தெரிவிப்பதாக இருந்தது.

-அ.கந்தசாமி பத்மாவதி,
திருப்பூர்.

அரசு ஆணைகளைத் தமிழில் வெளியிட்டால் நல்லது. மொத்தத்தில், அஞ்சலில் வந்தால் பிரிக்காமலே போட்டுவந்த தமிழரசை எப்போது வரும் என எதிர்பார்க்க வைத்து விட்டீர்கள். நன்றி.

-ஆர். ரெனி,
சென்னை52.

சின்னஞ்சிறார் பயனடையத்தக்க செய்திகளை இன்னும் சேர்க்கலாமே?

-கா.ராஜசேகர்,
மங்களாபுரம்-636202.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கவிதை வெளியிட்ட முறை சரியில்லை, அது பின்கண்டவாறு அச்சாகியிருக்கவேண்டும்:

'புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச்
சித்தம் கலங்கித் திகைப்பதேன்- வித்தகன்
தெய்வப் புலவன் திருவள்ளுவன் சொன்ன
பொய்யில் மொழியிருக்கும் போது!'

-வ. பரத்வாசன்,
சென்னை67.

பேராசிரியர் இரா.சேது எழுதிய இலக்கியக்கட்டுரை கரும்பாக இருந்தது.

-பாவலர் வைரி.தரளம்,
கோபிபாளையம்.

புற்றுநோய் பற்றிய டாக்டர் ஜெயந்தி சீனிவாஸ் மருத்துவக்கட்டுரை பயனுள்ள ஒன்று. தமிழுக்கு முதல் மரியாதை தொகுப்பும் அவசியமானதாகும்.

-குருசாமிராஜ்,
காசிபாளையம்.

தொடர்ந்து தமிழ்ப்பணி ஆற்றிவரும் தமிழரசுக்குப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

-சி.அருணாசலம்,
திருவளிப்பட்டி.

(இவ்வாறு ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன.)

கவிதைப்போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிதை புதுக்கவிதை எனினும், அருமையான கற்பனையின் வெளிப்பாடாக இருந்தது, பாராட்டுகிறேன்.

-கவிஞர் எழிற்பித்தன்,
சென்னை-5.

முதல்வர் கலைஞர் அவர்களின் பொங்கல் வாழ்த்துச் செய்தி, சர்க்கரைப் பொங்கலாக இனித்தது.

-பழனிமுருகன்,
தேவர்கண்ட நல்லூர்.

அமைச்சர்களின் ஊதுகுழலாக இல்லாமல் கதை, கவிதை போன்ற அமைப்புகள் மூலம் சமூக எதார்த்தங்களைத் தாங்கி மணக்கின்ற தமிழரசைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

-ப. முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

# வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகை

# தமிழுக்கு முதல் மரியாதை..

332. Organisation .. அமைப்பகம், அமைப்பு
333. Oscillating Fan .. சுழல் மின் விசிறி
334. Paging .. விளத்தல், அகவி
335. Pager .. விளிப்பான், அகவன்
336. Paints .. வண்ணெய்கள், வண்ணப் பூச்சு
337. Pan Stall .. மடி வெற்றிலைக் கடை
338. Paper Store .. தாள்வகைப் பொருளகம், தாள்கடை
339. Passport .. கடவுச் சீட்டு, கிள்ளாக்கு
340. Paradise .. பொன்னுலகம்
341. Parcel Service .. சிப்பம் செலுத்தகம், சிப்பம் அனுப்பகம்
342. Partnership .. பங்காண்மை
343. Pedestal Fan .. தளிகை விசிறி (பீடம்), நிலைமேடை மின்விசிறி
344. Perfumeries .. நறுமணப் பொருள்கள்
345. Pesticide .. பூச்சிக்கொல்லி மருந்து
346. Petrol .. கண்ணெய், எரிநெய்
347. Pharmaceutical Manufacturers .. மருந்து உருவாக்குநர், மருந்து தயாரிப்பு நிறுவனம், மருந்துருவாக்கிகள், மருந்து தயாரிப்பாளர்
348. Pharmacy .. மருந்தகம், மருந்தாக்ககம்
349. Photo Blocks .. ஒண்படஅச்சுரு, படக்கட்டை, புகைப்பட அச்சுரு
350. Photo Studio .. ஒண்பட மனை, ஒளிப்பட நிலையம்
351. Picture Palace .. படமாளிகை
352. Plant .. இயந்திரகம்
353. Plastic Industry .. நெகிழித் தொழிலகம்
354. Platform .. நடைமேடை, நடை பாதை
355. Plaza .. அங்காடி, கடைத் தொகுதி
356. Plot .. மனையிடம், மனை
357. Plumber .. குழாய்ப் பணியாளர்
358. Plywoods . ஒட்டுப்பலகை
359. Polish Works .. வழைப்பேற்றப் பணிகள், மெருகூட்டும் பணி, பளபளப்புப் பணிகள்
360. Poly Clinic .. பல துறை மருத்துவமனை, பல்துறை மருந்தகம்
361. Polythene .. ஈகநார்
362. Polythene Bag .. ஈகநார்ப் பை
363. Pork .. பன்றி இறைச்சி
364. Postage .. அஞ்சற் செலவு, அஞ்சல் கட்டணம்
365. Post Office .. அஞ்சலகம்
366. Poultry .. கோழிப் பண்ணை
367. Power Loom .. விசைத் தறி
368. Power Press .. மின் அச்சகம்
369. Press, Printers .. அச்சகம், அச்சுக் கலையகம், அச்சுக் கலைஞர்

370. Private Limited .. தனிப்புற மட்டிட்டது, மட்டிட்டது (த) தனியார் (பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

371. Products .. உற்பத்திப் பொருள்கள்

372. Profiles .. சிறப்புக் குறிப்பு

373. Promoters .. மேம்படுத்துநர், வளர்க்குநர்

374. Provisional Stores .. பலசரக்குக் கடை, மளிகைக் கடை

375. Quarry .. கற்சுரங்கம், கற்குடைவு

376. Quick Meals .. விரைவுணா

377. Quarters .. உறையுள், உறைவிடம், குடியிருப்பு

378. Radio Service Centre .. வானொலிப் பெட்டி பழுதுபார்ப்பகம்

379. Ration .. அளவணம், பங்கீடு

380. Ready-made Dress Centre .. அணியப்பாட்டு ஆடை நடுவம், ஆயத்த ஆடையகம்

381. Real Estate .. வீடு, மனை விற்பனை

382. Receipts .. கைச்சாத்து, பற்றுச்சீட்டு

383. Refrigerator .. குளிர்பதனப்பெட்டி

384. Rent .. வாடகை

385. Rent Free .. வாடகையற்ற

386. Research Centre .. ஆராய்ச்சி மையம்

387. Restaurant .. தாவளம், துய்வுணவகம், உணவகம்

388. Rest House .. ஓய்வில்லம்

389. Retreading .. மேற்பட்டையிடல், மறுபட்டையிடல்

390. Re-winding .. மீளச்சுற்றுதல், மறுதிருகல்

391. Rice Mill .. அரிசி அரைவை ஆலை

392. Rolling Shutter .. கரந்தியல் சாத்தி, கரந்தியல் கதவு

393. Roofings .. கூரையீடுகள், கூரைகள்

394. Rose Milk .. முளரிப் பால்

395. Rubber .. தொய்வை

396. Rubber Stamp Works .. தொய்வை முத்திரைப் பணிகள்

397. Sales Centre .. விற்பனை நிலையம்

398. Sales & Service .. விற்பனை மற்றும் சேவை


399. Saloon .. முடிதிருத்தகம்

400. Sanitary Wears .. தூய்மைக்காப்பு, துப்புரவுப் பொருட்கள்

401. Savoury .. காரச்சுவையுண்டி

402. Saw Mill .. மர அறுப்பு ஆலை, மர அறுவை ஆலை, வாள் பட்டறை

– அடுத்த இதழில்...



மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை, மிருகங்களைப் பாதுகாக்கும் இயக்கத் தலைவியான திருமதி. மேனகாகாந்தி அவர்கள் சந்தித்து உரையாடினார். (27.1.97)

# அமைதி நிலவ அனைவரும் ஒத்துழைப்பீர்!

## மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குப் பதிலளித்து

# மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆற்றிய உருக்கமிகு பேருரை

**மேதகு தமிழக ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், சட்டப் பேரவையில் 30.1.1997 அன்று ஒன்றே முக்கால் மணி நேரம் உரையாற்றினார். அதில் குறிப்பிடத்தக்க முக்கியப் பகுதிகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.**

"ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு இந்த மன்றத்தில் பதில் வழங்கப்பெறுகின்ற இந்த காலகட்டத்தில் நாம் மூன்று ஆளுநர் களை நினைவு கூர வேண்டிய, அவர்களைப் பற்றி முறையே பேச வேண்டிய, அவர்கள் ஆற்றிய உரையைப் பற்றிக் கருத்துக்களைக் கூற வேண்டிய நிலைக்கும் ஆளாகியிருக் கின்றோம். இந்த மன்றத்தின் இந்தத் தொடரை நாம் ஆரம்பிக்கும்போதே, தமிழகத்திலே ஆளுநராகப் பொறுப்பேற்றிருந்து இந்தியா வினுடைய தலைசிறந்த தலைவர்களுள் ஒருவராக விளங்கி, பல பொறுப்புகளை நிர்வாகத் திறனோடு ஆற்றி மறைந்த சென்னாரெட்டி அவர்களுக்கு நம்முடைய அஞ்சலியைச் செலுத்தி, அவருடைய புகழை இங்கே நாம் பேசியிருக்கின்றோம்.

அடுத்து இந்த உரையை இங்கே ஆற்றியவர், ஆந்திரத்தினுடைய கவர்னராகவும், அதே நேரத்தில் இந்த மாநிலத்திற்கும் சேர்த்து தற்காலிகப் பொறுப்பை ஏற்று கவர்னரா கவும் விளங்கிய, இன்றைக்கு ஆந்திர மாநில கவர்னராகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற கிருஷ்ணகாந்த் அவர்களுடைய உரை. கிஷ்ணகாந்த் அவர்கள் ஆற்றிய உரையை விவாதிக்கின்ற நேரத்தில், 25-ஆம் தேதி இந்த மாநிலத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு ஒரு நிரந்தர கவர்னர் என்ற வகையில், செல்வி பாத்திமா பீவி அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

**அரசின் கொள்கை விளக்கம்**

இந்த கவர்னர் உரை நான் குறிப்பட்ட இந்த மூன்று கவர்னர்களையும் பின்னிப் பிணைந்திருக்கின்ற ஒரு உரையாக இருந்ததை நீங்கள் எண்ணிப் பார்த்தாலே கவர்னர் உரை என்பது இந்த உரையை யார் ஆற்றுகிறார் களோ அவருடைய உரை அல்ல. இது அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்க ஏடு எனபதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மீண்டும் 1996-ஆம் ஆண்டு அமைந்த பிறகு ஏழு மாதங்களில் எந்த அளவிற்கு வளர்ச்சி நிலைகளை நோக்கி நாம் சென்றிருக்கிறோம், தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறோம் என்பதை ஆளுநர் அவர்களுடைய உரை நமக்கு நினைவூட்டிக்கொண்டிருக்கிறது.

தொழிலதிபர்கள் அவர்களுடைய குறை களையும் வேண்டுகோள்களையும் உயர் நிலையில் நேரடியாகத் தெரிவிக்க, ஒரு முறையான அமைப்பு உருவாக்கப்படும். முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு தொழில் வளர்ச்சி குறித்து உச்ச நிலைக்குழு ஒன்று உருவாக்கப்படும். இதில் பல்வேறு வர்த்தகத் தொழில் அமைப்புகளின் நியமன தாரர்கள 12 பேர்களும், அரசு நியமிக்கும் 6 முக்கியத் தொழிலதிபர்களும், பல்வேறு துறைகளின் அதிகாரிகளும் உறுப்பினர்களாக இருப்பார்கள் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்து இருந்தேன்.

கடந்த 6,7 மாதங்களில் தொழில் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மனதிற்கு நிறைவு தரக்கூடியதாக இருந்தாலும்கூட, மேலும் உற்சாகத்துடன் செயல்பட்டு இந்தியாவிலேயே முதன்மையான இடத்திற்குத் தமிழகத்தைக் கொண்டுவர உங்களுடைய முழு ஒத்துழைப்பை வேண்டுகிறேன். அதற்கான ஆக்கப்பூர்வமான யோசனைகளை நான் உங்களிடமிருந்து எதிர்நோக்கியிருக்கிறேன்.

மாநிலங்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு அதிகமான சில சலுகைகளை விரும்பத்தகாத வகையில் அளித்து, தொழில் முனைவர்களைக்கவர சில

சலுகைகளைக் காட்டி, தொழில் துறையில் முதலீடு செய்ய வைக்கமுடியுமென்ற நம்பிக்கை எனக்கு இல்லை. தொழில் அதிபர்கள் புத்திசாலிகள். தொலைநோக்கு உள்ளவர்கள். ஏதோ சில ஆண்டுகளுக்கு மட்டும் சலுகைகளை வைத்து தொழில் களைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்த முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லை. தொழில் அதிபர்களாகிய அவர்கள், அடிப்படை வசதிகள் அனைத்தும் உறுதியாய் இருக்க வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள்.

**ஈடு இணையில்லை**

தமிழகத் தொழிலாளர்களுக்கு ஈடில்லை. இதைப்புரிந்து கொண்ட இந்த அரசு மின்சார வசதி, தண்ணீர்வசதி, செய்தித் தொடர்பு வசதி போன்ற சில அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றது. நம் தொழிலாளர்கள் மிகவும் திறமைவாய்ந்தவர்கள். சிக்கலான தொழில் நுட்பங்களை எளிதில் புரிந்துகொண்டு திறமையாகப் பணியாற்றி உற்பத்தியையும் உற்பத்தித்திறனையும் பெருக்குவதில் தமிழகத் தொழிலாளர்களுக்கு ஈடு இணை யாரும் இல்லை.

அடிப்படை வசதிகளைப் பொறுத்தவரை யில் நாம் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஓரளவுக்குத் திருப்திகரமான நிலையில் இருக்கின்றோம்.

அதே நேரத்தில் மின்சாரத் துறையிலே கடந்த 4, 5 வருடத்தில் புதிய திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. சாலைப் பராமரிப்பு முதலிய துறைகளிலும் உண்மையாக வேலை நடைபெறாத சூழ் நிலையில், நமது போக்குவரத்து வசதி மிகவும் தரம் குறைந்துவிட்டது. இந்த நிலைமைகளை எல்லாம் சரி செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. மேலும் நிலைமையைச் சீர் செய்யப் பல தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, இந்த அரசு சில முக்கியமான முடிவுகளை மேற்கொண் டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் உங்களுடைய ஆக்கப்பூர்வமான யோசனைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, பல புதிய தொழில்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்தும் வகை யில் தங்களுடைய கருத்துக்களை அறிந்து கொள்ள நான் ஆவலோடு இருக்கிறேன்.

-என்று குறிப்பிட்டு, அவர்களும் நீண்ட தூரம் தங்களுடைய கருத்துக்களை இந்த அரசுக்கு, தொழில் வளரவேண்டும் என்ற நோக்கத்தோடு எடுத்துரைத்திருக்கிறார்கள். இந்தக் குழு அடிக்கடி கூடி தொழில்வளம் தமிழகத்திலே மேலும் உயர்ந்திட முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை—இங்கே பேசிய நம்முடைய நண்பர்கள் தொழில்வளம் சிறக்கவேண்டும் அது மிக முக்கியம் என்று எடுத்துக்காட்டிய அந்தக் கருத்துக்கு அரணாக எடுத்துவைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தொழில்கள் எந்த அளவிற்கு இந்த 6,7 மாத காலத்திலே வளர்ந்திருக்கின்றன என்பதற்கு ஒரு சிறிய புள்ளி விவரத்தை உங்களுக்கு நான் படித்துக்காட்ட விரும்பு கிறேன். புதிய தொழில்களைத் தொடங்கு வதற்கு வசதியாக 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்படவுள்ளது. இதில் தூத்துக் குடிக்கு அருகே 650 எக்டேர் பரப்பளவு சிப்காட் தொழில் மைய விரிவாக்கத்திற் காகவும், இருங்காட்டுக்கோட்டையிலே 1800 ஏக்கர் நிலப்பரப்பும் அடங்கும்.

மோட்டார் வாகன, ஆட்டோமேட்டிவ் இண்டஸ்ட்ரிஸ் தொழில்களும் மிகுந்த முக் கியத்துவம் வாய்ந்த Thrust area தொழில் களாகக் கருதி, சில சிறப்புச் சலுகைகள் அவைகளுக்கு அளிக்கப்படுகின்றன.



சென்னை புரசவாக்கத்தில் உள்ள 'லேடி எம்.சி.டி. முத்தையா செட்டியார் பெண்கள் மேல் நிலைப் பள்ளி'யில் அறிவியல் பிரிவை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு என். வீராசாமி அவர்கள் திறந்து வைத்தார் (29.1.97)

கிரானைட் போன்ற சிறு கனிமம் குத்தகை வழங்குவதிலே உள்ள முறைகேடுகளைக் களைந்து, சீரான நடைமுறையைப் பின்பற்ற இந்த அரசு ஆணையிட்டுள்ளதும் அதன் காரணமாகக் கடந்த காலத்தைவிட அதிக ஆதாயம் அரசுக்குக் கிட்டியிருப்பதும் உறுப்பினர்கள் அறிந்த ஒன்றாகும்.

புதிய தொழில்களுக்கான ஒப்பந்தங்கள் என்று எடுத்துக் கொண்டால் 2450 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சம் கார்கள் தயாரிக்கும் ஹூயுண்டாய் தொழிற்சாலை; 550 கோடி ரூபாய் முதலீட்டில் மறைமலை நகரில் பில்கிங்டன் நிறுவனம் அமைக்கும் மிதவைக் கண்ணாடித் தொழிற்சாலை; 30 கோடி ரூபாய் முதலீட்டில் ஜப்பான் நாட்டு பியூஜிகுரா நிறுவனம் அமைக்கும் கண்ணாடி இழை கேபிள் தொழிற்சாலை; 350 கோடி ரூபாய் முதலீட்டில் கொரியா நாட்டின் கும்கோ டயர்ஸ் கம்பெனி நிறுவும் ரேடியல் டயர் தொழிற்சாலை; 38 கோடி ரூபாய் முதலீட்டில் கல்கத்தாவைச் சேர்ந்த ராவ் சுரானா நிறுவனம் அமைக்கும் தேங்காய்ப் பதப் படுத்தும் தொழிற்சாலை; 450 கோடி ரூபாய் முதலீட்டில் பிரெஞ்சு நாட்டின் செயின்ட் கோபெயின் நிறுவனம் அமைக்கும் மிதவைக் கண்ணாடி தொழிற்சாலை; 630 கோடி

ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு 10 ஆயிரம் கார்கோ வாகனம் தயாரிக்க ஹோசூரில் அசோக் லேலண்ட் நிறுவனம் தொடங்கிய விரிவாக்கத் திட்டம்; துபாயைச் சேர்ந்த எம்.கே. க்ரூப் நிறுவனம் மாட்டு இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை 125 கோடி ரூபாயிலே அமைக்கும் முயற்சி; 20 கோடி ரூபாய் முதலீட்டில் எல்காட் நிறுவனமும் ஹூயுண்டாய் நிறுவனமும் இணைந்து அமைக்கும் தொழிற்சாலை- இது தவிர, பின் வரும் திட்டங்களும் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

**வாகனத் தொழிற்சாலைகள்**

300 கோடி ரூபாய் முதலீட்டில் இந்துஸ்தான் மோட்டார்ஸ் நிறுவனம் மிட்சுபிஷி நிறுவனத்தோடு இணைந்து திருவள்ளூர் அருகே 30 ஆயிரம் லான்சர் கார்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை; செம்பியத்தில் டிராக்டர்ஸ் மற்றும் பார்ம் எக்யுப்மென்ட்ஸ் தொழிற்சாலை; ஆண்டு ஒன்றுக்குத் தயாரிக்கும் திறனை 48 ஆயிரத்திலிருந்து 72 ஆயிரமாக உயர்த்த விரிவாக்கம் செய்யும் திட்டம்; 95 கோடி ரூபாய் முதலீட்டில் இத்தாலிய நிறுவனத்தோடு இணைந்து கிரில்ஸ் நிறுவனம் ராணிப் பேட்டையிலே தொடங்கும் டிராக்டர் தொழிற்சாலை.

தொழிற்சாலை வளர்ச்சிக்கு மின்சாரம் மிக இன்றியமையாதது. அடிப்படை வசதிகளில் மின்சாரம் மிக முக்கியமான ஒன்று என்பதை இந்த அரசு தக்கபடி உணர்ந்து, நான் நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக் காட்டியதைப் போலவும், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே விளக்கிக் கூறியதைப் போலவும் 20 புதிய மின் திட்டங்கள் ஒவ்வொன்றும் 100 மெகாவாட் திறனோடு, தமிழ்நாட்டிலே தொடங்கப்பட இருக்கின்றன.

ஏதோ அறிவித்தோம் அத்துடன் விட்டுவிட்டோம் என்று இல்லாமல், அதற்கு 8000 கோடி முதலீட்டில் அவைகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.8000 கோடி எப்படி வரும் என்று கேட்பீர்களேயானால், ஒரு மெகாவாட் உற்பத்தி செய்ய ரூ.4 கோடி. இப்படி 20 திட்டங்கள். இதுவரையில் இந்த 20 திட்டங்களுக்கும் 73 பேர் டெண்டர் கோரியிருக்கிறார்கள். இது மகிழ்ச்சிகரமான செய்தியாகும். எனவே இந்த டெண்டர்கள் சரிபார்க்கப்பட்டு உரியவர்களுக்கு நியாயமான முறையிலே அவைகள் கொடுக்கப்பட்ட பிறகு, இந்தத் திட்டங்கள் விரைவிலே நிறைவேற இருக்கின்றன.

நம்முடைய நண்பர் தா.கிருஷ்ணன் அவர்கள் கிராஃபைட் தொழிற்சாலையைப் பற்றிக் குறிப்பிட்டார். அதிலே அவருக்கு உள்ள அதே அக்கறை- ஆவல் அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு- அந்தப் பகுதியில் உள்ள உறுப்பினர்களுக்கு உள்ள ஆவல், அந்தப் பகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும் மத்திய நிதியமைச்சருமான அன்புக்குரிய சிதம்பரம் அவர்களுக்கும் உண்டு. எனவே அவரோடு நான் பலமுறை கலந்து பேசியிருக்கின்றேன். அந்தத் தொழிற்சாலையைத் தனி கம்பெனியாக ஆக்குவதற்கு வேலைகள் எல்லாம் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கான ஒரு அதிகாரியும் நியமிக்கப்பட்டிருக்கிறார். தனி கம்பெனியாக விரைவிலே ஆக்கப்பட்டுவிடுமேயானால் கிருஷ்ணன் இங்கே குறிப்பிட்டதைப் போல சுத்திகரிப்பு நிலையமும், அந்த நிறுவனம் நடைபெறும் இடம் எல்லாம் அந்தக் கம்பெனிக்கு உரியதாக ஆக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலை எந்த விதமான குழப்பமும் இல்லாமல் நாம் நடத்தி முடித்திருக்கிறோம்.

அதைப் போலவே ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களையும் வெற்றிகரமாக நாம் நடத்தி முடித்திருக்கிறோம். மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, சாலை வசதி, பேருந்து வசதி போன்றவைகளை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராமத்திலும் எங்களுக்கு பேருந்து இல்லை, இருந்த பேருந்து கடந்த ஆட்சியிலே எடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்ன பொழுதுதான் அதைப்பற்றி ஆராய்ந்து- ஏன் ஏடுக்கப்பட்டது? எதற்காக எடுக்கப்பட்டது? எந்த நிலையில் எடுக்கப் பட்டது? என்பவைகளை எல்லாம் தெரிந்து இந்த அவையிலே அதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அவர்களுக்குத் தளர்த்திக் கொடுக்கப்பட்ட அந்தச் சலுகைகளை எல்லாம் திரும்பப் பெற்று, எல்லாக் கிராமங்களுக்கும் பேருந்துகளை இலாப நஷ்டம் பார்க்காமல் விடக்கூடிய அந்த அளவிற்குத் தனியார் பேருந்துக்காரர்கள் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலையையும் இந்த ஆட்சிதான் இந்தக் குறுகிய காலத்திலே ஏற்படுத்தியிருக்கின்றது.

**கிருஷ்ணா நதி நீர்**

கழக ஆட்சி ஏற்பட்ட இந்தக் குறுகிய காலத்தில், சென்னைக்கு கிருஷ்ணா தண்ணீர் கொண்டுவந்தோம் என்று இந்த ஆறு மாத காலத்திலே முதல் முயற்சி தொடங்கி, இடைக்கால முயற்சி தொடங்கி, முற்றுப் பெறுகிற முயற்சியிலே நாங்கள்தான் இதைச் செய்தோம் என்று யாரும் மார்தட்டிக் கொள்ளவில்லை. கிருஷ்ணா தண்ணீரைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிலே அதிலும் குறிப்பாக சென்னையில் வாழ்ந்த என்.டி.ராமராவ் அவர்கள் முதலமைச்சராக ஆந்திரத்

## அட்டைப்பட விளக்கம்

**முதலாம் அட்டை:**

**தமிழ்நாட்டின் புதிய ஆளுநராகப் பதவி யேற்ற மேதகு ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்னாடை போர்த்தி வாழ்த்துகின்றார்.**

**இரண்டாம் அட்டை:**

**சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவையொட்டி நடைபெற்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள், அலங்கார ஊர்திகளின் அணி வகுப்பு.**

**நான்காம் அட்டை:**

**தமிழ்நாட்டின் மேதகு புதிய ஆளுநராக செல்வி பாத்திமா பீவி அவர்கள் பதவியேற்பு நிகழ்ச்சி.**

திலே பொறுப்பேறுறிருந்த பொழுது, அருமை நண்பர், எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த பொழுது, இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தபொழுது, அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

தொடங்கப்பட்ட அந்தத் திட்டம் பெரும் தொய்விற்கு உள்ளாகி இடையிலே ஆந்திராவிற்குத் தரப்படவேண்டிய பணம் சரியாகப் போய்ச் சேராத சூழ்நிலையில், அது கிடப்பிலே போடப்பட்டு, விடப்பட்ட ஒரு நிலைக்கு ஆளானது. அதற்குப் பிறகு 1989-90-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முகிழ்த்தபோது, அப்போது சென்னா ரெட்டி அவர்கள் ஆந்திரத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த என்.டி.ஆர் அவர்களிடத்திலேயும், நானும் பொதுப்பணித்துறை அமைச்சரும் பேச்சு வார்த்தை நடத்தி, அதற்குப் பிறகு அந்தத் திட்டம் விரைவுபடுத்தப்பட்டு, இன்றைக்கு இந்த 5 ஆண்டு காலத்திலே அவர்கள் அப்படியே போட்டுவிட்டார்கள் என்று சொல்லமாட்டேன்- ஆனால் போதிய கவனம் செலுத்தாமல், இன்னும் விரைவுபடுத்த முயற்சி மேற்கொள்ளாமல் அது கிடப்பிலே இருந்த காலத்தில்- மீண்டும் இந்த ஆட்சி உருவான பிறகு, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்களிடத்திலே பலமுறை பேசி, கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்கு வந்தது என்ற அளவிற்கு நாம் ஆறுதல் பெரு மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறோம்.

அந்தத் தண்ணீர் இன்னும் முழுமையாக சென்னை மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பது ஒரு குறையானாலும் கூட, எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்ட இயற்கையின் சீற்றத்தால், ஆந்திரத்தில் வீசிய புயலால், இந்தத் தண்ணீர் வருவதற்காக வெட்டப்பட்ட வாய்க்கால் பெருமளவுக்குச் சேதமுற்று, இப்பொது அந்தச் சேதங்களையெல்லாம் சீரமைக்கின்ற பணியை ஆந்திர அரசே மேற்கொண்டு வருகின்றது. அதற்கான செலவு 5 கோடி ரூபாய்- ஆந்திர அரசே இன்றைக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு விரைவில் தணணீர் கிடைக்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆந்திரா விலிருந்து வருகின்ற கிருஷ்ணா தண்ணீர், நாள்தோறும் சென்னைக்குக் கிடைக்கக் கூடிய அளவுக்கு ஒப்பந்தம் போடப்பட வில்லை.

ஒரு ஆண்டில் எந்தெந்த மாதங்கள் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. அந்தந்த மாதங்களில் தண்ணீர் கிடைப்பதற்கு எந்த விதமான தட்டுப்பாடும் இல்லாமல் இப்போது அங்கே வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படி மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டுவரும் போதுதான் இரண்டு முறை தமிழகத்திலே அதிலும் குறிப்பாக, சில மாலட்டங்களிலே பெருமழை பொழிந்து வெள்ளச்சேத நிவாரணம் அளிக்கக்கூடிய அந்தக் கட்டத் திற்கு நாம் தள்ளப்பட்டோம்.

ஒரு புறத்திலே வெள்ள நிவாரணம், இனனொரு புறத்திலே வறட்சி நிவாரணம் என்ற அளவுக்கு இருபுறமும் தாக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டது. முதன்முறையாக ஜூன் மாதத்திலே பெரு மழை வந்தபோது, ஏற்கெனவே இருந்த நிவாரண உதவிகளையெல்லாம் அதிகப் படுத்தி, இந்த அரசு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கியதை நீங்கள் யாரும் மறந்து இருக்க மாட்டீர்கள். முன்பு வெள்ளத்தால் குடிசைகள் பாதிக்கப்பட்டால் 500 ரூபாய் என்று இருந்ததை இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 1000 ரூபாய் என்று உயர்த்தியது. பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு 250 ரூபாய் என்று இருந்ததை 500 ரூபாய் என்று ஆக்கினோம். இறந்துபோன கால்நடைகளுக்கு எந்த உதவியும் இல்லாத நிலையே முன்பிருந்தது. இப்போதோ இறந்துபோன மாடுகளுக்கு 5,000 ரூபாய், கன்றுகளுக்கு 3000 ரூபாய், ஆடுகளுக்கு 1000 ரூபாய் என்று நிவாரணம் கொடுத்ததே இந்த அரசுதான்.

### வெள்ளத்தால் ஏற்பட்ட சேதமதிப்பு

இந்த இரண்டு முறை வெள்ளம் ஏற்பட்டு பெருமழையினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் சேத மதிப்பு இந்த இரண்டாவது முறை மழையிலே நாம் கணக்கிடும்போது நீர்ப்பாசன ஆதாரங்களைப் பொறுத்தவரையில் 48 கோடி ரூபாய்க்கும், பொதுப்பணித்துறை கட்டிடங்களைப் பொறுத்தவரை 10 கோடி ரூபாய்க்கும் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிச்சாலை பாலங்கள் முதலியவற்றைப் பொறுத்தவரையில் 246 கோடி ரூபாய்க்கும், தேசிய நெடுஞ் சாலையைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 19 கோடி ரூபாய்க்கும், சென்னை மாநகராட்சி யின் சாலைகளைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 67 கோடி ரூபாய்க்கும், வேளாண்மைப் பயிர்களைப் பொறுத்தவரை ஏறத்தாழ 863 கோடி ரூபாய்க்கும், தோட்டப் பயிர்களைப் பொறுத்தவரையிலே ஏறத்தாழ

56 கோடியும், ஊராட்சி, உள்ளாட்சி நிர்வாகத்தின் சேதங்கள் ஏறத்தாழ 50 கோடியும் நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகத்தின் சேதங்கள் பேரூராட்சியிலே 26 கோடியும் நகராட்சியிலே 39 கோடியும், கைத்தறி உபகரணங்களின் சேதம் 2 கோடியே 40 லட்சமும், ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நலத்துறை பள்ளி விடுதிக் கட்டிடங்கள் 88 இலட்சமும், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழக கட்டிடங்கள் இயந்திரங்கள் 12 கோடியும், மீன் வளத்துறை வலைகள், கட்டுமரங்கள், வல்லம் முதலியவை 63 இலட்சமும், கால்நடைகள் இழப்பு 60 குடிசைகள் சேதம் 40 கோடியே 60 இலட் சமும் ஆக 1,482 கோடி ரூபாயும் மொத்தத் திலே சேத மதிப்பு.

சேதமதிப்பு என்பது வேறு; அதற்கு அளிக்கப்படுகிற நிவாரணம் என்பது வேறு.

மொத்த சேதத்திற்கும் நிவாரணம் அளித்துவிட முடியாது. நிவாரணம் என்பதே முழுவதுமாகக் கொடுக்கவில்லை. நிவாரண மாக கொடுக்கிறார்கள் என்பதே ஒரு அளவு தான் கொடுக்கிறார்கள் என்ற பொருள்தான். அதை நிவாரண உதவி என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோம்.

இப்படிப் பார்த்தால், சேதத்திலே ஒரு பங்கைத்தான் நாம் கொடுத்திருக்கிறோம். 1,482 கோடி ரூபாய்க்குச் சேதம் என்பது சேதத்தினுடைய மதிப்பைத்தான் காட்டுகிறது. இந்த இயற்கையின் சீற்றம் உருவானவுடன் அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் பதறி துடித்த நேரத்தில், உடனடியாக 1260 உணவு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு அதிலே 10 நாட்கள்வரையில் 18 லட்சத்து 42 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கப்பட்டிருக்கிறது.

வெள்ள நிவாரணப் பணிகளில் ஊழல் நடைபெறாமல் அலட்சியம் ஏற்படவிடாமல் அக்கறை காட்ட வேண்டும் என்பதற்காகப் பல எதிர்க்கட்சித்தலைவர்கள் தோழமைக் கட்சித்தலைவர்கள், அவையிலே உள்ள வர்கள்- இல்லாதவர்கள் இவர்கள் எல்லாம் விடுத்த அறிக்கையை மதித்து ஆங்காங்கே மாவட்ட அளவிலே கிராம அளவிலும் நகர அளவிலும் அனைத்துக் கட்சி பிரதிநிதி களைக் கொண்டு குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்களுடைய முன்னிலையிலேயே நிவாரண உதவிகள் பெரும் பகுதி வழங்கப் பட்டு இருக்கின்றன.

## நிவாரணத் தொகை பற்றிய விவரம்

நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட கண்காணிக்க உடனடியாக மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மாவட்டங் களுக்கு எல்லாம் அரசின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அன்றாடம் தவறாமல் அறிக்கை அனுப்ப வேண்டும் என்று ஆணையிடப் பட்டார்கள். அவ்வாறு அறிக்கைகள் தலைமைச் செயலகத்திற்கு வந்த வண்ணம் இருந்தன.

இந்த வெள்ள நிவாரணத்திற்காக முதல் கட்டமாக 20 கோடி ரூபாய் அரசின் சார்பில் ஒதுக்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக ஒதுக்கப்பட்ட தொகை 50 கோடி ரூபாய். இதற்கிடையில் வெள்ள நிவாரணப் பணிகள் எப்படி நடைபெறுகின்றன என்று கவனிக்க பலமுறை அமைச்சர் பெருமக்கள், குறிப்பாக நல்வாழ்வுத்துறை அமைச்சர் வருவாய்த் துறை அமைச்சர், சென்னை மாநகர மேயர் இவர்களையெல்லாம் கொண்ட கூட்டம் தலைமைச்செயலகத்திலே, என் தலைமை யிலே நடைபெற்று நடவடிக்கைகள் முடுக்கி விடப்படுவதற்கான ஏற்பாடுகள் நடை பெற்றன. அதற்குப்பிறகு 50 கோடி ரூபாய் இரண்டாவது கட்டமாக வழங்கப்பட்டது.

மூன்றாவது கட்டமாக 125 கோடி ரூபாய் வழங்கப்பட்டபோது அப்போதும் நெற் பயிருக்கு ஆயிரம் ரூபாய் எக்டேர் ஒன்றுக்கு நிவாரணத்தொகை என்றும் பகுதி சேதம் அடைந்த பயிருக்கு 500 ரூபாய் என்றும், நிலக்கடலை முழுமையாகச் சேதப்பட்டால் 2500 ரூபாய் என்றும், பகுதி சேதமுற்றால் 1250 ரூபாய் என்றும், கேழ்வரகு, எள், சோளம், கம்பு முழுமையாகச் சேதமுற்றால் 400 ரூபாய் என்றும், ஒரு பகுதி சேதமுற்றால் 200 ரூபாய் என்றும், பயிறு வகைகள், சூரியகாந்தி முழு சேதத்திற்கு 600 ரூபாய் என்றும், பகுதி சேதத்திற்கு 300 ரூபாய் என்றும் கரும்பு முழு சேதத்திற்கு 4000 ரூபாய் என்றும், பகுதி சேதமுற்றால் 2000 ரூபாய் என்றும், மக்காச் சோளம் முழு சேதத்திற்கு 500 ரூபாய் என்றும் பகுதிக்கு 250 ரூபாய் என்றும் பருத்தி சேதத்திற்கு 1500 ரூபாய் பகுதி சேதத்திற்கு 750 ரூபாய், இதுதவிர மிளகாய், காய்கறிகள், வெங்காயம், வெற்றிலை, பூக்கள், கொத்த மல்லி, மரவள்ளிக்கிழங்கு, வாழை ஆகிய தோட்டப்பயிர்கள் முழுச்சேதமுற்றால் 4000 ரூபாய் என்றும், பகுதி சேதமுற்றால் 2000 ரூபாய் என்றும் அளிக்கப்பட்டது.



**சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிக்க நடவடிக்கை எடுத்த காவல்துறை அதிகாரிக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தமர் காந்தி விருதினை வழங் கினார் (26.1.97).**

தறிகளுக்கு அவர்களையும் கைவிட்டு விடாமல் அந்தத் தறிகளுக்கு நிவாரண உதவியாக முழுவதுமாகச் சேதமடைந்து பருத்திக் குழி தறி- அதாவது கைத்தறி தறிகளுக்கு நிவாரணம் 2000 ரூபாய் என்றும், பகுதி சேதமடைந்தால் ஆயிரம் ரூபாய் என்றும், முழுச் சேதமடைந்த பட்டுக்குழி என்றால் நிவாரணம் 3500 ரூபாய் என்றும் பகுதி சேதமடைந்த பட்டுக்குழி தறிகளுக்கு நிவாரணம் ஆயிரம் ரூபாய் என்றும் வழங்கப்பட்டது.

### மத்திய அரசிடமிருந்து கேட்டிருப்பது

ஆந்திராவுக்கு மத்திய அரசு நிதி உதவி வழங்கியது. தமிழ்நாட்டுக்கு இன்னும் வழங்கவில்லை என்ற குறையை இங்கே உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஏன் என்றால் அப்படி அவர்கள் குறைகள் சொல்வதன் மூலமாக மத்திய அரசுக்கு இந்த அரசினுடைய வேண்டுகோளை வலியுறுத்துகிறார்கள் என்ற அளவிலே நான் அவைகளை எல்லாம் எடுத்துக்கொள்கிறேன். மத்திய அரசைக் குறை சொல்வதாகவோ, மாநில அரசைக் குறை சொல்வதாகவோ அவர்கள் யாரும் பேசியதாக நான் கருதவில்லை. இது பொதுப் பிரச்சினை. வெள்ள நிவாரணம் என்பது பொதுப் பிரச்சினை. ஆந்திராவில் அந்த முதலமைச்சர் மத்திய அரசைக் கேட்டது 5 ஆயிரம் கோடி ரூபாய். அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தொகை 142 கோடி ரூபாய் தான். நாம் ஏறத்தாழ 600 கோடி ரூபாய்க்கு மேல் கேட்டிருக்கிறோம். எவ்வளவு தருவார்கள் என்று தெரியாது. தராமல் இருந்துவிட மாட்டார்கள் 25 கோடி ரூபாய் அறிவித்ததையே தரவில்லை. எனவே தரப் போகிறார்களா என்ற கேள்விக்கு இடமில்லை என்றே நான் கருதுகிறேன்.

> அறிவு, பிறந்த ஒவ்வொரு
> மனிதனுக்கும் இருக்கிறது
> இயற்கையிலேயே! இருக்கும்
> அறிவு தெளிவு பெற,
> பகுத்தறிவு பெருக கல்வி
> கேள்வி மிகவும் முக்கியம்.
> - கலைஞர்

இந்த நிவாரணப் பணிகளைக் கவனிக்க, சேதத்தினைப் பார்வையிட மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வந்து சென்ற பிறகு, ஒரு குழு அனுப்பப் பட்டது. அந்தக் குழுவும் வெள்ளப் பகுதி களைச் சென்று பார்வையிட்டு, என்னையும் அதிகாரிகளையும் கலந்து பேசிச் சென்றார்கள். அந்தக் குழுவினுடைய அறிக்கை இப்போது அங்கே பரீசீலிக்கப்பட்டு வருவதாக எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. நாம் 630 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். 5 ஆயிரம் கோடி ரூபாய் கேட்ட ஆந்திராவுக்கு 142 கோடி ரூபாய் தான் கிடைத்திருக்கும்போது, 630 கோடி ரூபாய் கேட்டுள்ள நமக்கு எவ்வளவு கிடைக்கும் என்று தெரியாது.

ஆனால் இதுபோன்ற நிவாரணப் பணி களுக்காக மத்திய அரசு National Calamity Relief Fund என்ற ஒரு நிதியை வைத்திருக் கிறது. அந்த நிதியிலிருந்து தரும்போது அதை மானியமாகத் தருவார்கள். வேறு இனத்தில் கடனாகவும் தருவார்கள். நமக்குத் தரப் போகின்ற பணம் முழுவதும் மானியமாக வேண்டும் என்று தான் நாம் கேட்க இருக்கிறோம். இதுவரையிலே வரவில்லை என்றாலும்கூட வருகிற 20-ஆம் தேதி அன்று மத்திய திட்டக் குழுவினுடைய கூட்டம் இருக்கிறது.

அதற்குள் அந்த உதவித் தொகை, ஒரு வேளை வந்துவிடக்கூடும். வராவிட்டால், மத்தியத் திட்டக் குழுவிலே இந்தக் கருத்தை எடுத்துவைத்து, உறுப்பினர்களெல்லாம் கட்சி சார்பற்ற முறையில் எடுத்துவைத்துள்ள கருத்துக்களையெல்லாம் அங்கே அவர்களிடத்திலே தொகுத்துக்கூறி நீங்கள் நிதியை வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள இருக்கின்றேன்.

### வெள்ள நிவாரண நிதியும் ஒதுக்கீடும்

இதற்கிடையிலே நான் விடுத்த வேண்டு கோளை ஏற்று வெள்ள நிவாரண நிதியாகத் தமிழ்நாட்டிலே உள்ள தொழிலதிபர்கள், வணிகப்பெருமக்கள், பல்வேறு நிறுவனங் களைச் சார்ந்தவர்கள், தனிப்பட்டவர்கள், ஆளுநர் உரையிலே 14 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருந் தாலும்கூட, இன்று வரையிலே வந்திருக்கிற தொகை 16 கோடியே 79 லட்சம் ரூபாய் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றி.

வெள்ள நிவாரணப் பணிகளிலே பெரும் ஊழல் நடைபெற்றுவிட்டது என்றெல்லாம் இங்கே ஒரு சிலர் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்பொழுதுகூட நான் கருதுவது, ஊழல் நடைபெறாமல் இருக்கவேண்டும் என்பதற்காக அவர்கள் சொன்னார்கள் என்றுதான் எடுத்துக்கொள்கின்றேன். ஏதோ என்னையோ, இந்த அரசையோ குற்றம் சாட்டியதாக நான் எடுத்துக்கொள்ளவில்லை ஊழல் நடைபெறக்கூடாது எனபதிலே கண்ணும் கருத்துமாக இந்த அரசு இருக்க வேண்டும் என்று அவர்கள் அறிவுரை கூறுவ

தற்காகச் சொன்னார்கள் என்று எடுத்துக் கொள்கின்றேன்.

இது ஒரு பெரிய பட்டியல் போடுகின்ற அளவிற்கு அதிகாரிகளோ, மற்றவர்களோ நடந்து கொண்டதாக எனக்குத் தெரியவில்லை, ஆனால் ஒரு சில இடங்களில் தவறு நடக்காமலும் இல்லை. அதிலே குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் வள்ளலார் மாவட்டம் என்று கருதுகிறேன்- அங்கே வெள்ள நிவாரணத்தொகை குறைத்து வழங்கப்பட்டதாகப் புகார் கூறியதின்பேரில் 4 கிராம நிர்வாக அலுவலர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இது போன்ற குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நேரடியாக எழுதிக்கொடுத்தாலும் அல்லது அஞ்சல் மூலமாக எழுதி அனுப்பினாலும் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாவட்டவாரியாக நிதி வழங்கியதிலேகூட ஏதோ பாரபட்சம் இருப்பதைப்போல எங்களை ஏமாற்றிவிட்டீர்கள் என்றெல்லாம் சொன்னார்கள். மாவட்டவாரியாக இந்த நிதி எப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

சென்னை மாவட்டத்திற்கு 12 கோடியே 66 இலட்சம் அண்ணா மாவட்டத்திற்கு 16 கோடியே 86 இலட்சம், எம்.ஜி.ஆர். மாவட்டத்திற்கு 16 கோடியே 89 இலட்சம், வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திற்கு 4 கோடியே 34 இலட்சம், அம்மாவட்டத்திற்கு இலட்சங்கள் கூட வரவில்லை என்று சொன்னார் ஞானசேகரன். ஆனால் 4 கோடியே 34 இலட்சம் தரப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு 9 கோடியே 36 இலட்சம் விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்திற்கு 20 கோடியே 70 இலட்சம்.

தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டத்திற்கு 24 கோடியே 80 இலட்சம், சேலம் மாவட்டம் 2 கோடியே 23 இலட்சம், தர்மபுரி மாவட்டம் 3 கோடியே 14 இலட்சம்.

தஞ்சாவூர் மாவட்டம் 11 கோடியே 44 இலட்சம், காயிதே மில்லத் மாவட்டம் 11 கோடியே 31 இலட்சம் திருவாரூர் ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டம் 7 கோடியே 92 இலட்சம், புதுக்கோட்டை மாவட்டம் 2 கோடியே 82 இலட்சம், தீரன் சின்னமலை மாவட்டம் 15 இலட்சம், பெரும்பிடுகு முத்தரையர் திருச்சி மாவட்டம் 1 கோடியே 69 இலட்சம், பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் 9 கோடியே 59 இலட்சம், நீலகிரி மாவட்டம் 1 இலட்சம், இராஜாஜி மாவட்டம் 60 இலட்சம் சென்னை மாநகராட்சிக்கு 15 கோடி.

இப்படி 171 கோடி ரூபாய் மாவட்டவாரியாகத் தரப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் இந்த அவைக்கு நான் அளிக்கின்றேன்.

குறிப்பாக, விலைவாசியைப்பற்றி உறுப்பினர்கள் கவலை தெரிவித்தார்கள்.சிலபேர் விலைவாசி உயர்வைப் பற்றி கொஞ்சம் வேகமாகக்கூடப் பேசினார்கள். அவர்கள் வேகமாகப்பேசினாலும்,பத்திரிகையிலே அது வேகமாக வராது.

விலைவாசியை உடனடியாகக் குறைக்க வேண்டும் என்று சப்தம்போட்டுப் பேசலாம். ஆனால் பத்திரிக்கையிலே வரும்பொழுது, விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்றுதான் அச்சாகும். வேறுவிதமாக வராது. சிலபேர் தூண்டிவிடப் பார்க்கிறார்கள். மோதிக் கொள்ள அதற்கு நாங்கள் இடம் தரமாட்டோம் என்பதை இந்தச் சட்டமன்ற கூட்டத்திலேயே நிரூபித்துக்காட்டியிருக்கிறோம்.

திட்டங்களைப் படிப்படியாக நிறைவேற்றுவோம்.

ஒவ்வொரு தொகுதிக்கும் தேவைகள் இங்கே எடுத்துச்சொல்லப்பட்டிருக்கின்றன.

அவைகள் அத்தனையும் நிறைவேற்றப் படாவிட்டாலும் கூட தொடர்ந்து திட்டங்களைப் படிப்படியாக நிறைவேற்றுகிற அந்த நிலையை அரசு எடுக்கும் என்ற நம்பிக்கையைத் திட்டங்களைத் தெரிவித்துள்ள அனைவருக்கும் நான் கூறிக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

விலைவாசி உயர்வைப் பொறுத்த வரையில் பொன்னி போன்ற சூப்பர் பைன் மிக உயர்ந்த ரக,மிக மிக உயர்ந்த ரக அரிசியினுடைய விலை வெளி மார்க்கெட்டிலே உயர்ந்திருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை; ஆனால் அந்த உயர்வு எதனால் ஏற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இங்கே ஏற்பட்ட வெள்ளம் ஆந்திராவில் ஏற்பட்ட பெரும் புயல், வெள்ளம், இயற்கைச் சீற்றத்தினால் விளைந்த சீரழிவு இவைகள் காரணமாக ஆந்திராவிலிருந்து இங்கே அரிசி வரமுடியாத ஒரு சூழ்நிலை, வருகிற அரிசியைத் தடுக்கின்ற நிலை.

காரணம் அவர்களுடைய மாநிலத்தினுடைய தேவைக்காகத் தடுக்கின்ற நிலை. அதைப் போலத் தமிழகத்திலும் வெள்ளம். பெரும்மழை, பல இடங்களில் உடைப்பு எடுத்த நிலை, பயிர்களுக்கு நாசம், சேதம் அந்தக் காரணத்தினால் நாமும் சங்கடத்திற்கு ஆளாகியிருக்கிறோம்.

**விலைவாசிகள் குறைந்து வருகிறது**

கடந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் அதாவது இந்த ஆட்சி அமைவதற்கு முன்பு புழுங்கல் அரிசி (சன்னம்)யினுடைய விலை ஒரு கிலோ

> **எண்ணம் என்னும் கழனியில்**
> **என்னென்னவோ விளைகின்றன;**
> **அவற்றின் பயன் யாவும் கண்டறிந்து**
> **சுவை பெறுவதே அறிவுடைமை.**
> **- அறிஞர் அண்ணா**

9.33 ரூபாயாக இருந்தது. கடந்த டிசம்பர் மாதம் இது 10.84 ரூபாயாக உயர்ந்து, தற்போது 10.26 அளவிற்குக் குறைந்துள்ளது. புழுங்கல் அரிசி சாதாரண அரசி ஏப்ரல் 96ல் ஒரு கிலோ விலை 7.99 என்று இருந்தது டிசம்பர் மாதம் 9.36 என்ற அளவிற்கு உயர்ந்து, சனவரி 97ல், இப்போது 9.19 ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்திருக்கின்றது.

பச்சரிசி, சன்ன அரிசி ஏப்ரல் 96ல் ஒரு கிலோ விலை 9.79 ரூபாய் என்று இருந்து, கடந்த ஆண்டு டிசம்பர் 96ல் 11.19 ரூபாய் என்று உயர்ந்து, இந்த மாதம் 10.85 ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது. பச்சரிசி சாதாரண அரிசி, ஏப்ரல் 96ல், 8.66 ரூபாயிலிருந்து டிசம்பர் 96ல் 9.66 ரூபாயாக உயர்ந்து, இப்போது 97 ஜனவரியில் 9.45 ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது. இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து அரிசி விலை கடந்த மாதத்தை விட குறைந் திருக்கிறது என்பது புரிகிறது. இதே நிலை தான் கடந்த ஆண்டுகூட இப்படி உயர்ந்து மறுபடியும் குறைந்தது என்ற நிலை இருந்திருக்கிறது.

அரிசியைத் தவிர்த்து மற்ற அத்தியா வசியப் பொருட்களை எடுத்துக்கொண்டால், ஒரு சில பொருட்களினுடைய விலை ஏறியிருந்த போதிலும் எல்லாப் பொருட் களுடைய விலையும் ஏறிவிடவில்லை.

**காய்கறிவிலை உயர்வுக்குக் காரணம்**

காய்கறி விலையுயர்வு பற்றியும் இங்கே கூறப்பட்டது. அதற்கும் நான் ஏற்கெனவே சொன்ன காரணம்தான். மழை பொழிந்ததால் சென்னையை எடுத்துக்கொண்டால், காய்கறி விலை, கோயம்பேடு அங்காடியிலே ஒரு விலை, அங்கிருந்து மெள்ள மெள்ள அந்தக் காய்கறி நகர்ந்து மயிலாப்பூர் வரும் போது இன்னொரு விலை, ஏனென்றால் போக்கு வரத்துச் செலவு, ஆட்டோவில் வந்தால் அந்தச் செலவு பேருந்திலே வந்தால் அந்தச் செலவு, இப்படி பகுதிக்குப் பகுதி மாறி, கோயம்பேட்டிலேயிருந்து மயிலாப்பூர் வருவதற்குள் இரண்டு மடங்கு மூன்று மடங்கு காய்கறி விலை உயர்ந்து விடுகின்றது. அதற்குக் காரணம் போக்குவரத்து வசதி சரியில்லை என்று கூறப்படுகின்றது.

பொது விநியோக முறையிலே, அத் திட்டத்தைச் செம்மைப்படுத்திட, ஒரு உயர்மட்டக்குழு வெளிமாநிலங்களுக்குச் சென்று வந்து, தந்துள்ள அந்தக் கருத்துக் களையும் பரிசீலித்து அவைகளை நடை முறைப்படுத்த இந்த அரசு முன்வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது 3 ரேஷன் கார்டுகள் குடும்ப அட்டைகள், சிவப்பு நிறத்திலே ஒன்று, பச்சை நிறத்திலே ஒன்று, மஞ்சள் நிறத்திலே ஒன்று என்று 3 அட்டைகள் வழங்கப்படவிருக் கின்றன. சிவப்பு நிறத்திலே வழங்கப்படுகின்ற அட்டைகளுக்கு எல்லாப் பொருட்களையும் ரேஷனில் வாங்கிக் கொள்ளலாம். பச்சை நிறத்திலே கொடுக்கின்ற அட்டைகளுக்கு அரிசி நிச்சயமாகத் தரப்படமாட்டாது. ஏனென்றால், 10,000 ரூபாய், 15,000 ரூபாய் மாதந்தோறும் சம்பாதிப்பவர்களுக்கு வசதி படைத்த குடும்பங்களுக்கு அரிசி தரப்பட மாட்டாது. மற்ற பொருள்கள் ரேஷனில் தரப்படும். சிவப்புக் கார்டுகளுக்கு எல்லாப் பொருட்களும் அரிசி உட்பட எல்லாப் பொருட்களும் தரப்படும். இந்த மஞ்சள் கார்டுகளுக்கு அவர்களின் விருப்பத்திற்கு விட்டுவிடுகிறோம். அரிசி வேண்டுமா, வேண்டாமா? அரிசி வேண்டும் என்றால் கொடுக்கிறோம். சிவப்பு கார்டுக்குத் தருகின்ற அதே ரேஷன் தரப்படும். எனக்கு அரிசி வேண்டாம். சர்க்கரையோ, மண்ணெண் ணையோ கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுங்கள் என்று சொன்னால் இரண்டில் ஒன்றை அதிகப்படுத்தி அவர்களுக்குத் தரப்படும், இதுதான் மஞ்சள்கார்டுக்கு உள்ள இலக்கணம்.

அதிலே ஏதாவது குளறுபடி இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுதி அனுப் பினால் அல்லது நேரிலே சொல்வார்களே யானால், அவைகளையும் சிந்தித்துப் பார்த்து ஏப்ரல்மாதம் 1-ஆம் தேதி அமலுக்கு வருகின்ற இந்தத் திட்டத்தை சிக்கல்களை யெல்லாம் களைந்து எறிந்து நிறைவேற்ற இந்த அரசு முன்வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றத் தேர்தலைப் பற்றி யெல்லாம் இங்கே பேசப்பட்டது. அதிலே ஒன்றியத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சொன்னார்.

இந்தக் கருத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்கிறது. அந்தக் கருத்தை நிலைப்படுத்த அந்தக் கருத்தை நடைமுறைப்படுத்த மத்திய அரசோடு கலந்துபேசி ஆவன செய்வதற்கு அரசு முன்வரும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் சுப்பராயன் அவர்கள், மாநிலத்திலே ஒரு திட்டக்குழு இருப்பதைப்போல, மாவட்டத் திட்டக்குழுக்கள் இருந்திட வேண்டுமென்று சொன்னார். அதிலே யார் யார் இடம் பெற வேண்டுமென்றும் சொன்னார். மாநில திட்டக்குழுவில் 10, 15 பேர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். மாவட்டத் திட்டக்குழு என்று சொன்னால், அவர்கள் சொன்ன கணக்கின்படி பார்த்தால், அது பெரிய குழுவாக ஆகிவிடும். டி.டி.சி. என்று ஏற்கெனவே ஒன்று இருக்கிறது. 'டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில்' என்ற பெயரில் மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் உள்ளன. அதிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், இவர்களெல்லாம் இடம் பெற்றுத் திட்டங்களைத் தீட்டுவார்கள்.

இப்போதும் ஒன்றும் மோசம் போய்விடவில்லை, உள்ளாட்சி மன்றத்தினுடைய தலைவர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இவர்களெல்லாம் இடம் பெறுவதற்கு எந்த வகையில் எதிர்காலத்திலே உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் தரப்போகிறோம் என்பதை நிர்ணயித்து, அதை அறிவிக்கிற நேரத்திலே சுப்பராயன் அவர்களுடைய கருத்தும் ஆராயப்பட்டு நடைமுறைப்படுத்தமுடியுமா என்ற செய்தியை இந்த அவையிலே அறிவிப்பேன்.

வருகிற நிதிநிலை அறிக்கையில் என்னென்ன அதிகாரங்கள், என்னென்ன பொறுப்புகள், என்னென்ன நிதி உதவியெல்லாம் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தரப்பட இருக்கின்றன என்பதை அறிவிக்க இருக்கின்றோம்.

**பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு**

நம்முடைய வல்லரசு அவர்கள் பேசும்போது, விவசாயிகள் எல்லோருக்கும் மின்இணைப்பு வழங்கிவிடுங்கள் என்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். இந்தியா முழுவதும் இன்றைக்கு எடுத்துக்கொண்டால் விவசாய பம்பு செட்டுகளுடைய தொகை 112 லட்சம் ஆகும். 112 லட்சம் இந்தியா முழுவதுமுள்ள பம்பு செட்டுகளினுடைய எண்ணிக்கை. இதை 25 மாநிலங்களுக்கும் ஏழு யூனியன் பிரதேசங்களுக்கும் என்று வகுத்துப் பார்த்தால் ஒரு மாநிலத்திற்கு சராசரி நான்கு லட்சம் பம்பு செட்டுகளுக்கு இருக்க வேண்டும். ஆனால் நம்முடைய தமிழகத்திலே மாத்திரமுள்ள பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 15 லட்சம் என்பதை நான் பெருமையோடு கூறிக் கொள்கிறேன்.

1967-ஆம் ஆண்டு கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது 2 லட்சம் பம்பு செட்டுகள் தான் இருந்தன. 1933-ஆம் ஆண்டுதான் தமிழகத்தை மின்சாரம் எட்டிப் பார்த்தது. 1933-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கு அறிமுகமான மின்சாரம் 34 ஆண்டுகளுக்குப் பிறகு கூட 2 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு என்ற அளவிலே தான் அது வளர்ந்திருந்தது. திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி 1967-ஆம் ஆண்டு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அண்ணா அவர்கள் அதிலே காட்டிய அக்கறையின் காரணமாகவும், தொடர்ந்து நாங்கள் அண்ணா வழியிலே அந்த அக்கறையை மேலும் காட்ட முயற்சித்த காரணத்தினாலும் வளர்ந்து, கடந்த ஆட்சிகளிலே மேலும் வளர்ந்து வளர்ந்து, இன்றைக்கு 15 இலட்சம் பம்பு செட்டுகள் தமிழகத்தில் இருக்கின்றன.

1967-ஆம் ஆண்டு இரண்டு இலட்சமாக இருந்த பம்பு செட்டுகள்,197374லே 6 இலட்சம் பம்பு செட்டுகளாகி இன்றைக்கு 15 இலட்சம் பம்பு செட்டுகள் என்ற அளவிற்கு வந்திருக்கிறது. ஆண்டொன்றிற்கு 40 ஆயிரம் பம்பு செட்டுகள்தான் மின் இணைப்பு வழங்கப்படமுடியும். ஒவ்வொரு ஆண்டும் 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு இணைப்பு வழங்கப்படுகிறது.

ஆனால் இணைப்புக் கேட்டு வந்திருக்கிற கோரிக்கைகள் எண்ணில் அடங்கா. இலட்சக்கணக்கில் இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிடத்திலேயிருக்கின்ற பணத்தையெல்லாம் வாங்கினாலும்கூட அது முடியாத காரியம். எனவே, மெல்ல மெல்ல- ஆனால் படிப்படியாக, உறுதியாக எல்லா பம்புசெட்களுக்கும் இணைப்புத் தருகின்ற ஒரு காரியத்தை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கள்ளச்சாரயத்தை ஒழித்திட...**

கள்ளச் சாரயம் இன்றைக்குப் பெருகி விட்டது. அதை ஒழிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ஒழிக்கப்படவில்லை. என்றெல்லாம் இங்கே எடுத்துக் காட்டப்பட்டது.

இந்த கள்ளச் சாரயத்திலே மாமூல் பெருகிவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்காட்டிய காரணத்தால், மாமூலை ஒழிப்பதற்காகக் காவல்துறை/ மதுவிலக்கு தனிப்பிரிவை இந்த ஆட்சி

> **மனைவிக்குத் தெரியாமல் தவறு செய்கிறவன், தனக்குத் தெரியாமல் அவளும் தவறு செய்ய இடம்கொடுத்தவனாகிறான்!**
>
> **– காந்தியடிகள்**

கலைத்தது. என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் தொடர்ந்து பல்வேறு மாவட்டங்களில் கள்ளச்சாராய சோதனைகள் நடைபெற்று, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய அரசு அமைந்த பிறகு 1.6.96 முதல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

கண்டுபிடிக்கப்பட்ட மொத்த வழக்குகள் **2,95,298**. எப்படிப் பெருகியுள்ளது என்பதை இந்தக் கணக்கிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்—கைது செய்யப்பட்ட நபர்கள் **2,81,893** பேர். கைப்பற்றி அழிக்கப்பட்ட கள்ளச் சாராயம் **35,47,425** லிட்டர். கைப்பற்றப்பட்ட சாராய பாக்கெட்டுகள் **10,31,914**. கைப்பற்றப்பட்ட எரிசாராயம் **2,92,991** லிட்டர். கைப்பற்றப்பட்ட மது கசாயம் **59,755** லிட்டர், கைப்பற்றப்பட்ட போலி மது மற்றும் இரண்டாம் தர மது வகைகள் **1,26,218** லிட்டர். பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் **2,362**. குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டோர் **227** பேர். நீதிமன்றங்களில் வசூலிக்கப்பட்ட அபராதத்தொகை ரூபாய் இரண்டு கோடியே **66** லட்சத்து **19** ஆயிரத்து **99**. காவல் துறையினரால் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை **4** கோடியே **49** இலட்சத்து **23** ஆயிரத்து **394** ரூபாய். கள்ளச்சாராயத்திற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது இந்த ஆட்சி நடவடிக்கை எடுத்த வகையில் ஒரு டி.எஸ்,பி. **8** இன்ஸ்பெக்டர்கள், **11** சப்இன்ஸ்பெக்டர்கள், **15** தலைமைக் காவலர்கள் மற்றும் **46** காவலர்கள் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் **4** டி.எஸ்.பி.கள் **8** இன்ஸ்பெக்டர்கள் **40** சப்இன்ஸ்பெக்டர்கள் **14** தலைமைக் காவலர்கள் **198** காவலர்கள். கள்ளச்சாராயம் காரணமாக வேறு இடங்களுக்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஒரு சப்இன்ஸ்பெக்டர், **4** தலைமைக் காவலர்கள், **12** காவலர்கள் மீது கிரிமினல் வழக்குப் போடப்பட்டிருக்கிறது. ஒரு டி.எஸ்.பி., **41** இன்ஸ்பெக்டர்கள், **46** சப் இன்ஸ்பெக்டர்கள், **14** தலைமைக்காவலர்கள், **104** காவலர்களின்மீது துறையின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு நடவடிக்கைகள் எடுத்தும்கூட, இதனால் அறவே கள்ளச்சாராயம் ஒழிந்துவிட்டது என்பதை நான் நம்பத் தயாராக இல்லை.

மேலும் இதற்கு யார் யார் ஊக்கம் அளிக்கிறார்களோ அவர்கள் எல்லோரும் தண்டிக்கப்படவேண்டும். அதற்கு மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள், உறுப்பினர்கள் சார்ந்த கட்சியிலே இருக்கிறவர்கள் அத்தனைப் பேரும் இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். கள்ளச்சாராயப் பேர்வழிகளைப் பிடிப்பதிலும் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதிலும் குறுக்கே நிற்காமல் இருப்பதிலே இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

### நிதி நிறுவன மோசடி

இந்தக் கள்ளச்சாராயத்தைப் போல இன்னொரு கயமைச்செயல். அதைவிட மோசமான செயல், பல ஏழை எளிய நடுத்தர மக்களையும், பாமர மக்களையும், படித்த மக்களையும் ஏமாற்றிய ஒரு மோசடி தமிழ்நாட்டில் பல ஆண்டுகளாக நடைபெற்று, இந்த அரசு வந்த பிறகு, அந்த மோசடிப் பேர்வழிகள் எல்லாம் கைது செய்யப்பட்டு, சிறைச்சாலைகளிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். **168** கோடி ரூபாய் பொது மக்களுடைய பணம். நிதிநிறுவனங்களின் மூலம் சுரண்டப்பட்டிருக்கிறது. மோசடி செய்த நிறுவனங்களின் பெயர்கள்:

தேவி கோல்டு ஹவுஸ் குரூப் கம்பெனிகள்

ஈஸ்வரி குரூப் கம்பெனிகள்

மேக்ஸிமா குரூப் கம்பெனிகள்

சிநேகம் குரூப் கம்பெனிகள்

திருமகள் குரூப் கம்பெனிகள்

ஒமேகா கமர்ஷியல் கிரடிட்ஸ் அண்டு இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

நியூ இந்தியா நிதி அண்டு முதலீடு

லஷ்மி கோல்டு ஹவுஸ்

ரமேஷ் கார் குரூப்ஸ்

பாரதி ஜெம்ஸ் அண்டு ஜுவல்ஸ் குரூப்ஸ்

கார் சென்டர், மதுவந்தி நிதி

சூரியா எஸ்டேட் நிதி

எஸ்.கே.எஸ். கோல்டு ஹவுஸ்,

ராமுலு செட்டி ஜுவல்லரி அண்டு நிதி

சென்னை மோட்டார் நிதி அண்டு

உத்தரவாதம் நிறுவனம், தட்சிணா குரூப்.

-இந்த மோசடி நிதி நிறுவனங்கள் எல்லாம், பத்திரிகைகளில், டி.வி.க்களில் விதவிதமான விளம்பரங்களை வெளியிட்டு, அவர்கள் கூறுகின்ற வட்டியைப் பார்த்து ஏமாந்து போய், பல பேர் இந்த நிறுவனங்களிலே உழைத்து, கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தின் ஒரு பகுதியைக் கொண்டுபோய்க் கொடுத்து, ஏமாந்த நிலையிலே, 168 கோடி ரூபாய் சூறையாடப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து எங்களுடைய பணத்தைத் திரும்ப வாங்கித் தாருங்கள் என்று கேட்டவண்ணம் பொருளிழந்த மக்கள், கண்ணீரும் கம்பலையுமாகக் கையேந்தி நிற்கிறார்கள். அந்தக் கஷ்டத்தை எப்படித் தீர்ப்பது என்பதற்குச் சட்டபூர்வமான நிலையிலே, அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

அதற்கு அடுத்தபடியாக, நிறுவனங்களையெல்லாம் கட்டுப்படுத்த ஒரு புதிய சட்டத்தை அரசு கொண்டு வர இருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அந்தச் சட்டமும் வர விருக்கிறது.

அதற்குப் பிறகு, இந்த நிறுவனங்கள் மீது நடைபெறுகின்ற வழக்குகளைக் கூர்மைப் படுத்தி, விரைவுபடுத்த, தொகுத்து ஒன்றாக்கி நடத்திட தனி நீதிமன்றமே அமைக்கப்பட்டு, அந்த நீதிமன்றத்திலே இந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டு, இழந்த பொருள்களில் ஒரு முக்கால் பகுதியையாவது திரும்பக் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை அரசு நிச்சய மாக ஏற்படுத்தும் என்ற உறுதியை, பொருளிழந்தவர்களுக்கு எல்லாம் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக் கிறேன்.

அதேபோல், சந்தனக் கட்டை கடத்தல் பற்றியும், இங்கே எடுத்துச் சொன்னார்கள். மலைகள் எல்லாம் மொட்டையாக இருக்கின்றது என்றெல்லாம் குறிப் பிட்டார்கள். எல்லா சந்தன மரங்களும் போய்விட்டன என்று சொன்னார்கள். இந்த ஆட்சி சந்தனக் கட்டை கடத்தல்காரர்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க வில்லை.

சந்தனக் கட்டை விவகாரத்திலே யாரையும் நாம் விட்டு விடவில்லை. கண்டுபிடிக்கப்பட்ட வாகனங்களையும் விட்டுவிடவில்லை. சந்தனக் கட்டைகள் மூலமாக, கிடைக்க வேண்டிய ஏலத் தொகையையும் நாம் விட்டுவிடவில்லை. இதிலே உஷாராக இருக்கிறோம். இன்னும் உஷார் தேவை என்பதை மறந்துவிடாமல் இருக்கிறோம்.

**பலவீனப்படும் ரவுடிகள் ராஜ்யம்**

சில உறுப்பினர்கள், ரவுடிகளைப் பற்றி யெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள்.

கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு **5.7.96ல்** எழும்பூர் நீதிமன்றத்திலே நடைபெற்ற கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட மாலைக் கண் செல்வம் மற்றும் நம்பி என்ற ரவுடிகள் அன்றைக்கு இரவே கைது செய்யப்பட் டார்கள். ரவுடித்தனம் நடைபெறலாம்; கொலைகள் நடைபெறலாம். இருந்தாலும் அதை உடனடியாகக் கண்டுபிடித்து தண்டிக் கின்ற அந்தக் காரியங்களே தொடர்ந்து இந்த ஆட்சியில் நடைபெற்று இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. அதே கலாச்சாரம் தானே இப்போதும் என்று கேட்டு விடக்கூடாது. இப்போது இருந்தாலும்கூட, அந்தக் கொலை நிகழ்ச்சிகள் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும்கூட- உடனடி யாக இந்த அரசு, காவல் துறை, நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்கிற அந்தப் பொறுப்பு மிகுந்த காரியத்தை நடத்தி யிருக்கிறது என்பதற்காகத்தான் இவைகளை எல்லாம் சொல்கிறேன்.

**23.7.96** அன்று மாட்டு சேகர் என்ற ஒரு ரவுடியும் அவனது நண்பர்களும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார்கள். அதை இந்த அவையிலே பலரும் பாராட்டி இருக்கிறார்கள். ரவுடிகளை அடக்குவதற்கு இந்த அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கை யையும், காவல் துறை அதன் காரணமாக மேற்கொண்டிருக்கிற கடமையையும் இந்த அவையிலேயே பலரும் பாராட்டியிருக் கின்றார்கள்.

> மற்றவர்களை விமர்சிக்கிறபோது,
> விமர்சிப்பவரின் மனச்சாட்சி
> முணுமுணுப்பதை இந்த விமர்சகர் காது
> கொடுத்துக் கவனிப்பது, அவருக்கும் நல்லது;
> சமுதாயத்திற்கும் நல்லது.
>
> **– கலைஞர்**

**27.7.96** அன்று, புரசைவாக்கத்தில் ரவுடிகள் செந்தில் குமார் என்ற குமார், குமர குருபரன், முத்துக்குமார், குமரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருக் கிறார்கள். **31.7.96** அன்று வளசரவாக்கம் சுதாகர் ரெட்டி அவர்களுடைய மகன் சுதீரை கடத்திச் சென்ற ரவுடிகள் ஆசைத்தம்பி, மனோ மற்றும் கோபால் ஆகியோர் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதைப் போல கபிலன் என்ற ஒரு பெரிய ரவுடி காவல்துறையினரால் அடையாறு பக்கத்திலே சுட்டுக்கொல்லப்பட்டான். இவர்கள் எல்லாம் சுட்டுக் கொல்லப்பட்ட போது மகிழ்ச்சி தெரிவித்துப் பாராட்டி யவர்கள் பலர் உண்டு.

தினந்தோறும் ரவுடிகளுடைய தொல்லை இன்றைக்கும் இருக்கிறது. ஒரு 5, 6 பேரை சுட்டுக் கொன்றுவிட்ட காரணத்தால் ரவுடி ராஜ்யமே ஒழிந்துவிட்டது என்று சொல்ல முடியாது. ரவுடிகள் ஓரளவுக்கு இன்றைக்கு அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அச்சத்தை ஏற்படுத்தியிருப்பது இந்தக் காவல்துறை, இந்த அரசு. இந்த அரசை ஊக்கப்படுத்தி காவல்துறையை ஊக்கப் படுத்தி இந்த ரவுடி ராஜ்யத்தை ஒழிப்பதற்கு எல்லோரும் முன்வர வேண்டும்.

கொலைகளைப் பற்றி இங்கே பேசுகிற போது நம்முடைய பா.ஜ.க. உறுப்பினர் நண்பர் வேலாயுதன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கடந்த சில ஆண்டுகளில் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் 27 பேர் கொல்லப்பட்டிருப்பதாக இங்கே உருக்கமாகச் சொன்னார்கள். பா.ஜ.க.வினுடைய தலைவர்கள் கொடுத்துள்ள அந்தச் செய்தி

இந்த ஆட்சியிலே என்று சில பத்திரிகை களிலும், கடந்த சில ஆண்டுகளில் என்று சில பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது. எனவே தான், இந்த 27 கொலைகளும் இந்த ஆட்சி யில் நடைபெற்றது என்று யாரும் எண்ணிக் கொள்ளக் கூடாது.

1989-ஆம் ஆண்டு, 31.8.89 அன்று கோவையில், கழக ஆட்சியின்போது, வீர கணேஷ் என்ற இந்து முன்னணிக்காரர் படுகொலை செய்யப்பட்டார். 24.3.90 அன்று திண்டுக்கல்லில் நாகராஜ் என்பவர் படு கொலை செய்யப்பட்டார். அந்த இரண்டு நிகழ்ச்சிகளும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்றன. அதற்குப் பின்னால் வந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 5.9.91 அன்று கோவையில் வீரசிவா என்ற சிவக்குமார் கொலை செய்யப்பட்டார். 4.12.92 அன்று ராமேஸ்வரத்தில் முனியசாமி என்பவர் கொலை செய்யப்பட்டார். 8.8.93 அன்று சென்னையில் குண்டு வீச்சில் 11 பேர், காசிநாதன், தேசிகன், சேஷாத்திரி, ராம சுப்பிரமணியன், பாலன், ராஜேந்திரன், ராமகிருஷ்ண ரெட்டி, பிரேம்குமார், மோகன பிரேம்குமார், லலிதா, ரவீந்திரன் ஆகிய 11 பேர் கொல்லப்பட்டார்கள். 10.10.94 அன்று மதுரையில் ராஜகோபாலன், இந்து முன்னணித் தலைவர் கொலை செய்யப் பட்டார். 14.4.95 அன்று சென்னையில் பைபிள் சண்முகம் என்பவர், குண்டு வீச்சில் கொலை செய்யப்பட்டார். 15.4.95 அன்று சென்னை புதுப்பேட்டையில் பிரபு என்பவர் கொலை செய்யப்பட்டார். 16.4.95 அன்று கோவையில் ராஜேந்திரன் என்பவர் படுகொலை செய்யப்பட்டார். 3.7.95 அன்று நாகையில் திருமதி தங்கம் என்பவர் குண்டு வீச்சில் கொலை செய்யப்பட்டார். 5.7.95 அன்று நாகையில் முருகன் என்பவர் கொலை செய்யப்பட்டார்.

இவை எல்லாம் முன்பு நடைபெற்றன.

**கொலைகள் பரிகாரம் ஆகுமா?**

பிறகு இந்த ஆட்சியில் என்று எடுத்துக் கொண்டால் 1.12.96 ல் உத்தமபாளையத்திலே ஆறுமுகம், 3.1.97ல் ரங்கநாதன், 10.1.97ல் எஸ்.டி. மாணிக்கம் மற்றும் துரைராஜ், இன்று தாம்பரத்தில் ராமச்சந்திரன் என்ற இந்தக் கொலைகள்.

நான் இந்த எண்ணிக்கையை ஒப்பிட்டுக் காட்டி இந்த ஆட்சியை விட அந்த ஆட்சி யிலே அதிகக் கொலைகள், அந்த ஆட்சியை விட இந்த ஆட்சியிலே குறைவான கொலைகள் என்று கூறி அந்த விவாதத்திற்கு வர விரும்பவில்லை. இப்படி ஒரு நிலையை, தமிழகத்தில் இந்து முன்னணியினர் மற்றும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடையே ஏற்பட்ட நிலையை வரவேற்பதற்கு நாம் யாரும் தயாராக இருக்கமுடியாது.

சொல்லிக்கொண்டே இருக்கிறோம். ஒவ்வொரு முறையும் பேசிக்கொண்டே இருக்கிறோம். இது பெரியார் பிறந்த மண், காமராஜர் பிறந்த மண், பேரறிஞர் அண்ணா பிறந்த மண், காயிதேமில்லத் பிறந்த மண், இங்கே மதவாதங்களுக்கும், சாதிச் சண்டை களுக்கும் இடமில்லை என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதேநேரத் தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இத்தகைய வன்முறைச் செயல்கள் மத வெறியின் காரணமாக நடைபெற்று விடு கின்றன. மத வெறி ஆட்டத்திலே ஈடுபடுகின்ற வர்கள், இந்து முன்னணி என்ற பெயரால் ஈடுபட்டாலும் அல்லது இஸ்லாமிய சமுகத்தின் பெயரால் ஈடுபட்டாலும் எந்த அமைப்பின் பெயரால் ஈடுபட்டாலும் அவர்கள் எல்லாம் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நான் இந்த

> **வாழ்க்கை என்பது அவனவன் வாழ்வதற்கு என்று மட்டுமே என்று கருதக் கூடாது; மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.**
>
> **– தந்தை பெரியார்**

அவையிலே தெரிவித்துக் கொள்ள வேண்டி யவனாக இருக்கிறேன்.

ஒரு கடுமையான நடவடிக்கையின் மூலமாகத்தான் அவர்களை எல்லாம் சீர்திருத்த முடியும் என்றால், அந்தக் கடுமையான நடவடிக்கையை எடுக்கவும் இந்த அரசு தயங்காது என்பதை நான் திட்டவட்டமாக இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

கொலைகள் பிரச்சினைக்குப் பரிகாரம் ஆகாது. கருத்துக்குக் கருத்து, எழுத்துக்கு எழுத்து, பேச்சுக்குப் பேச்சு என்கின்ற அளவில் எண்ணங்களை வெளியிட்டு சிலரைத் திருத்த முற்பட வேண்டுமே அல்லாமல், கொலையினால் எப்படி ஒரு கொள்கையை திணித்துவிட முடியும்? ஒரு கொள்கையை- பரப்பி விட முடியும்? என்பதை அவர்கள்- இந்து முன்னணியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இஸ்லாமிய சமுதாயத்தினுடைய மன்றங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய தீவிரவாதிகள் இருதரப்பிலும் இருக்கிறார்கள்.

இஸ்லாமிய சமுதாயத்திலே ஒரு கொலை விழுந்தால், மறுநாள் இந்து சமுதாயத்திலே இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட வேண்டும் என்று நியதி

இல்லை. இதுபோல் தொடர்ந்து நடக்கக் கூடாது என்று பிரதிக்ஞை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக பழிக்குப் பழி என்ற முறையிலே வெட்டிக் கொண்டே போனால் நாடு காடாகி விடும், இரத்தக் களறிதான் மிஞ்சும். இதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

**பழனிபாபா படுகொலை**

நம்முடைய நண்பர் பழனிபாபா கொல்லப் பட்டு விட்டார். அவர் தமிழ்நாட்டிலே உள்ள எல்லாத் தலைவர்களிடத்திலும் நட்பும் கொண்டிருந்தார், விரோதமும் கொண்டி ருந்தார். அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே நண்பராக இருந்தார். பிறகு எம்.ஜி.ஆர். ஆட்சியிலே அவர் கண்டிக்கப்பட்டார். தண்டிக்கப்பட்டார் என்றுகூட கருதுகிறேன். சிறைச்சாலைக்குச் சென்றதாகக் கூட நினைவு.

பிறகு எனக்கு நண்பராக இருந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளுக்கு ஆதரவாகப் பேசினார். பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிர்ப்பாகவும் பேசினார். அப்துல் சமது அவர்களுக்கும் நண்பராக இருந்தார், லத்தீப் அவர்களுக்கும் நண்பராக இருந்தார். பிறகு இந்த இருவருமே கூட, அவர் மேடைக்கு வராமல் இருப்பது நல்லது என்று சொல்லு கின்ற அளவுக்கு அவருடைய பேச்சு அதிக உஷ்ணத்தோடு, அதிக கொதிப்போடு அமைந் ததையும் எல்லோரும் அறிவீர்கள்.

எனவே, அவர் பேசியது அவருடைய கொலைக்குக் காரணமாக இருக்கக்கூடாது. அதற்குச் சட்டம் இருக்கிறது. அந்தப் பேச்சை எதிர்கொள்ளக்கூடிய வாதங்கள் மற்றொரு முனையில் இருக்கவேண்டுமேயல்லாமல் அது கத்தி முனையில் தீர்மானிக்கக் கூடிய செய்தியாக இருந்துவிடக்கூடாது. பழனி பாபாவினுடைய கொலைக்கு, நானும் இந்த அரசும், ஏன்- இங்கே வீற்றிருக்கின்ற அவையிலுள்ள அத்தனைப் பேரும் தங்களு டைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியவர்கள்தான்; தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, இப்படிப்பட்ட நிகழ்வுகளிலே, எதிரிகள் தப்பித்துவிடாமல், கொலையாளிகள் தப்பித்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை உணர்வு அரசுக்கும் இருக்கிறது, காவல்துறைக்கும் இருக்கிறது. அந்தப் பொறுப்பை நாங்கள் நிறைவேற்று வோம்.

உரையினிடையே சுப்பராயன் அவர்கள், கூட்டுறவுத் துறையால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகளில், விற்பனையாளர்களுடைய பணியைப் பற்றியும், அவர்களுக்கு இந்த அரசு செய்யவேண்டிய சலுகை அல்லது உரிமை அல்லது உதவி, இதைப் பற்றியும் எடுத்துச் சொல்லி, அதற்கு முதல்வர் பதில் அளிப்பார் என்று கருதுகிறேன் என்று எண்ணுவதாகச் சொன்னார்.

நான் அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவது 5 ஆண்டுகள் பணி முடித்த விற்பனையாளர்களுக்கு 430 ரூபாய் அடிப்படைச் சம்பளம் என்றும் 5 ஆண்டுகள் பணி முடிக்காதவர்களுக்கு 800 ரூபாய் தொகுப்பு ஊதியம் என்றும் வழங்கப்பட்டு வந்தது. 800 ரூபாய் தொகுப்பு ஊதியத்தை, இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு, 11.9.96 அன்று 'ரெட்ராஸ்பெக்டிவ்' வுடன் 900 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. இதனால் 84 இலட்சம் ரூபாய் கூட்டுறவு நிறுவனங்களுக்கு அதிகமாகச் செலவும் ஏற்படும். கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் 3326 பேர் கட்டுனர் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் ரூ.600 தொகுப்பு ஊதியமாகப் பெற்று வந்தார்கள். இந்தத் தொகையை 800 ரூபாயாக 'ரெட்ராஸ்பெக்டிவ்'வுடன் 11.9.96 அன்று உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதனால், கூட்டுறவுச் சங்கங்களுக்கு 80 இலட்ச ரூபாயும், அரசுக்கு ஆண்டு ஒன்றிற்கு 27 இலட்சம் ரூபாயும் கூடுதலாக செலவாகும். இதற்கு மேலும் அவரது கோரிக்கை வளருமேயானால், அதைப்பற்றியெல்லாம் அலட்சியப்படுத்திவிடாமல், நிதிநிலை அறிக்கைக்கு முன்பு அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

தமிழ் ஆட்சி மொழித் துறை கடந்த ஆண்டில் என்ன செய்தது என்று ஞான சேகரன் கேட்டார். கேள்வியிலேயே அவர் அந்தக் கருத்தை வைத்தார். இந்த ஆட்சி பொறுப்பு ஏற்ற பிறகுதான், தமிழ் வளர்ச்சிக் காக, தமிழ் பண்பாட்டுத்துறை வளர்ச்சிக்காக ஒரு தனி அமைச்சகத்தையே உருவாக்கி இருக்கிறது என்பதை அவர் அறியாதவர் அல்ல.

ஆட்சி மொழித்துறையால் தமிழ் வளர வேண்டுமென்பதற்கு உடனடியாக 500 புதிய தமிழ் தட்டச்சுப் பொறிகள் வாங்கப்பட்டிருக் கின்றன. தட்டச்சுப் பொறிக்கும், தமிழுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டு விடக்கூடாது. தமிழில் அடிக்க வேண்டிய செய்திகளை யெல்லாம் தரவேண்டிய செய்திகளை யெல்லாம் அடிப்பதற்கு ஒரு தட்டச்சுப் பொறி தேவை. அதில் 500 பொறிகள் இப்போது வாங்கப்பட்டிருக்கின்றன. அப்படி வாங்கிய காரணத்தினால், தற்போது 874 ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகள் 374ஆகக் குறைக்கப்பட்டுவிட்டன. 304 தமிழ் தட் டச்சுப்பொறிகள் 804ஆகக் கூடியுள்ளது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எடுக்கப் பட்ட 500 ஆங்கில தட்டச்சுப் பொறிகளின் விசைப்பலகை- 'கீபோர்டு' இவைகளெல்லாம் கூட தமிழிலே மாற்றப்பட உள்ளன. அரசு ஆணைகள் அனைத்தும் தமிழிலும் வெளி யிடப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆங்கிலத்திலும் ஆணைகள் வரவேண்டும். தமிழிலும் அந்த ஆணைகள் வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தமிழிலே எழுதும் கடிதங் களுக்கு, வேண்டுகோளுக்கு, முறையீடு களுக்கு, அரசு அதிகாரிகள் தமிழிலேயே அவர்களுக்கு விடை தரவேண்டுமென்றும் அப்படி எழுதாத அலுவலர்கள் குறித்து செய்தி வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்ற குறிப்பு அவர்களுக்கு இப்போது அனுப்பி வைக்கப்படுகிறது. கோப்புகளிலே கூட கூடுமானவரையில்- நான் முழுவதும் என்று சொல்ல மாட்டேன், கூடுமானவரை யிலே, பெரும்பாலும் தமிழிலேயே இன்றைக் குக் கோப்புகள் அமைச்சர்களுக்கு வரு கின்றன. ஒரு சில கோப்புகள் பழைய கோப்புகள், தொடர்ந்து எழுதப்பட வேண்டிய கோப்புகள். இவைகள் வேண்டுமானால் ஆங்கிலத்தில் வரலாம். கவர்னருக்கு அனுப்ப வேண்டிய கோப்புகள் இதுவரையில் தமிழிலே வரவில்லை. ஆங்கிலத்திலே மாத்திரம் வந்தன. இனிமேல் தமிழிலும் வரலாம். ஏனென்றால், இப்போது வந்திருக்கிற கவர்னர் தமிழும் தெரிந்திருக்கிற காரணத் தால் – ஆளுநருக்கு அனுப்பக்கூடிய கோப்புகளும் கூட தமிழிலேயே அனுப்பக் கூடிய அளவிற்கு இந்த அரசு தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்குவதிலே அக்கறை கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரி, நெல்லை கட்டபொம்மன், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், மதுரை, கோவை, தர்மபுரி, திருச்சி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் ஆட்சி மொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு, அதிகாரிகளுக்குத் தெளிவான கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன பொதுவாகவும், துறை வாரியாகவும், தனித் தனியாகவும் 84 அகராதிகளை மறு ஆய்வு செய்து, அத்தோடு புது கலைச்சொற்களையும் சேர்த்து, புதிய அகராதி விரைவில் வெளியிடப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வணிகர்கள் தங்கள் வணிக நிறுவனத்தின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுத வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்களும் அதை ஏற்றுக் கொண்டி ருக்கிறார்கள். வணிகர்கள் பெயர்ப் பலகை களில் பயன்படுத்திட 515 சொற்களைக் கொண்ட வணிகச் சொற்பட்டியல் ஒன்று வெளியிட்டு அது நாடெங்கும் இன்றைக்குப் பரப்பப்பட்டுள்ளது. இவைகள் தமிழுக்காக, தமிழ் ஆட்சி மொழிக்காக இதுவரை ஆற்றியுள்ள பணிகள்.

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. வி.கே.லட்சுமணன் அவர்கள் தியாகிகள் மானியத்தைச் சற்று அதிகப் படுத்தித் தர வேண்டுமென்று கேட்டிருக் கிறார். ஓய்வூதியத்தையும் அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார். நிதி நிலை அறிக்கையினுடைய விவாதம் முடிந்து பதில் அளிக்கின்ற நேரத்தில், அல்லது நிதிநிலை அறிக்கையில் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து ஏற்கப்படும் என்ற உறுதியை நான் அவர்களுக்கு வழங்கு கின்றேன்.

நம்முடைய உறுப்பினர்கள் சில பேர் இங்கே பேசும்போது ஊழல் பேர்வழிகள் மீது அரசு, எடுத்த நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை யெல்லாம் எடுத்துக் கூறி இருக்கின்றீர்கள். அரசு, ஊழல் புரிந்தவர்கள் மீது நீதிமன்றத் தின் சார்பாக, சட்டத்தின் சார்பாக எடுக்கப் பட வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து வருகிறது.

நான் அதை விரிவாகப் பேச விரும்பா ததற்குக் காரணம், அதிலேயே நம்முடைய பொழுதைக் கழித்து விடக்கூடாது என்பதற் காகத்தான். மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், மக்கள் பிரச்சினைகள் இவற்றிற்காக நாம் நேரத்தைச் செலவிட வேண்டும். அது ஏதோ ஒரு சைடு. இவைகளையெல்லாம் கெடுக்க வருகின்ற நல்ல திட்டங்களை எல்லாம் பாழ்படுத்த வருகின்ற சில செயல்களைத் தடுக்க வேண்டும். நடந்த செயல்களைத் தடுப்பதன் மூலம், அதைத் தண்டிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இந்த அரசின் சார்பிலும் அத்தகைய தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அந்த முறையிலேதான் இப்போது நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் ஆட்சிக்கு வந்தால், வராதா என்று கேட்டால், வரட்டும் என்ற அந்த எண்ணத்தோடுதான் நாங்களும் இன்று நடவடிக்கை எடுத்து வருகின்றோம். தாராளமாக அதைச் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

ஏனென்றால் அப்படிச் சொல்வதற்குக் காரணம், எந்தக் குற்றமும் நடைபெறாமல் பார்த்துக்கொள்வது என்கின்ற சத்தியம் செய்துவிட்டுதான் இந்த ஆட்சிப் பொறுப் பிலே நான் அமர்ந்து இருக்கின்றேன். அப்படி குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அது தி.மு.க.வாக இருந்தாலும், தோழமைக் கட்சியாக இருந்தாலும்- யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

நான் சொன்னதைத் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன் அது யாராக இருந்தாலும், என் மகனாக இருந்தாலும், யாராக இருந் தாலும் நிச்சயமாக ஊழல் புரிந்தால் அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை உண்டு என்பதைத் தெரிவித்து இந்த அரசு அந்த நல்ல வழியிலே நடைபோட அனை வரும் ஆதரவு தரவேண்டுமென்று கேட்டு, கவர்னர் உரையிலே கொடுத்துள்ள திருத் தங்கள் அல்லது பிரேரணைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு – உரையாற்றிய நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன்."

காதுநுகர் நாடகம்

# இளமைக்கடலன்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

## 1. பட்டு வீடு

**பட்டு:** யார்?

**அரச:** அரசப்பன்.

**பட்டு:** ஓ வாருங்கள். உட்காருங்கள் அத்தான்.

**அரச:** என்ன பட்டு, உன் குரலில் இத்தனை தளர்ச்சி?

**பட்டு:** ஒன்றுமில்லை...நமக்குள் ஏற்பட்டுள்ள தொடர்பு ஊர் அறிந்ததாகிவிட்டதாகி விட்டது. நம் திருமணம் விரைவில் நடந்துவிட வேண்டுமென்று என் பெற்றோர் கவலை அடைந்திருக்கிறார்கள்.

**அரச:** நான்தான் சொன்னேனே, என் காதல் பித்துக்காக உன்னையும், திரண்ட சொத்தாக அந்தத் தங்கத்தையும் (நான்) மணந்துகொள்ள வேண்டுமென்று! இதை இனிய முறையில், எடுத்துச் சொல்ல வேண்டாமா, நீ உன் பெற்றோருக்கு?

**பட்டு:** ஒப்புவார்களா?... உம்...ஒப்புவார்கள்... ஒப்பித்தான் தீரவேண்டும் அவர்கள். எதுவும் பேசிக் கொள்ளாமல் என்னைப் பறி கொடுத்தேன் உங்கட்கு! இப்போது இதுவும் சொல்வீர்கள், எதுவும் சொல்வீர்கள். நல்லது அத்தான்! ஆமாம். முதலில் எனக்கும் உங்கட்கும் திருமணமா? அல்லது தங்கத் திற்கும் தங்கட்குமா?

**அரச:** தங்கத்தைத்தான் முதலில் மணந்து கொள்ள வேண்டும்.

**பட்டு:** அத்தான், கேளுங்கள், நான் பட்டு. முதலில் பட்டணிந்துதான், பிறகு தங்கத்தையணிவார்கள்!

**அரச:** இல்லையே, தங்கத்தைப் பெற்றால் தானே பட்டைப் பெற முடியும்? இதில் இன்னொன்று, என்னென்று கேள்.

**பட்டு:** என்ன?

**அரச:** தங்கம் என் தாய் மாமன் மகள், இருந்தாலும் உன் அகமொத்த தோழி. அவளையும் என்னையும் ஒன்றுபடுத்தும் தொல்லை என்னைச் சேர்ந்ததில்லை.

**பட்டு:** ஐயோ அத்தான். தங்கம் அந்த இளவழகன் மேல் உயிரை வைத்திருக்கிறாள். தங்கத்தின் தந்தையோ, மகள் விருப்பத்திற்கு மாறாக நடப்பதில்லை. மேலும் நோயுற்றவர் தந்தை; தாயற்றவள் தங்கம்.

**அரச:** தங்கம் என் மைத்துனி. நினை விருக்கிறதா?

**பட்டு:** எனக்கு நினைவிருக்கிறது. அவளுக்கு நினைவிருக்க வேண்டும் அத்தான்.

**அரச:** என் கண்ணல்ல. நீ முயன்றால் அவளுக்கு அதை நினைவூட்டலாம். நீ முயன்றால் என்னோடு கூட்டலாம். மனமார முயற்சி செய். என் பங்கில் இரு. உன்னை நம்பி இருக்கிறேன். என்னை நீ நம்பு.

**பட்டு:** நம்பியதின் பயனைத்தானே இதோ அறுவடை செய்கிறேன். இன்னும் நம்ப வேண்டுமா? நம்புகிறேன்.

**அரச:** வருந்தாதே பட்டு. இனிமேலும் நீ வருந்தும்படி நான் நடக்க மாட்டேன்! முகத்தைக் காட்டு என் கருத்தை முடி—என் கண்ணல்ல.

(முத்தத்தின் ஒலி.)

## 2. தங்கம் வீடு

**பட்டு:** தங்கம் எங்கே தங்கம்?

**வேலைக்காரி:** அவுங்கப்பாகிட்ட பேசிக்



கிட்டு இருக்காங்க. அதோ வாராங்களே.

**தங்கம்:**

முல்லைமலர் கேட்டேன்
இல்லை என்று சொல்லாமல்
முடித்துக்கொள் என்றாரடி தோழி.

**பட்டு:** **(பேச்சு)**

ஓகோ அப்பாவா சொன்னார் தங்கம்? சொந்த மாமனைக் கட்டிக்கொள்ளச் சொல்லவில்லையா?

**தங்கம்:**

'சாகும்போது உன் தாய் சொல்லியபடி நீ உன் மாமனை மணந்துகொள்வதுதானே' என்று சொன்னார் தந்தை. நான் சொன்னேன், 'மாமாவின் நடத்தையை, என் தாய் இப்போது இருந்து பார்த்தால், அப்படிச் சொல்ல மாட்டார்கள்' என்றேன். என்றேனா, 'சரியம்மா சரியம்மா, நீ இளவழகனையே மணந்து கொள்ளம்மா' என்று முடித்து விட்டார் வாய்குளிர, மனம் குளிர.

**பட்டு:** திருமணம்?

**தங்கம்:** இன்னும் நாலைந்து நாளில்.

**பட்டு:** மிக்க மகிழ்ச்சி தங்கம். எனக்கு விடை கொடு.

**தங்கம்:** ஏன் பட்டு?

**பட்டு:** அம்மா விரைவில் வரச் சொன்னார்கள். நீ படித்துக் கொண்டிரு.

**தங்கம்:** சரி.

## 3. தங்கம் வீடு

(காற்செருப்பின் நடை ஓசை)

**தங்கம்:** வேலைக்காரி, வெளியிற் போ, வெளியிற் போ.

**வேலை:** ஏம்மா?

**தங்கம்:** அவர் வருகிறார், போ போ.

**வேலை:** வரலையம்மா.

**தங்கம்:** அதோ காலடி ஓசை.

**வேலை:** ஏம்மா கவுந்து படுத்துகிட்டிங்க கட்டில்லே?

**தங்கம்:** அதெல்லாம் கேளாதே, போ...

**இளவழகன்:**

(நாற்காலி இழுக்கப்படும் ஓசை, செம்பு—விரலால் தெரிவிக்கப்படும் ஓசை)

தங்கம்! தங்கம்!

(உடம்பில் கையால் தட்டப்படும் ஓசை)

தூக்கமா?

**தங்கம்:** இல்லை அத்தான் இல்லை. நீங்கள் வந்தவுடன் கையால் தொட்டு எழுப்புவதுதானே! என்மேல் கைபட்டால் ஒடிந்தா போகும், தாமரைத்தண்டு சடுக்கென்று ஒடிவது போல?

**இளவழ:** இப்படி என்று தெரிந்தால் தப்படிப்பதுபோல் சாத்தியிருப்பேனே! அது போகட்டும் தங்கம், சேதியைச் சொல்ல மாட்டேன் என்கிறாயே?

**தங்கம்:** சொல்லத்தான் தொடங்குகிறேனே அத்தான்.

**இளவழ:** காயா? பழமா?

**தங்கம்:** எப்படித் தெரிகிறது உங்கட்கு?

**இளவழ:** உன் முகம் என்னமோ முந்தாநாள் பூத்த தாமரை மாதிரி இருக்கிறது.

**தங்கம்:** அப்படியானால் கெட்ட செய்தி தானே? ஆமாம், உங்களை நான் மணந்து கொள்ளக் கூடாதென்று அப்பா சொல்லிவிட்டார்.

**இளவழ:** ஆ, அப்படியா?

**தங்கம்:** இல்லையில்லை! நல்ல செய்திதான்.

**இளவழ:** மெய்தானா தங்கம்?

**தங்கம்:** மெய்தானா, என் முகம் முந்தா நாள் மலர்ந்த தாமரை போலிருப்பது?

**இளவழ:** இந்தா, இன்று இதழ் விரித்த செந்தாமரை உன் முகம்.

**தங்கம்:** 'மாமனை மணந்து கொள்கிறாயா?' என்றார் அப்பா. 'முடியாதப்பா' என்றேன் நான். அம்மா சாகும்போது அப்படித்தானே சொன்னாள் என்றார். இப்போது அம்மா இருந்தால் அப்படிச் சொல்லமாட்டார்கள் என்றேன். யாரை மணந்து கொள்ள நினைக் கிறாய் என்று கேட்டார். சொன்னேன்...

**இளவழ:** என்ன சொன்னாய்?

**தங்கம்:** உங்கள் பேரை.

**இளவழ:** எனக்கு இரண்டு பேர் உண்டு. எதைச் சொன்னாய் என்றால்?

**தங்கம்:** சொன்னேன். அவர் தெரிந்து கொண்டார். அப்புறம் என்ன?

**இளவழ:** அப்பாவிடம் நீ சொல்லியபடி சொல். சொல்லுகிறாயா இல்லையா? நான் போகிறேன்.


**தங்கம்:** "இளவழகனை" என்றேன்.

**இளவழ:** அப்படிச் சொல், காது குளிர.

**தங்கம்:** மனமார ஒப்பினார், சரி என்று செப்பினார். இதில் இன்னொரு மகிழ்ச்சிக் குரிய செய்தி. என்ன என்று கேளுங்கள்?

**இளவழ:** என்ன என்று கேட்க வேண்டும். விரைவில் சொல்ல மாட்டாயா தங்கம்?

**தங்கம்:** இன்னும் இரண்டு மூன்று நாட்களில்



திருமணம். ஏன் என்று கேளுங்கள்.

**இளவழ:** ஏன்?

**தங்கம்:** அப்பாவுக்கு உடல் நலம் இல்லை. சீர்கேடு முற்றிக்கொண்டு வருகிறது அத்தான். இன்றைக்கே மாப்பிள்ளை வீட்டார் அப்பாவைக் கண்டு பெண் கேட்டு, நாளையும் குறித்துவிட வேண்டும். விரைவில் போய் இதைச் சொல்லுங்கள், உங்கள் பெற்றோருக்கு.

**இளவழ:** அப்படியானால், நான் விரைவில் வீட்டிற்குப் போகவா?

**தங்கம்:** உம். பின்னென்ன?

**இளவழ:** சரி, போய் வருகிறேன். (நாற்காலி தள்ளப்படும் ஓசை.)

**தங்கம்:** இன்னும் சிறிது நேரம் இருங்கள் அத்தான். உட்காருங்கள்.

**இளவழ:** இருக்கவும் கூடாது. போகவும் கூடாது.

**தங்கம்:** விரைவில் போனால்தான், அவர்களை விரைவில் அனுப்ப முடியும் என்கிறீர்களா?

**இளவழ:** நானா சொன்னேன்? நீதானே தங்கம் சொன்னாய்! என் கரும்பல்ல, விடை கொடு, போய் வருகிறேன்.

## 4. தங்கம் வீடு

**அரசப்பன் தந்தை:** தெ. செங்கேணி. ஐயா என்ன செய்கிறார்?

**வேலைக்காரி:** ஆரு, தங்கம் அவுங்கப்பா தானே?

**அரசப்பன் தந்தை:** ஆமாம்.

**வேலைக்காரி:** அவுங்களுக்குத்தான் உடம்பு நல்லால்லியே. சும்மா வந்து வந்து தொல்லை குடுத்தா?

**அரசப்பன் தந்தை:** சீ, ஓடிப்போய் ஒங்க மச்சான் வந்திருக்காருண்ணு சொல்லு.

**வேலைக்காரி:** ஐயா...ஐயா...

**தங்கத்தின் தந்தை:** ஏன்?

**வேலைக்காரி:** அரசப்பா அவுங்க அப்பா வந்திருக்காரு. தூங்றார்ண்ணு சொல்லிப் புடட்டுமா?

**தங்கத்தின் தந்தை:** சீச்சி, அனுப்புடி.

**அரசப்பன் தந்தை:** எப்படி இருக்கிறது உடம்பு?

**தங்கத்தின் தந்தை:** சீர்கேடு மிகுதியாகிறது. (இருமல் ஓசை) ஐந்தாந் தேதி தங்கத்தின் திருமணம். (இருமல்) இடையில் மூன்று நாள்தான் இருக்கிறது (இருமல்).

**அரசப்பன் தந்தை:** மாப்பிள்ளை?

**தங்கத்தின் தந்தை:** இரிசப்பன் மகன் இளவழகன். (இருமல்) நல்ல பையன். (இருமல்) படித்த பையன்.

**அரசப்பன் தந்தை:** உரியவன் இருக்கையில் ஏன் அப்படி?

**தங்கத்தின் தந்தை:** அல்ல, அல்ல. (இருமல்) தங்கம் இளவழகனைக் கட்டிக் கொள்வேன் என்னும்போது? வருத்தப்படாதே. இருந்து நடத்து நீ திருமணத்தை. (இருமல்) படுத்த படுக்கையை விட்டு என்னால் நகர முடியாது (இருமல்).

**அரசப்பன் தந்தை:** நம் பையனுக்கு உங்கள் பெண்ணைக் கொடுப்பதால் சொத்து அயலில் போகாதே?



**"நீ புகை பிடிப்பாயா?"**
**"ஊகூம்."**
**"குடிப் பழக்கம் உண்டா?"**
**"இல்லை!"**
**"குதிரைப் பந்தயம்?"**
**"சேச்சே! பிடிக்காது!"**
**"அப்ப... ஒரு கெட்ட பழக்கமும் உனக்கு இல்லையா?"**
**"ஒண்ணே ஒண்ணு உண்டு- பொய் மட்டும் சொல்லுவேன்!"**

**தங்கத்தின் தந்தை:** அதெல்லாம் எனக்குத் தெரியும்.

**அரசப்பன் தந்தை:** சரி.

**தங்கத்தின் தந்தை:** கணக்கப்பிள்ளை இருக்கிறார். ஆட்கள் இருக்கிறார்கள். ஆக வேண்டியதைப் பார். தொடங்கு. போ...

## 5. தங்கம் வீடு

**இளவழ:** என்ன ஊன்றிப் படிக்கிறாய்?

**தங்கம்:** வாருங்கள் அத்தான். நல்லவேளை. என் மாமா இருக்கிறாரே? அவர், எழுதுகிறார் காதற் கடிதம், படியுங்கள்.

**இளவழ:** மாமா வண்டு, மைத்துனியாகிய மலர்க்காட்டைக் கேட்கிறது. உன்னிடம் வந்தால் வா என்று வரவேற்பாயா? பதில் எழுது ஒரு பேச்சில், வா என்று சொன்னால், தங்கம் உன் வாய் மலரா கசக்கும்? பதிலா எழுதுகிறாய்? படி தங்கம்.

**தங்கம்:**

> செந்தாமரை மலர்க்கும் செவ்விதழ்க்கும் தேனுக்கும்
> வந்தால் வரவேற்க ஒண்ணாது செந்தேனை
> வீழ்த்துகின்ற தோட்டம் தோட்டக்காரன் மேன்மையினை
> வாழ்த்துமணப் பந்தலுக்கு வா.

இதை உங்கள் கையாலேயே அதோ இருக்கும் அவன் ஆளிடம் கொடுத்து அனுப்புங்கள் அத்தான்.


**இளவழ:** இதை எடுத்துப் போய்க் கொடப்பா.

**வேலைக்காரன்:** நல்லதுங்க.

**தங்கம்:** ஏன் அத்தான், விடிந்தால் திருமண மாயிற்றே. உடுப்பெல்லாம் தைத்தாகி விட்டதா?

**இளவழ:** விடிந்தாலா? இன்றிரவுதான் திருமணம், இன்றிரவு நாலு மணிக்கு. இன்னும் சட்டை தைத்து முடியவில்லையாம். சட்டையில்லாவிட்டால் என்ன தங்கம்? நான் போகிறேன். வேலை இருக்கிறது.

**தங்கம்:** சரி அத்தான்.



★ பலமுள்ளவர்களுக்கு உள்ள உரிமைகளையெல்லாம் பலமில்லாதவர்களும் பெற்றிருக்கவேண்டும்; அதுதான் உண்மையான நாடு.

-காந்தியடிகள்

## 6. தங்கம் வீடு

**உறவு1:** மூன்று மணி ஆகிறது. மேளக்காரர் நடையில் படுத்திருங்கிறாங்க, எழுப்புங்க.

**உறவு2:** ஏன் முருகேசு. வாழ மரத்தெ கட்றது எப்போ? எழுந்திருப்பா.

**உறவு3:** அடுப்பு மூட்றதுதானே, சமையல் காரரே?

**உறவு4:** வர வேண்டிய பெரியவர்களுக்கு வண்டி அனுப்பியாச்சா?

(இசை முழக்கம்)

## 7. பட்டு வீடு

**அரசப்ப:** பட்டு, நீ திருமண வீட்டுக்குப் போகாதே. இங்கேயே இருந்துவிடு. ஏன் என்றால், அங்கே கலவரம் ஏற்படும்.

**பட்டு:** என்ன?

**அரசப்ப:** திருமண வேளையில் இளவழகன் இருக்கமாட்டான்.

**பட்டு:** ஏன்?

**அரசப்ப:** அவனை அங்கில்லாமல் செய்து விடுவேன், எப்படியாவது.

**பட்டு:** உயிருக்குக் கெடுதி நேர்ந்துவிடக் கூடாது அத்தான்.

**அரசப்ப:** இல்லை இல்லை. மயக்க மருந்தைக் கொடுத்துக் கடற்பாலத்தின் அடியில் போட்டுவைத்துவிட எண்ணுகிறேன்.

**பட்டு:** இறந்துவிட்டால்?

**அரசப்ப:** இறக்கமாட்டான் பட்டு. வசம்பின் சாற்றையும் எலுமிச்சைச் சாற்றையும் கலந்து கொடுத்தால் உடனே மயக்கம் தீர்ந்துவிடும்.

தாலி கட்டும் வேளைக்கு அவன் இல்லாவிட்டால் நான் தங்கத்திற்குத் தாலி கட்டிவிடுவேன். அப்பாவும் அதுதான் சரி என்றார். இங்கேயே இரு.

**பட்டு:** சரி.

## 8. தெரு

**அரசப்ப:** ராமு! காருக்கு எண்ணெய் ஊற்றியாயிற்றா?

**ராமு:** ஆச்சிங்க.

**அரசப்ப:** மாப்பிள்ளையைக் கூப்பிடு விரைவாக.

**ராமு:** மாப்பிள்ளே, அரசப்பன் கூப்பிடராரு.

**அரசப்ப:** இளவழகரே, ஏறுங்கள் காரில், அந்தப் படவா இன்னும் தைக்கிறான் உடுப்பை. ஒருமுறை போட்டுப் பார்க்க வேண்டுமாம். உம். விடப்பா காரைக் கடற்கரை பக்கம் ஏறுங்கள், ஏறுங்கள், பும்பும்! (கார் ஊதும் ஓசை)

**இளவழ:** திருமணம் முடிப்பதென்றால் எவ்வளவு தொல்லை அரசப்பன்!

**அரசப்ப:** அதை ஏன் கேட்கிறீர்கள் இளவழகரே! காலைச் சிற்றுண்டியோடு சரி. இதுவரைக்கும் பச்சைத் தண்ணீரை வாயில் ஊற்றவில்லை. கேட்டால் கேளுங்கள், விட்டால் விடுங்கள். வானத்தின் கீழேயிருந்து சொல்லுகிறேன். என்னவோ சீமை இலந்தம் பழமாம், சென்னையிலிருந்து வந்தது. வாயிற் போடுங்கள் இதை.

**இளவழ:** நன்றாயிருக்கிறது! (இச் என்று சப்பும் ஓசை)

**அரசப்ப:** ராமு, மாப்பிள்ளையைக் கூப்பிடு இப்போது?

**ராமு:** மயான காண்டந்தானா?

**அரசப்ப:** இல்லை. மாலை வரைக்கும் மாப்பிள்ளைக்கு மழையும் வெயிலும் ஒன்றுதான். நிறுத்து காரை, இவனைத் தூக்கு. நடந்து போ. கடற் பாலத்தின் அடியில் கிடத்து. அப்படித்தான். இந்தா இந்தத் துணியால் மூடு, உச்சி முதல் உள்ளங்கால் வரைக்கும். வா போகலாம். (பும்...பும்).

## 9. தங்கம் வீடு

**ஐயர்:** பொண்ணு மாப்பிள்ளைக்கு வஸ்திரா பரணம் ஆகட்டும், நாழிகை ஆகிறது.

**உறவு1:** வாம்மா தங்கம், இப்படி வா. பொண்ணு தோழி ஆரு தைனாகி?

**உறவு2:** அவத்தான் அயிலாண்டம். அது கூடவா தெரியாது?

**உறவு3:** சித்தப்பா, மாப்பிள்ளை எங்கே சித்தப்பா?

**உறவு4:** இங்கேதான் இருப்பான். நீ வெத்லே கட்டே பிரிச்சி பட்டி கட்டு. ஆரத்தே கொண்டா. சந்தனம் கரை.

**இளவழகன் தாய்:** ஆமாம், நம்ப பையன் இளவழகன் எங்கே?

**இளவழகன் தந்தை:** இங்கேதான் இருப்பான்.

**இளவழகன் தாய்:** எங்கேயும் பார்த்தேனே, இல்லியே!

**ஐயர்:** பொன்னு மாப்பிள்ளை வரனும். வாத்யம், வாத்யம்.

**இளவழகன் தந்தை:** நிறுத்துப்பா வாத்யத்தே. பையன் எங்கே?

**உறவு1:** ஏன் வீராசாமி, பையனே பாத்தியா? குப்புசாமிக்குத் தெரியுமே. ஏன் குப்புசாமி, மாப்பிள்ளை எங்கே?

**உறவு:** நான் பார்க்கவேயில்லை. அதோ வராரே அரசப்பன், அவரெ கேட்டாத் தெரியுமே?

**இளவழகன் தந்தை:** என்னா அரசப்பா, இளவழகன் எங்கேயப்பா?

**ஐயர்:** முகூர்த்த வேளை தப்பிடப்படாது சீக்கிரம்.

**இளவழகன் தாய்:** பிள்ளையை யாராவது எங்கேயாவது இட்டுப் போய்க் கொன்னுட் டாங்களோ என்னமோ தெரியலியே.

**அரசப்ப:** நானும் இத்தனை நேரமாய் அலைந்து விட்டேன். இளவழகன் ஊரிலே இருக்கிறதாத் தெரியவில்லை.

**இளவழகன் தந்தை:** ஐயோ ஏன்?

**அரசப்ப:** இளவழகன் ஒருத்தியை வைப்பாட்டியாய் வைத்துக் கொண்டிருந் தாராம்.

**இளவழகன் தந்தை:** ஐயோ, அப்படிப் பட்டவனல்லவே.

**அரசப்ப:** கேளுங்கள். அவளும், அவளைப் பெற்றவர்களும் இளவழகனை மடக்கி, நீ திருமணம் செய்து கொண்டால் நாங்கள் போகிற வழி என்ன என்று சண்டை போட்டார்களாம். அதன் மேல் இளவழகன் 'நான் தங்கத்தைத் திருமணம் செய்து கொள்ளவில்லை உன்னையே நான் திருமணம் செய்து கொள்ளுகிறேன்; என்று அந்த வைப்பாட்டியையும், வைப்பாட்டியின் உறவினரையும் கூட்டிக்கொண்டு, வெளியூருக்குப் போய் விட்டாராம் என்று கேள்வி.

**இளவழகன் தந்தை:** அடாடா, என்ன மாறுபாடு.

**உறவு1:** பெரிய முட்டாத்தனமால்ல இருக்கு.

**உறவு2:** அப்போ என்னா பண்றது. ஒண்ணும் கெட்டுப்புடலே. இதோ இருக்கார் மலையாட்டம் அரசப்பன். இழுத்துவைத்து மணத்தை முடியுங்கள்.

**உறவு3:** ஆமாமாமாம்.

**உறவு2:** பெத்தவங்களே கேக்கணுமே!

**உறவு1:** மாப்புள்ளையெப் பெத்தவங்க ஒத்துக்கறாங்க, அந்தாண்ட பாத்த பொண்ணு ஒடையவங்க யாரு? அந்த மாப்பிள்ளையே பெத்தவங்கதானே? இது என்ன வெக்கக் கேடாருக்குது!

**உறவு2:** அது சரிதான்.

**உறவு3:** கொண்டா?

**உறவு4:** மாப்பிள்ளையெ தலையிலே தண்ணியே ஊத்திகினு வரச்சொல்லு. அவ்வளவுதான்.

**உறவு5:** ஏன் ஐயரே. முகூர்த்த வேளை இன்னும் இருக்குதில்லே?

**ஐயர்:** நல்லா இருக்குண்ணேன். மணி நாலுதானே ஆச்சி! இருக்கு! இருக்கு!

**உறவு1:** பொண்ணு எங்கே!

**உறவு2:** இதோ வருது. இட்டாங்க பொண்ணு மாப்பிள்ளையெ.

**உறவு3:** பொண்ணு எங்கே?

**உறவு4:** பொண்ணு காணலையே?

**உறவு5:** உம் அங்கே தானிருக்கும். எங்கே பூடும்?

## 10. கடற்கரை

**தங்கம்:**

கடலே! ஆழ்கடலே! உன் நடுவயிற்றில்
என்னை அடக்கிக் கொள்!

**பட்டு:** தங்கம்! தங்கம்!

**தங்கம்:** ஆ, யார் பட்டா!

**பட்டு:** ஆம் தங்கம், உன் மணவாளன் இதோ.

**தங்கம்:** அத்தான்!

**இளவழ:** கடலில் விழுந்து உயிர் விடவும் துணிந்தாயா? தங்கம், எனக்கு மயக்க மருந்தைக் கொடுத்து இங்கே போட்டுவிட்டுப் போய்விட்டான் அரசப்பன். வசம்பின் சாற்றையும் எலுமிச்சஞ் சாற்றையும் தந்து என்னைக் காத்தனர் உன் தோழியர்.

**பட்டு:** என் அருகில் உட்கார்ந்து கொள்! தங்கம், அருகில் வா. கடலில் வீழ்ந்து உயிர் விடம் துணிந்தாயா?

**தங்கம்:** ஆம் அத்தான், துன்பக் கடலில் தொலைந்திருப்பேன். ஆயினும் இன்பக் கடலில் இதோ நீந்தி விளையாடுகின்றேன்.

**பட்டு:** நீங்களும் இங்கேயே இருங்கள்! நான் அந்தக் குற்றவாளி அரசப்பன் நிலையைப் பார்த்து வருகின்றேன்.

**இளவழ:** பட்டு, கூடுமானால், இதே நேரத்தில் அரசப்பனை நீ மணந்து கொள்ள முயன்று பார்.

**பட்டு:** நல்லது, போகிறேன்.

**தங்கம்:** இளவழகன்.

## 11. தங்கம் வீடு

**மக்கள்:** தங்கமே, இளவழகே வாழ்க!

**தங்கம்:** பட்டு, மணம் முடிந்ததா உனக்கு?

**பட்டு:** ஆம் தங்கம்.

**மக்கள்:** இரு மணமக்களும் வாழ்க!




அவனுக்கு 13 வயதிருக்கும். துறுதுறு வென இருப்பான். இளமையிலே கொடுமை யான வறுமை. படிக்க வேண்டிய அந்த வயது அவனை வேலைக்குத் துரத்தியது. நியூயார்க்கிலுள்ள ஒரு தந்தி அலுவலகத் தில் மிகவும் குறைந்த சம்பளத்துக்கு வேலைக்குச் சேர்ந்தான்.

அவனைப்போல் பல சிறுவர்கள் வேலை செய்தார்கள். வருகின்ற தந்திகளை நகரிலுள்ள முகவரிகளுக்குக் கொண்டு சேர்ப்பதே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலை. எல்லா சிறுவர்களும் தந்தி வந்தவுடன் அதை எடுத்துக்கொண்டு நாள் முழுக்க முகவரியைத் தேடி அலைவார்கள். ஆனால், இந்தச் சிறுவனோ, ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நகரிலுள்ள பல இடங்களுக்கும் நேரில் சென்று, எந்தெந்த இடங்களில் எந்தெந்தக் கட்டடங்கள், முக் கியமான இடங்கள், ஆலயங்கள் இருக் கின்றன என்பதைத் தெரிந்துகொள்வான். இரவில் அவைகளை நினைவு கூர்வான். இதனால், மற்ற சிறுவர்களைக் காட்டிலும் இவனால் தந்திகளை விரைவாகக் கொடுக்க முடிந்தது.

சம்பள நாள். எல்லாச் சிறுவர்களும் வரிசையில் வந்தார்கள். ஒவ்வொருவரின் பேரையும் சொல்லி, அவரவருக்குரிய சம்பளத்தை முதலாளி கொடுத்துவந்தார். வரிசையில் இந்தச் சிறுவன் வந்ததும் அவனுக்குச் சம்பளம் கொடுக்காமல், ஓரமாக நிற்கவைத்துவிட்டார். எல்லோரையும் போலவே, இவனும் பயந்துபோனான். தனக்கு இன்றோடு வேலைபோய்விடும் என்று நடுங்கினான்.

கடைசியாக, எல்லோருக்கும் சம்பளத் தைப் பட்டுவாடா செய்துவிட்டு இந்தச் சிறுவனிடம் வந்தார் முதலாளி.

"எல்லாருக்கும் சம்பளமாக ஒரு டாலர்தான் கொடுக்கப்பட்டது. ஆனால், உன் வேலைத் திறமையால் ஒரு நாளைக்குப் பல தந்திகளைக் கொடுத்து உன் தனித்திறமையை வெளிப்படுத்தி வருகிறாய். அதனால் உனக்கு இரண்டரை டாலர் சம்பளம்" என்று பாராட்டி சம்பளத்தைக் கொடுத்தார்.

அந்தச் சிறுவன்தான் பிற்காலத்தில் உலகத்திலேயே மிகப் பெரிய பணக் காரரான ஆன்ட்ரு கார்னஜி எனும் அமெரிக்கர்.

## சுத்தம் சுகம் தரும்

- கவிஞர். சிவநேசன்

ஈக்கள் மொய்த்த பண்டங்களை
உண்ணக் கூடாது - தெரு
ஓரம் விற்கும் பண்டம் வாங்கித்
தின்னக் கூடாது!

காற்று இல்லா இடங்களிலே
வசிக்கக் கூடாது - வயிறு
பசித்திராத நேரந்தன்னில்
புசிக்கக் கூடாது!

கண்ணில் கண்ட நீரையெல்லாம்
குடிக்கக் கூடாது - குடித்து
காய்ச்சல் சளி நோய்கள் வந்து
துடிக்கக் கூடாது!

ஒதுக்குப் புறம் குப்பைக் குழி
வெட்டிட வேண்டும் - அதில்
ஒழுங்குடனே குப்பைக் கூளம்
கொட்டிட வேண்டும்!

குழிகள் வெட்டி சாக்கடை நீர்
கழித்திட வேண்டும் - தினம்
மருந்தடித்து ஈக் கொசுவை
ஒழித்திட வேண்டும்!



"பள்ளிக்கூடம் போற துன்னா தினமும் ஒரு பென்சில் வேணும்கிறா என் மகள்; என்ன பண்றது?"

"அது பரவாயில்லையே! என்னோட மகன் தினமும் ஒரு பள்ளிக்கூடம் வேணும்கிறானே என்ன பண்றது?"

## சொல்லுங்கள் பார்க்கலாம்

- க. நஞ்சையன்

1. வால் இல்லாப் பறவை
ஊர் ஊராய்ப் பறக்குது

2. இடுக்கு முடுக்குக்குள்ளே
எண்ணூறு தென்னம்பிள்ளை!
(அது என்ன?)

3. பச்சை பச்சை டாக்டர்
பால்பால் டாக்டர்
குண்டுமணி டாக்டர்
குதிரைவால் டாக்டர்!
(அது என்ன?)

4. தொட்டுக் கெட்டான் ஒருத்தன்
தொடாமல்கெட்டான் ஒருத்தன்
விட்டுக்கெட்டான் ஒருத்தன்
விடாமல் கெட்டான் ஒருத்தன்!
(அது என்ன?)

5. மூடியைத் திறந்தேன்
முருகனைக் கண்டேன்!
(அது என்ன?)


6. வெள்ளைப் பிள்ளையார் கோயிலுக்குப்
பூட்டும் இல்லை திறப்பும் இல்லை!
(அது என்ன?)

7. இரண்டு புடைக்கிறது
நான்கு குத்துகிறது
ஒன்று துழாவுகிறது!
(அது என்ன?)

விடைகள்: 1. வானூர்தி 2. மூக்கு 3. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை

விடைகள்: 4. பத்மாசுரன், கீசகன், மகாபலி, இராவணன் 5. நிலக்கடலை 6. பற்கள் 7. யானை

மாணவர் பக்கம்



# அறிவியல் துளிகள்

## உயரமான சிலை!

உலகிலேயே மிக உயரமான சிலை ரஷ்யாவில் உள்ள மமாயெவ் எனும் மலையில் அமைக்கப்பட்டுள்ள மதர்லேண்ட் என்று அழைக்கப்படும் பெண் உருவச்சிலை ஆகும். இது 270 அடி உயரம் கொண்டது. இதை எவ்ஜெனி உச்பிச் எனும் நிபுணர் 1987 ஆம் ஆண்டு அமைத்தார்.

## திட்டவிடம்!

கம்பராமாயணத்தில் கம்பர், பார்வையாலேயே விஷத்தைக்கக்கும் திட்டவிடம் என்ற பாம்பைப்பற்றிக் குறிப்பிடுவார். ஆனால், ஆப்பிரிக்காவைச்சேர்ந்த ஒரு வகை கருநாகம் 8 அடி தூரத்துக்கு விஷத்தைப் பீச்சியடித்து இரையை வலுவிழக்கச் செய்யும் ஆற்றல் உள்ளது.

## எண்ணெயும் தண்ணீரும்!

எண்ணெயும், தண்ணீரும் ஒன்றோடு ஒன்று ஒட்டாது ஆனால் அந்தக் கலவைக்குள் ஒரு சோப்புத்துண்டைப் போட்டுப்பாருங்கள். அவ்வளவுதான் இரண்டும் ஐக்கியமாகிவிடும்.

## நான்கு நோபல் பரிசுகள்!

மேரிகியூரி என்ற விஞ்ஞானியின் குடும்பத்தில் கணவரும் மனைவியும் நோபல்பரிசு பெற்று புகழ்பெற்றது பலருக்கும் தெரியும். ஆனால் அவர்களுடைய மகள் ஐரின் அணுசக்தி சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து நோபல் பரிசு பெற்றவர். அதுமட்டுமல்ல, ஐரினின் கணவர் ஜோலியட் என்பவரும் அறிவியலில் நோபல்பரிசு பெற்றவர். ஒரே குடும்பத்தில் நான்கு பேர் இத்தகைய பரிசுகளைப் பெற்றமைதான் சிறப்புக் குரியதாகும்.

## முதல் தமிழ் வானொலி!

வெளிநாட்டு வானொலி நிலையங்களில் தமிழுக்கு இடம் கொடுத்த முதல் வானொலி போப்பாண்டவர் இருக்கும் வாடிகன் வானொலி நிலையம் ஆகும்.



## தேள்விஷம்!

தேள் ஒரு விசித்திரமான பிராணி. இது மற்ற பிராணிகளுடன் சேராமல் தனித்து வாழ்வதில் விருப்பம் கொண்டுள்ளது. பெண்தேள் கொடூரமான குணம் கொண்டது. உடலுறவு முடிந்ததும் அந்த ஆண்தேளையே ஈவிரக்கமின்றிக் கொன்று தின்றுவிடும். பசி வந்தால் தன்னுடைய குஞ்சுகளைக்கூட உணவாக சாப்பிட்டுவிடும். தேளின் விஷம் மருத்துவத்துறையில் பெரிதும் பயன்படுகிறது. விலையும் அதிகம்.

## ஒரே ஒரு முறைதான்!

காலில் காதுள்ள உயிரினம் வெட்டுக்கிளி, கொம்பில் கண் உள்ள உயிரினம் நத்தை. தேனீயால் ஒரு முறைதான் தன்வாழ்நாளில் கொட்டமுடியும்.

## நீரிழிவுக்கு மருந்து!

நீரிழிவு நோயாளிகள் அடிக்கடி பப்பாளிப்பழம் அல்லது நாவல் பழம் சாப்பிட்டுவந்தால் நோயின் கடுமை நீங்கும்.

## முகப்பரு நீங்க!


பெண்கள் முகத்திற்குப் பவுடர் போடுவதற்கு முன் பன்னீரால் முகம் மற்றும் கழுத்துப்பகுதிகளைக் கழுவிவிட்டு, ஈரம் உலர்ந்தபின் பவுடர் போட்டால்முகம் அதிகப் பொலிவாகவும், பிரகாசமாகவும இருக்கும். முகத்தில் பருக்களும் வராது.

## மாரடைப்பைத் தவிர்க்க!

தினமும் நாம் உண்ணும் உணவில் ஓரளவு மீன் சேர்த்துக்கொண்டால் மாரடைப்பு வியாதி வருவதைத் தடுக்கமுடியுமாம். இதை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

## தரை மினுமினுக்க!

மொசைக் தரையைச் சுத்தம் செய்கிறீர்களா? ஒரு நிமிடம். சுத்தம் செய்யும் நீரில் சில துளி மண்ணெண்ணெய் விட்டுச் சுத்தம் செய்யுங்கள். தரையும் பளபளக்கும். பூச்சிகளும் வரமாட்டா.




## பிரச்சினை

எங்கள் ஊர்ப் பகுதிக்கு மிகவும் அருகாமையிலுள்ள நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலேயே இரண்டாவது பெரிய குளமான மானூர் பெரியகுளம் சுமார் 30 ஆண்டுகளாக வறண்டே காணப்படுகிறது. இக்குளத்துக்கென்று ஒரு அணை கூட நன்றாகக் கட்டப்படவில்லை. இக்குளத்திற்கும் தென்தமிழ் நாட்டின் ஜீவ நதியான தாமிரபரணி நதிக்கும் உள்ள தூரம் சுமார் 22 கி.மீ மட்டுமே! இப்படி மிகவும் அருகாமையில் வற்றாத நதி பாய்ந்து கொண்டிருக்கின்ற போதிலும், எந்த அரசும் ஏங்களது பகுதி மக்களைப் பற்றியோ, விவசாயத்தைப் பற்றியோ கண்டுகொள்வதே இல்லை.

எங்கள் மானூர் பெரியகுளத்தின் சுற்றளவு 10 சதுர மைல்கள். பயனடையும் நஞ்சையின் பரப்பு சுமார் 3,000 ஏக்கருக்கு மேலாக. நெல் உற்பத்தியின் அளவு சுமார் 4500 மெட்ரிக்டன்கள்.

இப்படிப்பட்ட மானூர் பெரியகுளத்திற்கு வெள்ள நேரங்களில் மட்டுமாலது தாமிரபரணி நீர் வர ஏற்பாடு செய்து தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

-ஊர்ப்பொதுமக்கள்,
மானூர்.

## தீர்வு

திருநெல்வேலி வட்டம், மானூர் பெரியகுளத்திற்குத் தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு செல்வதற்காக ரூ. 43 கோடிக்குப் பொதுப்பணித் துறையினரால் திட்ட மதிப்பீடு தயார் செய்து அருசுக்கு அனுப்பப்பட்டு, இத்திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

-டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி கட்டபொம்மன்
மாவட்டம்.

## பிரச்சினை

தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் தொகுதி கீரப்பாளையம் ஒன்றியம் ஒரத்தூர் காவல் சரகம் வாழைக்கொல்லை கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகன் ராஜாராமன், பழனிவேல் காவலர் மகன் ராஜேந்திரன், முருகன் ஆகிய மூவரும் வாழைக்கொல்லை அங்காளம்மன் கோயில் அருகில் கள்ளச்சாராயம் விற்பனை செய்து கொண்டு எங்கள் ஊர் மக்களுக்குத் தீங்கு விளைவிக்கின்றனர். எங்கள் ஊர்ப் பள்ளி மாணவிகள் சிறுநீர் கழிக்கும் இடத்தில் இந்தக் கொடுமையான செயல் நடைபெறுகின்றது. இந்தச் செயலுக்கு ஒரத்தூர் உதவி ஆய்வாளர் பூமாலைதான் காரணம். இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

-வாழைக்கொல்லை
பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள்.

## தீர்வு

இம்மனுவில் கூறப்பட்ட திரு. ராஜாராமன் என்பவர் மீது ஒரத்தூர் காவல் நிலைய கு.எண்.224/96, நாள் 19.7.96 மற்றும் கு.எண்.272/96, நாள் 12.9.96 ஆகியவற்றில் கள்ளச்சாரயம் விற்றமைக்காகத் தமிழ்நாடு மதுவிலக்கு அமல் சட்டப்படி 41 - எ பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் கு.எண்.186/96, நாள் 24.6.96ல் திரு. ராஜேந்திரன் என்பவர் மீதும் மேற் குறிப்பிட்ட பிரிவின் கிழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கள்ளச்சாராய விற்பனை நடைபெறாமல் மேற்படி கிராமத்தில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மனுவில் குறிப்பிட்டவாறு முருகன் என்பவர் எவரும் வாழைக்கொல்லை கிராமத்தில் சாராய விற்பனை செய்யவில்லை. மேலும் ஒரத்தூர் காவல் நிலையத்திலிருந்த உதவி ஆய்வாளர் திரு.பூமாலை என்பவர் ஏற்கெனவே மாற்றப்பட்டுவிட்டார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

-டி.வி.ரவிச்சந்திரன், இ.கா.ப.
காவல்காணிப்பாளர்,
தென்னார்க்காடு வள்ளலார்
மாவட்டம், கடலூர்.

## பிரச்சினை

புதுக்கோட்டையில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி ஒன்று உள்ளது. இது குளம் ஒன்றின் அருகில் உள்ளது. இதன் ஒரு பகுதியில் மட்டும் வீடுகள் உள்ளன. மற்ற பகுதிகளில் குளத்தின் திடல் காணப் படுகிறது. இவ்விடுதி ஆரம்பித்த ஆண்டு முதல் இதற்குப் பாதுகாப்பே கிடையாது. மதில்சுவரில் திருடர்கள் ஏறிக்குதித்து உள்ளே சென்று மாணவிகளைக் களங்கப் படுத்த முயற்சி செய்வதும், திருடிச் செல் வதும் பலமுறை நடந்து வருகின்றது. இவ்வாறு நடந்த மறுநாள் அதிகாரிகள் சென்று இதற்குக் காரணம் மாணவிகள் தான் என்று மாணவிகள் மேல் குற்றம் சுமத்திவிட்டு, நான்கைந்து நாட்களுக்கு மட்டும், காவல்துறைப் பாதுகாப்பு அளிக்கின்றனர்.கடந்த நவம்பர் 22ஆம் தேதியன்றும் இவ்வாறு நடந்துள்ளது. மேலும் விடுதியில் காப்பாளர், உதவி யாளர், வாட்ச்மேன்கள் யாரும் தங்குவது இல்லை. எனவே, மாணவிகளும், பெற்றோர் களும் எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பீதியில் இருக்கின்றனர். இதனால் இரவில் படிக்க முடிவதில்லை. எனவே, இது குறித்து மாண்புமிகு முதல்வரும், ஆட்சித் தலைவரும் தக்க நடவடிக்கை மேற்கொண்டு மாணவிகளுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

-பொதுமக்கள், மாணவிகள்,
பெற்றோர்கள், புதுக்கோட்டை
மாவட்டம்.

## தீர்வு

புதுக்கோட்டை அரசினர் பள்ளி மாணவியர் விடுதியில் கடந்த 13.11.96 அன்று இரவு 1 மணிக்கு அடையாளம் தெரியாத இரண்டு ஆண்கள் காம்பவுண்டு சுவர் ஏறிக் குதித்து மாணவியர்களைப் பயமுறுத்தியதாகவும், விடுதிக்குப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவும், சம்பந்தப்பட்ட விடுதிக்காப்பாளர் மனுச் செய்ததின் பேரில் இச்சம்பவம் குறித்து போலீஸ் துறையினர் மூலம் தனி வட்டாட்சியர் மூலமும் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவும் மேற்கொள்ளப்பட்டன.

காவல்துறை மூலம் தினசரி இரவு நேரங்களில் ரோந்துப் பணியில் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவும் எடுக்கப்பட்டு சட்டம் ஒழுங்குப்பிரச்சினை ஏற்படாதவாறு சரிசெய்யப்பட்டன. மேலும் அந்த விடுதிப் பணியாளர்களை விழிப்புடன் செயல் படவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-மு.கிருஷ்ணன்,
மாவட்ட ஆதி திராவிடர் நல
அலுவலர் (பொ)
புதுக்கோட்டை.

## பிரச்சினை

எங்கள் கிராமம் சுமார் 3000 மக்கள் தொகை கொண்டது. எங்கள் ஊருக்குப் பகுதிநேர நூலகம் வேண்டும் என்று ஏற்கெனவே மாவட்ட நூலகத் தலைவர் அவர்களுக்கு ஒரு மனு கொடுத்தபோது அவர்கள் ஐந்து நிபந்தனைகள் அளித் தார்கள். அவைகளைப் பூர்த்தி செய்து மீண்டும் மனு அனுப்பிவைத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தப் பிரச்சினையில் நீங்கள் தலையிட்டு எங்கள் ஊருக்குப் பகுதி நேர நூலகம் அமைத்துத்தர வழி செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.


-கோ. முனிரத்தினம்.,
சதுப்பேரிபாளையம்.

## தீர்வு

ஆரணி தாலுக்கா சதுப்பேரிபாளையம் கிராமத்தில் 9.9.96ஆம் நாளன்று பகுதி நேர நூலகம் துவக்கப்பட்டது. பகுதிநேரப் பணியாளராக சதுப்பேரி பாளையம் திரு. ஜெயசிம்மன் என்பவர் எண் 1084/இ/96, நாள்6.9.96ன் படி, நியமனம் செய்யப்பட்டார்.

அவர் நூலகத்தை முறைப்படி திறந்து செயல்படுத்த வில்லை என்று ஆரணி நூலகர் தெரிவித்த தகவலின் பேரில் திரு. ஜெயசிம்மன் பகுதி நேரப் பணியாளர் பணியிலிருந்து நீக்கப்பட்டார். எனவே அப்பகுதி நேர நூலகத்தைத் தொடர்ந்து செயல்படுத்த வேறு பணியாளரை நியமனம் செய்யத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அன்புன் தெரிவித்துக்கொள்கிறேன்.

-ல. ஜெயச்சந்திரன்,
மாவட்ட நூலக அலுவலர்,
திருவண்ணாமலை.



### பிரச்சினை

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் வந்தவாசி தாலுக்காவில் உள்ள பெரணமல்லூராகிய எங்கள் ஊர் ஒரு பேரூராட்சியாகும். சட்டமன்றத் தொகுதியின் தலைமையிடமாகவும் ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிட மாகவும் உள்ளது. இது கேட்பதற்கு நன்றாக இருக்கலாம். ஆனால், வசதிகள் மிகவும் குறைவு.

பெரணமல்லூரிலிருந்து தாலுக்கா தலைமையிடமாகிய வந்தவாசிக்குச் சென்றுவர போதிய பஸ் வசதி இல்லை. ஒரே ஒரு டவுன்பஸ் மட்டுமே செல்கிறது. மாவட்டத் தலைமையிடமான திருவண்ணா மலைக்கும் ஒரு பஸ் மட்டுமே பெரண மல்லூர் வழியே செல்கிறது. பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகப் பொதுமக்கள் தாலுக்கா அலுவலகம் செல்ல வேண்டு மானால் 3 கீ.மீ. தொலைவிலுள்ள சடத் தாங்கல் இணைப்புச் சாலைக்குச் சென்று தான் பஸ் பிடிக்க வேண்டும். ஆரணி வந்த வாசிக்கு இடையிலுள்ளது சடத்தாங்கல்-பெரணமல்லூர் இணைப்புச் சாலை.

இப்பிரச்சினை தீர, பொதுமக்கள் பல முயற்சிகள் மேற்கொண்டும் மாறியது ஆட்சிகளே ஒழிய பிரச்சினை தீரவில்லை. பல அதிகாரிகள் மாறிவிட்டார்கள். பஸ் விட்ட பாடில்லை. எனவே, நம்பிக்கை தரும் புதிய தமிழக அரசு பிரச்சினையின் தன்மையை உணர்ந்து ஆரணி-வந்தவாசி மார்க்கமாகச் செல்லும் பேருந்துகளைப் பெரணமல்லூருக்குள் விட்டு அஸ்தினாபுரம் மார்க்கமாக மீண்டும் ஆரணிவந்தவாசி சாலையை அடைய ஆவன புரிய வேண்டும். இப்படி பஸ் செல்வதால் 0.5 கி.மீ. தான் கூடும். குறைந்தபட்சம் அரசு பேருந்துகளை யாவது ஆரணிபெரணமல்லூர்-வந்தவாசி மார்க்கத்தில் விட ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் திருவண்ணாமலைக்குப் பெரணமல்லூர்-சேத்துப்பட்டு திருவண்ணா மலை மார்க்கத்தில் தனி பஸ் விட வேண்டும்.

-பெரணமல்லூர் சேகரன்.

### தீர்வு

ஆரணி-வந்தவாசி செல்லும் பேருந்துகளைப் பெரணமல்லூர் அஸ்தினாபுரம் வழியாக இயக்கவும் திருவண்ணாமலை பெரணமல்லூர் வழி சேத்துப்பட்டு தடத்தில் போதிய பேருந்து வசதி ஏற்படுத்தி இயக்கவும் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு, பொது-மேலாளர், பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், வேலூர் அவர்கள் அனுமதிச்சீட்டு வேண்டி விண்ணப்பித்த உடன் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவு பெற்று அனுமதிச் சீட்டு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

-தி. சிவசுப்பிரமணியன்
வட்டாரப் போக்குவரத்து அலுவலர்,
திருவண்ணாமலை.

### பிரச்சினை

நாகை காயிதே மில்லத் மாவட்டம் சீர்காழியில் தமிழக அரசின் கிளை நூலகம் உள்ளது. இது இரண்டாம் நிலை நூலக மாகும். அதன்படி நூலகத்தில் மொத்தம் மூன்று நூலக ஊழியர்கள் பணியாற்ற வேண்டும். ஆனால் கடந்த பல ஆண்டு காலமாக சீர்காழி கிளை நூலகத்தில் ஒரே ஒரு நூலகர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார். இந்த ஒரு நூலகர் தனக்குரிய நீண்ட நாள் விடுமுறை மற்றும் மருத்துவ விடுமுறையில் சென்றுவிட்டால் நூலகம் காலவரம்பின்றிப் பல நாட்கள் இழுத்துப் பூட்டப்படுகிறது. இதனால் பொதுமக்கள், நூலக வாசகர்கள் கிளை நூலகத்திற்கு வந்து நூலகம் பூட்டப் பட்டுள்ளதைக் கண்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்புகிறார்கள். தினசரி நாளிதழ்கள், வார, பருவ இதழ்கள், புத்தகங்களைப் படிக்க முடியாமல் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது.

மேலும், கிளை நூலகத்தில் வாசகர்கள் அமர்ந்து படிக்கப் போதுமான நாற்காலிகள், மேஜைகள் இல்லை. புத்தகங்களை படிக்கும் இடத்தில் இருந்த 'டியூப்லைட்' எரிய வில்லை. புதிய விளக்குப் போடவேண்டும்.

சீர்காழி கிளை நூலகம் இன்னமும் தஞ்சாவூர் மாவட்ட நூலக அலுவலரின் ஆணையின்படியும், கண்காணிப்பின்படியும் இருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து நாகை காயிதேமில்லத் மாவட்டம் என்று தனியாக மாவட்டம் பிரிக்கப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. ஆனாலும், நாகை காயிதேமில்லத் மாவட்டத் தலை

நகரான நாகப்பட்டிணத்தில் மாவட்ட நூலக அலுவலகம் அமைக்கப்படவில்லை. ஏனவே, உடனே மாவட்ட நூலக அலுவலகத்தை நாகப்பட்டிணத்தில் அமைத்து, புதிய மாவட்ட நூலக அலுவலரை நியமனம் செய்யவேண்டும்.

சீர்காழி கிளை நூலகத்திற்கான சொந்த நிலம் இல்லை. கிளை நூலகத்திற்காக சீர்காழி நகராட்சி நிலம் ஒதுக்கிக் கொடுக்க முன் வந்தும் நூலக நிர்வாகம் நிலத்தை வாங்கவில்லை. இதனால், சீர்காழி கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதில் முட்டுக் கட்டை எழுந்துள்ளது. இந்தச் சிக்கலையும் தீர்க்க வேண்டும்.

மேற்கண்ட இந்த சீர்காழி கிளை நூலகப் பிரச்சினைகளை, பொது நூலகத்துறை இயக்குநர் தீர்த்து வைக்க வேண்டுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

-ஆர். ராஜதுரை,
சீர்காழி.

## தீர்வு

1. கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை அரசாணை எண்.1டி110 நாள்.13.9.96இன்படி நாகப் பட்டிணத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு, நாகப் பட்டிணம் காயிதேமில்லத் நூலக ஆணைக்குழு செயல்பட்டு வருகிறது.

2. நாகப்பட்டணம் நூலக ஆணைக் குழுவில் உள்ள சீர்காழி கிளைநூலகம் பி-கிரேடு நூலகமாகும். நூலகம் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

3. நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாவட்ட நூலக அலுவலர் நடவடிக்கை எடுத்து நகராட்சி அலுவலகத்துடன் கடிதப் போககுவரத்துள்ளது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. வாசகர்களுக்குத் தேவையான அனைத்து அடிப் படை வசதிகளும் செய்து தருவதற்கு மாவட்ட நூலக அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

-இரா. கண்ணன்,
பொது நூலக இயக்குநர்.

## பிரச்சினை

எங்கள் ஊர் கரூர் தீரன் சின்ன மலை மாவட்டம் குளித்தலை தாலுக்கா கடவூர் ஊராட்சி ஒன்றியம். இவ்வொன்றியத்தில் அமைந்துள்ள கடவூர் என்ற கிராமம் இவ்வூரைச் சுற்றிலும் 15 சிற்றூர்களுக்கு மேல் உள்ளன. பல்வேறு சிற்றூர்களை ஒன்றாக இணைக்கும் தார்ச்சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதன் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலங்கள் காட்டாற்றினால் அரிக்கப்பட்டு மிகப் பெரிய குழிகள்; அதில் மழை நீர் தேங்கியுள்ளது. அதில் மண்ணைக் கொட்டி சகதியாக உள்ளது. தார்ச்சாலையில் உள்ள ஜல்லிக் கற்கள் பெயர்ந்து மேடு பள்ளமாக உள்ளது. பள்ளத்தில் மண்ணைக் கொட்டி நடக்க முடியாத நிலையில் வயல் போல் தண்ணீர் தேங்கியுள்ளது. தினசரிப் பயணிகள், பள்ளிக் குழந்தைகள் செல்ல வேண்டியுள்ளது. மேலும் கடவூர் பகுதியில் பொதுக்கழிப்பிடம் இல்லாததால் சாலையின் இருபுறங்களிலும் மலம் கழிக்கின்றனர். இது சுகாதாரக் கேட்டை விளைவிக்கின்றது. இதனால் கொசு, ஈக்கள் மூலம் நோய்கள் பரவுகின்றன. கடவூரரில் அமைந்துள்ள ஆரம்பப் பள்ளியில் குடி தண்ணீர், தோட்டத்திற்கு நீர் இல்லாததால் பள்ளிக் குழந்தைகள் பள்ளியை விட்டு வெளியே சென்று நீர் எடுத்து வரவேண்டியுள்ளது. பள்ளிக்குக் குடிநீர்க் குழாய், ஊர் மக்கள் நலம் கருதி சாலை, கழிப்பிடம் வசதி செய்து தர ஆவன செய்யும்மாறு மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்

-ப. கண்மணி,
தரகம்பட்டி வழி,
கரூர் மாவட்டம்

## தீர்வு


கடவூர் கிராமத்தையும் பல சிற்றூர்களையும் இணைக்கும் இத்தார்ச்சாலையில் உள்ள தொடிகள் மூடப்பட்டும், மேடு பள்ளங்கள் சரி செய்யப்பட்டும் போக்கு வரத்திற்கு ஏற்றதாகச் செப்பனிடப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ப. கணேசன்,
உதவி கோட்டப் பொறியாளர், குளித்தலை.

கடவூர் ஆரம்பப் பள்ளிக்கு மத்திய ஊரகக் கழிப்பறைத் திட்டத்தின் கீழ் பெண்களுக்கான கழிப்பிடம் கட்ட ரூ.10,500 திட்ட கருத்துரு தயாரிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பள்ளிக்குக் குடிநீர் மற்றும் தோட்டத்திற்கென 2 ஆழ்குழாய்க் கிணறு போர்வெல் போட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு திட்டம்செயல்பட உள்ளதுஎன்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

-அ. அம்மையப்பன்,
ஆணையர்,
கடவூர் ஊராட்சி ஒன்றியம், தரகம்பாடி.

# ஈமெயில்



செய்தித் தொடர்பில், விஞ்ஞானத்தின் வேகமான வளர்ச்சியில் உருவாகி இருப்பது தான் 'ஈமெயில்'. அஞ்சல் தந்தி, டெலக்ஸ், பேஃக்ஸ் வரிசையில் அண்மை ஆண்டுகளில் புதிதாக சேர்ந்துள்ள செய்தித் தொடர்புச் சாதனம் 'ஈமெயில்'.

Electronic Mail என்பதன் சுருக்கமே இந்த 'ஈமெயில்'. கணிப்பொறி வைத்திருக்கும் இருவருக்கிடையே – அல்லது கணிப்பொறியின் இரு முனைகளுக்கிடையே நடக்கும் செய்திப் பரிமாற்றமே 'ஈமெயில்' எனலாம்.

வெளிநாடுகளில் இருக்கின்ற உங்களுடைய உறவினருக்கு நீங்கள் தூங்கப் போகும் முன்பு உங்களுடைய கணிப்பொறி மூலம் செய்தி அனுப்பினால், நீங்கள் உறங்கி விழிக்கும்போது, உங்களுக்கு அதற்காக அவர்கள் தந்த பதில் தயாராக இருக்கும்.

அவ்வளவு வேகமாகக் கணிப்பொறியின் இரு முனைகளுக்கிடையே செய்திகள் பரிமாறப் படும்.

இந்த 'ஈமெயில்' தலைப்பு, கடித உடலமைப்பு என்ற இரு பாகங்களை உடையது ஆகும்.

முதலாவதாக- தலைப்பில் யாரிடமிருந்து யாருக்குச் செய்தி அனுப்பப்படுகிறது என்ற செய்தியும், எழுதப் போகும் விஷயங்களுக்கு ஏற்ப ஒரு சிறிய தலைப்பும் உடையதாக இருக்கும்.

வீட்டின் முகவரி போல் 'ஈமெயில்' வசதி உள்ளவர்களுக்கும் தனி முகவரி இருக்கிறது. ஆனால் அஞ்சலில் எழுதும் வீட்டின் இலக்க எண், தெருப் பெயர் போன்றவை இந்த முகவரியில் இருக்காது. 'ஈமெயிலின்'- முகவரி ஆங்கில எழுத்துக்களைக் கொண்டதாக இருக்கும்.


இரண்டாவதாக, அதன் உடலமைப்பில் நாம் அவருக்குத் தெரிவிக்க விரும்பும் செய்தியைக் கணிப்பொறியில் டைப் செய்து அனுப்பலாம்.

கணிப்பொறி வைத்திருக்கின்ற இரு நபர்களுக்கிடையே மட்டுமே இதுவரையில் நடந்து வந்த இந்தச் செய்திப் பரிவர்த்தனையை, 'டேட்டாபுரோ இன்பர்மேஷன் டெகனாலஜி லிமிடெட்' என்ற நிறுவனம் 'எஸ்டிடி.பூத்' வைத்திருப்பதுபோல் 'ஈமெயில் பூத்' அமைக்கவும் வழிவகை செய்கிறது.

வேலையில்லாத இளைஞர்கள் முழு நேரத் தொழிலாகவே இதனைச் செய்யலாம். 'டேட்டாபுரோ ஈமெயில்' சேவைத்திட்டம் 'ஸீமெயில்' என்றும் அழைக்கப்படுகிறது. 'ஸீமெயில்' மையங்களை விருப்பமுள்ளவர்கள் யார் வேண்டுமானாலும் துவங்கலாம்.

இதுபோன்ற 'ஸீமெயில்' மையங்களின் மூலம், 'எஸ்.டி.டி.பூத்' போன்ற கணிப்பொறி இல்லாதவர்களும், 'ஈமெயில்' மூலம் செய்திகள் அனுப்பவும், பெறவும் முடியும்!

-ஆர். மகேஷ்



ஆசிரியரும் வெளியிடுபவரும்: என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

துணை இயக்குநர்: ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர்: எம்.அண்ணாமலை

ஆசிரியர் குழு: கேடி. புகழேந்தி, ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அமதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி.பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா

ஓவியர்கள்: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி

முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# ஆசிரியர் மடல்

'அச்சம் தவிர்ந்தது வாழ்வு - நல்
அன்பில் விளைவது வாழ்வு!'

- என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

ஆனால் பத்துப் பன்னிரண்டாண்டுக் காலமாக, அந்தப் பாடலடிகள் சொல்லும் கருத்து, நாட்டில் பழுதுபட்டு வருவது போல் தோன்றுகிறது.

அதிலும் குறிப்பாக அண்மைக் காலமாக- அரசுக்கு அவப்பெயர் உண்டாக்கும் நோக்கிலேயோ என்னவோ சாதிமதப் பாகுபாடுகள், மதக் கலவரங்கள், அவற்றின் அடிப்படையிலான அடிதடிகள், கொள்ளையிடல் என்று போய்க் கொலை வரையிலான சம்பவங்கள் அங்கொன் றும் இங்கொன்றுமாக நடந்துவிடுகின்றன!

இந்துவானாலும், முஸ்லீமானாலும், கிறித்துவரா னாலும் சகோதரபாசத்தோடு பழகும் உறவுமுறை சில சமூக விரோத சக்திகளால் திட்டமிட்டே ஊனப்படுத்தப் பட்டு வருவது போல் தெரிகிறது; சட்டமன்றத்தில், சென்ற முதல் தேதியன்று- கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 'இவைகளையெல்லாம் தடுத்து நிறுத்தவேண்டிய பெரும் பொறுப்பு, அரசுக்கு மாத்திரமல்ல; இந்த அரசை ஒழுங்குற நடத்துகின்ற பொறுப்பை ஏற்றிருக்கும் எதிர்க் கட்சி களுக்கும் உண்டு' என்று அறிவுறுத்தியிருக்கிறார்.

இவ்வித அசம்பாவித நிகழ்ச்சிகளைத் தவிர்க்கும் பொருட்டும், மாவட்டங்களில் சாதிமதக் கலவரங்கள் ஏற்படாவண்ணம் கண்காணிக்கவும் அனைத்து மாவட்டங் களிலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், மத நல்லிணக்கக் குழு (Peace Committee) ஒன்றினை உடனடியாக அமைக்குமாறும் ஆணையிட்டுள்ளார்.

பேச்சுக்குப் பேச்சு, கொள்கைக்குக் கொள்கை, கருத்துக்குக் கருத்து என்றில்லாமல் - அவரவரும் சட்டத் தைக் கையிலெடுத்துக் கொள்ளுவதை யார்தான் அனுமதிப் பார்கள்? பகுத்தறிவு கொண்ட மனிதர்களாகிய நாம் பண்போடு நடக்கப் பழகுவோம். எங்கும் அமைதி நிலவ உதவுவோம்!



தூய
பட்டு

தூய
சரிகை




ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

